# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs(Tamil) – August 2021

© **Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்



வரலாறு 01




28 அரசியல் அறிவியல்



புவியியல் 29





30 பொருளாதாரம்



அறிவியல் 38

தமிழ்நாடு 44




68 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 75





93 சர்வதேச நிகழ்வு

# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஆகஸ்ட் 1 முதல் 7 | உலக தாய்ப்பால் வாரம் | ▪ உலக தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 முதல் 7 வரை யுனிசெப்பால் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ 22021ம் ஆண்டிற்கான மையக்கருத்து "Protect Breastfeeding: A Shared Responsibility". |
| ஆகஸ்ட் 6 | ஹிரோஷிமா தினம்: அணுகுண்டிற்கு எதிரான தினம் | ▪ 1945ம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அமெரிக்காவால் லிட்டில்பாய் மற்றும் பேட்மேன் என்ற இரண்டு அணுகுண்டுகள் இரண்டாம் உலக போரின் இறுதியில் வீசப்பட்டதன் நினைவாக ஆண்டுதோறும் ஆகஸ்ட்–6ல் அணுகுண்டிற்கு எதிரான தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஆகஸ்ட் 7 | தேசிய ஈட்டி எறிதல் தினம் | ▪ இனிவரும் காலங்களின் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் – 7ம் நாள் தேசிய ஈட்டி எறிதல் தினமாக கொண்டாடப்படும் என தேசிய தடகள கூட்டமைவு அறிவித்துள்ளது. |
| ஆகஸ்ட் 8 | வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் | ▪ 1948ம் ஆண்டில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 79வது ஆண்டு விழா இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 8ல் வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| | காஞ்சிபுரத்தில் கைத்தறி கண்காட்சி தொடக்கம் | ▪ 7–ஆவது தேசிய கைத்தறி தின விழாவை முன்னிட்டு கைத்தறிக் கண்காட்சி தொடக்க விழா மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்டம் உதவிகள் வழங்கும் விழா ஆகியன நடைபெற்றது. |
| ஆகஸ்ட் 9 | சர்வதேச உள்நாட்டு மக்கள் தினம் | ▪ உலக அளவில் அந்தந்த நாட்டின் பூர்வகுடிகள் தினம் ஆண்டுதோறும் ஆகஸ்ட்–9ல் 1994ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படுகிறது.<br>▪ 2021ம் ஆண்டு மையக்கருத்து – "Leaving no one behind: Indigenous peoples and the call for a new social contract." |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஆகஸ்ட் 9 | நாகசாகி தினம் | ▪ ஜப்பானின் நாகசாகியில் 9–ஆகஸ்ட் 1945ல் பேட் மேன் (Fatman) என்ற அணுகுண்டு ஏவப்பட்டு தாக்குதலுக்கு உள்ளான தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9ல் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஆகஸ்ட் 12 | சர்வதேச இளைஞர் தினம் | ▪ 1999ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படுகிறது.<br>▪ மையக்கருத்து – Transforming Food Systems: Youth Innovation for Human and Planetary Health. |
| ஆகஸ்ட் 12 | உலக யானைகள் தினம் | |
| ஆகஸ்ட் 13 | உலக உடல் உறுப்பு தான தினம் | ▪ உடல் உறுப்பு தானம் குறித்த மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப்படுகிறது. |
| 16.08.2021 | பார்சி புத்தாண்டு | ▪ பார்சி புத்தாண்டான நவ்ரோஜ் பண்டிகையை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.<br>▪ பார்சி மக்களின் புத்தாண்டான நவ்ரோஜ் திங்கள்கிழமை (ஆகஸ்ட் 16 கொண்டாடப்பட்டது. பாரசீகம் என்று கூறப்படும் இப்போதைய ஈரானின் பூர்வகுடிமக்களான பார்சிகள், முஸ்லிம்கள் படையெடுப்பால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அக்காலகட்டத்தில் அவர்கள் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்தனர். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் இந்தியாவில் தொழில், வணிகத்தில் பார்சி மக்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர்.<br>▪ பார்சி புத்தாண்டை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள சுட்டுரைப் பதிவில், 'பார்சி புத்தாண்டு வாழ்த்துகள். இந்த ஆண்டில் மகிழ்ச்சியும், வளமையும், நல்ல ஆராக்கியமும் நிறைந்திருக்க பிராத்திக்கிறேன். |
| 19.08.2021 | உலக மனிதபிமான தினம் | ▪ மையக்கருத்து – Th HumanRace: a global challenge for climate action in solidarity with people who need it the most. |
| 22.08.2021 | உலக சமஸ்கிருத தினம் | ▪ உலக சமஸ்கிருத தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். சமஸ்கிருத மொழியில் சுட்டுரையில் தமது வாழ்த்துகளை அவர் மக்களிடம் பகிர்ந்துள்ளார்.<br>▪ கடந்த 1969–ஆம் ஆண்டு முதல் உலக சம்ஸ்கிருத தினம் ஆகஸ்ட் 22–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் இந்த நாளில் அந்த மொழியை மேம்படுத்துவதற்கான கருத்தரங்குகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. |

# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி கப்பல் சோதனை ஓட்டம்

- முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க் கப்பலான 'விக்ராந்த்' சோதனை ஓட்டம் கொச்சியையொட்டிய கடல் பகுதியில் தொடங்கப்பட்டது.
- மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தச் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டிருப்பது இந்திய கடற்படையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.
- இதன் மூலம், ஒருங்கிணைந்த நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மிகப்பெரிய விமானம் தாங்கி போர்க் கப்பலை முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைத்து, கட்டுமானத்தையும் மேற்கொள்ளும் திறன் கொண்ட குறிப்பிட்ட சில நாடுகளின்பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.
- சுமார் ரூ. 23000 கோடி செலவில் கட்டமைக்கப்பட்டிருக்கும் இந்த விமானம் தாங்கி போர்க் கப்பல், 40000 டன் எடை கொண்டதாகும். 30 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை தாங்கிச் செல்லும் திறன் கொண்ட இந்த போர்க் கப்பல், விமானம் புறப்பட்டுச் செல்லும் சோதனைகள் முடிந்த பிறகு அடுத்த ஆண்டின் இரண்டாவது பாதியில் இந்திய கடற்படையில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய கடற்படை கப்பல் INS காஞ்சார்

- ஒடிசா மாநிலம் கடற்கரை பாரம்பரிய நகரமான கோபால்பூர் நகரை இந்திய கடற்படை கப்பல் INS காஞ்சார் அடைந்துள்ளது.
- 50வது வங்க தேச சுதந்திர போர், இந்தியாவின் 75வது சுதந்திர தின ஆண்டு மற்றும் ஆசாத் கா அம்ரித் மஹோத்சவ் போன்றவற்றின் நினைவாக இந்த கப்பல் பயணம் செய்கிறது.

## மெய்நிகர் IEEE சர்வதேச மாநாடு

- DRDO தலைவர் Dr.G.சதீஷ்ரெட்டி IEEEயின் சர்வதேச மாநாட்டை மெய்நிகர் முறையில் துவங்கி வைத்தார்.
- பரிசோதனை தூரங்களின் அடிப்படையிலான (Testing Ranging) மாநாடு IEEEயில் நடத்தப்பட்டுள்ளது.

## "விக்ராந்த்" போர்க்கப்பலின் முதல் சோதனை ஓட்டம் வெற்றி

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலான 'விக்ராந்த்' தனது முதல் சோதனை ஓட்டத்தை நிறைவு செய்தது. இந்த சோதனைப் பயணத்தின்போது கப்பலின் செயல்திறன் திருப்தி அளிக்கும் விதத்தில் இருந்ததாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இதுகுறித்து இந்திய கடற்படையின் செய்தித் தொடர்பாளர் விவேக் மத்வால் கூறியதாவது: 262 மீட்டர் நீளம், 62 மீட்டர் அகலம், 59 மீட்டர் உயரம், சுமார் 40000 டன் எடையில் உள்நாட்டிலேயே விக்ராந்த் விமானந்தாங்கி போர்க்கப்பல் உருவாக்கப்பட்டடுள்ளது.

## இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் கூட்டு கடற்படை பயிற்சி

- இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக இருநாடுகளும் இணைந்து கூட்டு கடற்படை பயிற்சியில் ஈடுபட்டன.
- ஐக்கிய அரபு அமீரகம் தலைநகர் அபுதாபியையொட்டிய கடற்பகுதியில் நடைபெற்ற இந்த போர் பயிற்சி தொடர்பாக இந்திய கடற்படை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே அபுதாபியில் 'ஸையத் தல்வார்' கூட்டு கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படை சார்பில் ஐஎன்எஸ் கொச்சி போர்க்கப்பல், இரண்டு ஒருங்கிணைந்த சீகிங் எம்கே 42பி ஹெலிகாட்டர்கள் பங்கேற்றன.

## இந்தியா–சவுதி அரேபியா கடற்படை பயிற்சி

- இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையேயான அல்மொகத் அல்ஹிந்த் கடற்படை பயிற்சி அரபிக்கடல் பகுதியில் நடைபெற்றது.
- ஐக்கிய அரபு அமீரகத்துடன் சமீபத்தில் இந்தியா சயஸ் தலைவர் – 2021 பயிற்சியை நடத்தியிருந்தது.
- இந்தியா தரப்பில் INS கொச்சி கிங்–42B போன்ற கப்பலக்ள் பங்கெடுத்தன.

## நிர்பயா ஏவுகணை

- DRDO ஒருங்கிணைந்த நிர்பயா ஏவுகணையை ஒடிசா மாநிலம் சண்டிபூர் கடற்கரையில் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட இந்த ஏவுகணை மூலம் 200 முதல் 300 கிலோ வரையிலான ஆயுதங்களை கொண்டு சென்று தாக்குதல் நடத்த இயலும்.

## கொன்கன் கடற்படை பயிற்சி 2021

- இங்கிலாந்து கடற்படையுடன் இந்திய கடற்படை இணைந்து நடத்தும் கொன்கன் 2021 பயிற்சியில் இந்தியாவின் INS தபாரும், இங்கிலாந்தின் HMS வெஸ்ட் மினிஸ்டரும் இங்கிலாந்தின் போர்ட் மவுத்தில் பங்கேற்றன.

## போர் விமானங்களைப் பாதுக்காக்க அதிநவீன தொழில்நுட்பம்

- இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானங்களை எதிரி நாட்டு ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில், அதிநவீன "சாஃப்" தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், எதிரி நாட்டு ஏவுகணைகளைத் திசை திருப்பிவிட்டு போர் விமானங்கள் பாதுகாப்பாக தப்பித்துவிட முடியும். இதன் சோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இந்தத் தொழில் நுட்பத்தை போர் விமானங்களில் சேர்க்கும் பணிகளை இந்திய விமானப்படை தொடங்கியுள்ளது.
- இது குறித்து டிஆர்டிஓ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது ஜோத்புர் மற்றும் புணேயில் உள்ள (டிஆர்டிஓ) ஆய்வகங்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த நவீன தொழில் நுட்பம், போர் விமானத்தில் பொருத்தும் வகையிலான 'சாஃப் கேட்ரிட்ஜ் – 118/I' உருவாக்கப்பட்டுள்ளது. அதில்
- சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார்த் துகள் லட்சக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். போர் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது, இந்தத் துகள்களை வெளியேற்றி காற்றில் பறக்க விடுவதன் மூலம், தாக்க வரும் எதிரி நாட்டு ஏவுகணையை ரேடார் உதவியுடன் திசை திருப்பிவிட முடியும்.

## தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா–வியத்நாம் கடற்படை பயிற்சி

- தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா–வியத்நாம் கடற்படைகள் கூட்டாக போர் பயிற்சியில் ஈடுபட்டன. பல்வேறு வளங்களைக் கொண்டுள்ள தென்சீனக் கடல் பகுதியையொட்டி வியத்நாம், பிலிப்பின்ஸ், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உள்ளன. அங்கு பிற நாடுகளைப் பின்தள்ளிவிட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சீனா முயன்று வருகிறது.
- இந்த சூழ்நிலையில் வியத்நாமுடன் இணைந்து இந்தியா அப்பகுதியில் கூட்டுப் பயிற்சி நடத்தியுள்ளது. இப்பயிற்சிக்கு சீனா ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்திய கடற்படையின் ரன் விஜய் ஏவுகணை போர்க் கப்பல், ஐஎன்எஸ் கோரா ஆகியவை இப்பயிற்சியில் பங்கேற்றன.
- வியத்நாமை ஒட்டியுள்ள தென்சீனக் கடல் பகுதியில் எண்ணெய் துரப்பணப் பணிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. எனவே, தென்சீனக் கடல் உரிமை தொடர்பான பிரச்னையில் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது. எனவே, இந்தக் கடற்படைப் பயிற்சி கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- தென்சீனக் கடலில் பெரிய அளவில் ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட வளங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

## ஆகஸ்ட் 26 முதல் "மலபார்" கூட்டு கடற்படைப் பயிற்சி

- நாற்கரக்கூட்டமைப்பு (க்வாட்) நாடுகளான இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவை பங்கேற்கும் 'மலபார்' கூட்டு கடற்படைப் பயிற்சி வரும் 26–ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளது.
- இந்தியா–அமெரிக்கா கடற்படைகள் பங்கேற்ற மலபார் கூட்டுப் பயிற்சியானது கடந்த 1992–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது. கடந்த 2015–இல் இந்தப் பயிற்சியில் ஜப்பான் இணைந்தது. கடந்த ஆண்டு நடைபெற்ற பயிற்சியில் ஆஸ்திரேலியா இணைந்தது.
- நடப்பாண்டுக்கான மலபார் கூட்டு கடற்படைப் பயிற்சி அமெரிக்காவின் குவாம் தீவில் வரும் 26–ஆம் தேதி முதல் 29–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தப் பயிற்சியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கடற்படைக் கப்பல்கள் பங்கேற்கின்றன.

- பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக், காட்மாட் ஆகியவை குவாம் தீவை அடைந்தன. கூட்டுப் பயிற்சி குறித்து இந்தியக் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் விவேக் மத்வால் கூறுகையில், "நாடுகளுக்கு இடையேயான இயங்கு தன்மையை மேம்படுத்தவும், சிறந்த செயல்முறைகளைக் கற்றுக்கொள்ளவும், கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடைமுறைகளில் பரஸ்பர புரிதலை வளர்த்துக் கொள்ளவும் இந்தப் பயிற்சி உதவும்.

## ராணுவத்தில் 5 பெண் அதிகாரிகளுக்கு "கர்னல்" பதவி உயர்வு

- இந்திய ராணுவத்தில் பல்வேறு படைப் பிரிவுகளில் பணியாற்றி குறிப்பிட்ட கால வரையளவைப் பூர்த்தி செய்த 5 பெண் அதிகாரிகளுக்கு கர்னல் அந்தஸ்துக்கான பதவி உயர்வை முதல்முறையாக ராணுவம் வழங்கியுள்ளது.
- இந்திய ராணுவத்தில் பெண்களுக்கான நிரந்தரப் பணியமர்வு ஏற்படுத்தப்பட்டதையொட்டி, இந்தப் பாலின சமத்துவத்தை ராணுவம் நடைமுறைப்படுத்தியுள்ளது.
- ஆண் ஆதிகாரிகளுக்கு மட்டுமே நிரந்தரப் பணியமர்வு பயிற்சி டேராடூன் போன்ற ராணுவ அகாதெமியில் (ஐஎம்ஏ) கொடுக்கப்படும். இந்த நிலையில், இந்திய ராணுவத்தில் பெண்களுக்கு தற்போது குறுகிய காலப் பணியமர்வு பயிற்சியானது சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாதெமி (ஓடிஏ) போன்றவற்றில் அளிக்கப்படுகிறது. ஆண் அதிகாரிகளுக்கு இணையாக ராணுவத்தில் மருத்துவம், ராணுவ நீதிபதி, வழக்குரைஞர்கள், கல்விப் பிரிவுகளில் பணியாற்றும் பெண்களுக்கு மட்டுமே கர்னல் அந்தஸ்துக்கு மேலான பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவத் துறை பெண் ராணுவ அதிகாரிகள் ஜெனரல் அந்தஸ்து வரை பதவி உயர்வு பெற்று புகழ் பெற்றுள்ளனர்.

## பாதுகாப்புத் துறையில் பொது–தனியார் கூட்டுறவு: தற்சார்பு இந்தியாவுக்கான மிகப்பெரிய படிக்கல்

- பாதுகாப்புத் துறையில் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் கூட்டுறவு தற்சார்பு இந்தியாவை நோக்கிய மிகப்பெரிய படிக்கல் என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.
- தற்போது முதலாம் உலகப் போர் காலத்திய கையெறி குண்டுகளை இந்திய ராணுவம் பயன்படுத்தி வருகிறது. இந்த கையெறி குண்டுகளுக்கு மாற்றாக நவீன கையெறி குண்டுகளை உற்பத்தி செய்து இந்திய ராணுவத்துக்கும் விமானப்படைக்கும் வழங்க மகாராஷ்டிர மாநிலம் நாகபுரியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் எக்கனாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் நிறுவனத்துடன் (ஈஈஎல்) பாதுகாப்புத்துறை அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது.
- கடந்த 2020–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி, ஈஈஎல் நிறுவனம் 10 லட்சம் நவீன கையெறி குண்டுகளை உற்பத்தி செய்து வழங்கவுள்ளது. அதற்கு தேவையான தொழில் நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) வெடிபொருள் ஆராய்ச்சி ஆய்வகம் வழங்கியுள்ளது.

## ரஷிய போர்க்கப்பல்கள் 2023ல் வருகை

- 2016ம் ஆண்டில் இந்தியா ரஷ்யா இடையே கிரிவிக் ரல்வார் வகை போர்க்கப்பல்களை வாங்குவதற்கு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த கப்பல்கள் 2023ன் மத்தியில் இந்தியா வந்தடையும் என யுனைடெட் கப்பல் கட்டும் நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராக்கெட் லாஞ்சர்

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஃபதே–1' ஏவுகணை செலுத்தி (லாஞ்சர்) சோதனையை வெற்றிகரமாக நடத்தியதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், எதிரி நாட்டின் பகுதிகளை ஃபதே–1 மூலம் துல்லியமாகத் தாக்கி அழிக்க முடியும். தரையிலிருந்து செலுத்தப்பட்டு தரையில் உள்ள இலக்கை இதன் ஏவுகணைகள் தாக்கும்' எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

## மிக்–21 ரக போர் விமானம்:

- ராஜஸ்தான் மாநிலம், பார்மர் மாவட்டத்தில் மிக்–21 ரக போர் விமானம் விபத்துக்குள்ளாகி எரிந்து சேதமடைந்தது. விமானி சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். நிகழாண்டில் விபத்துக்குள்ளான 4–ஆவது மிக்ரக விமானம் இது.

## இந்தியா – கஜகஸ்தான் 5–ஆம் கட்ட கூட்டுப் பயிற்சி 30–இல் தொடக்கம்

- இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான 5–ஆவது கட்ட ராணுவ கூட்டுப் பயிற்சி ஆகஸ்ட் 30–ஆம் தேதி தொடங்குகிறது.
- ராணுவ ராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் கஜகஸ்தானுடனான வளர்ந்து வரும் உறவை வலுப்படுத்தும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது. கஜகஸ்தானில் உள்ள ஆயிஷா பிபியில் இருக்கும் பயிற்சி நிலையத்தில் செப்டம்பர் 11 வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டுப்பயிற்சியில், இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்தும்விதத்தில் இரு நாட்டு ராணுவங்களும் பயிற்சிகளை மேற்கொள்ளும்.
- பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து இந்தியா மற்றும் கஜகஸ்தான் ராணுவத்தினருக்கு இந்தக் கூட்டு நடவடிக்கையின்போது பயிற்சி அளிக்கப்படும்.

## மலபார் கூட்டு போர்ப்

- உறுதிபூண்டுள்ளதன் பின்னணியில் இந்தப் போர்ப் பயிற்சி நடைபெறுகிறது.

## ARMY–2021

- ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் ஆகஸ்ட் 22 முதல் 28 வரையில் ARMY–2021 என்ற சர்வதேச இராணுவ தொழில்நுட்ப மன்றம் நடைபெறுகிறது. 7வது ஆண்டாக நடைபெறும் இந்த மன்றத்தில் இந்தியாவின் சார்பாக ஒரு அரங்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## விக்ரஹா ரோந்து கப்பல் சேவை தொடக்க விழா

- ரோந்து படை கப்பல் விக்ரஹாவின் சேவை தொடக்க விழா சென்னையில் நாளை (ஆகஸ்ட் 28) நடைபெறுகிறது. இவ்விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்கின்றனர்.
- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடல்ரோந்து கப்பலான விக்ரஹாவை, இந்திய கடலோர காவல் படை ரோந்து கப்பல்கள் வரிசையில் ஏழாவதாக சேர்த்தல் மற்றும் அதன் சேவை தொடக்க விழா சென்னையில் நாளை நடைபெறுகிறது. மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்று ரோந்து கப்பல் சேவையை தொடங்கிவைக்கிறார். இந்நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார்.
- எல் அண்டு டி ஷிப் பில்டிங் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள இக்கப்பலில் நவீன தொழில்நுட்ப ராடார்கள், தொலைதொடர்பு மற்றும் பயணக் கருவிகள், சென்சார்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன. ஒரு போஃபொர்ஸ் துப்பாக்கி, இரு 12.7 மிமீ ரிமோட் கண்ட்ரோல் துப்பாக்கிகள் உள்ளிட்டவையும் இக்கப்பலில் உள்ளன. ஒரு ஹெலிகாப்டர் மற்றும் 4 அதிவேக படகுகளை அந்த கப்பல் சுமந்து செல்லும். இந்த கப்பலுடன் சேர்த்து, 157 கப்பல்கள் மற்றும் 66 விமானங்கள் இந்திய கடலோர காவல் படையிடம் உள்ளன. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தீவிரவாதத்திற்கு எதிரான காந்திவ் பயிற்சி

- நாட்டின் பல்வேறு மாநிலங்களின் பல்வேறு நகரங்களில் தேசிய தலைநகர் உட்பட தேசிய பாதுகாப்பு படையினரால் தீவிரவாத்திற்கு எதிராக காந்திவ் என்ற பயிற்சி நடத்தப்படும்.
- ஒருவாரம் நடைபெறும் இந்த பயிற்சி 3வது ஆண்டாக நடைபெறுகிறது.

**உள்நாட்டு இராணுவ பயிற்சிகள்:**

- பாசிம் லெஹார்
- வாயு சந்தி
- விஜய் பிரகார்
- சத்ரு ஜுத்
- மேக் பிரகார்
- சங்தாங்
- ஹிம் விஜய்

# 1.3 உலக அமைப்புகள்–உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

## பிரதமர் மோடி தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டம்

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விவாதக் கூட்டம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெறுகிறது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. இந்நிலையில், கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பான உயர்நிலை விவாதக் கூட்டத்தை இந்தியா திங்கள்கிழமை நடத்தவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையேற்கிறார்.
- இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், 'ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சார்பில் நடைபெறும் விவாதக் கூட்டத்துக்குத் தலைமையேற்கும் முதல் இந்தியப் பிரதமர் என்ற சிறப்பை நரேந்திர மோடி பெறுகிறார். கடல்சார் குற்றங்களைத் தடுத்தல், கடல்சார் பாதுகாப்பில் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்து கூட்டத்தின்போது விவாதிக்கப்படவுள்ளது.
- கடல்சார் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும், கடல்சார் பாதுகாப்புக்கென பிரத்யேகமாக விவாதக் கூட்டம் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். கடல்சார் பாதுகாப்பு குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

## உலக சுகாதார அமைப்பின் புதிய ஆலோசனைக் குழு

- சர்வதேச அளவிலான புதிய நோய்ப் பரவல்களை கண்டறியக்கூடிய அது குறித்த ஆலோசனைகளை வழங்க கூடிய அறிஞர்கள் குழவை உலக சுகாதார அமைப்பு ஏற்படுத்தியுள்ளது.
- "The International Scientific Advisory Group for Origins of Novel Pathogens" (SAGO) என்பது இந்த குழுவின் பெயராகும்.

## கிளாஸ்கோ பருவநிலை மாநாட்டுக்கு ஆதரவு: பிரிட்டன் அமைச்சரிடம் இந்தியா உறுதி

- பிரிட்டனின் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐ.நா.வின் 26–ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டுக்கு இந்தியா முழு ஆதரவு அளித்துள்ளது. இந்தியா வந்துள்ள பிரிட்டன் சுற்றுச்சூழல் துறை அமைச்சரும், பருவநிலை மாநாட்டின் தலைவருமான அலோக் சர்மாவிடம் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் புபேந்தர் யாதவ் இது தொடர்பாக உறுதியளித்தார்.
- ஐ.நா.வின் 26–ஆவது பருவநிலைமாற்ற உறுப்பினர்கள் மாநாட்டின் (காப்26) வெற்றிக்காக இந்தியா தொடர்ந்து ஆக்கபூர்வமாக பணியாற்றும்.
- வரும் நவம்பர் மாதம் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள காப் 26 மாநாட்டுக்கு பிரிட்டனுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.
- இந்தியா வந்துள்ள பிரிட்டன் அமைச்சர் அலோக் சர்மா தில்லியில் அமைச்சர் புபேந்தர் யாதவ் உள்ளிட்டோரை சந்தித்துப் பேசினார்.

## 5வது பிரிக்ஸ் தொழிற்சாலை அமைச்சர்கள் மாநாடு

- இந்தியாவின் வணிகம் மற்றும் தொழிற்சாலைத் தறை அமைச்ச் பியுஷ்கொயல் 5வது பிரிக்ஸ் தொழிற்சாலை அமைச்சர் மாநாட்டிற்கு (ஆகஸ்ட் 18) தலைமைத் தாங்கினார்.
- 2021ம் ஆண்டிற்கு பிரிக்ஸ் கூட்டமைவின் தலைமை மையக்கருத்து– BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation and Consensus for its Chairship.

## சைபர் பாதுகாப்பு அறக்கட்டளை நிதியம்

- உலக வங்கி "cyber security multi–Donor Trust Fund" என்ற அறக்கட்டளை நிதியத்தை துவங்கியுள்ளது.

### பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம்

- பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் இடையேயான காணொலி வழியிலான கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல். பாதுகாப்பு, பயங்கரவாத அச்சுறுத்தல். போதை மருந்து கடத்தல் தடுப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

### உலக பொருளாதார மன்றத்தின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மாநாடு 2021

- செப்டம்பர் 20–23 வரை சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் உலக பொருளாதார மன்றத்தின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மாநாடு நடைபெற உள்ளது.
- மையக்கருத்து: Shopping on Equitable inclusive and sustainable Recovery.

WEF – உலக பொருளாதார மன்றம்

- தலைமையிடம் – கொலோங்கி, சுவிட்சர்லாந்து
- தோற்றுவித்தல் – கிளாஸ் சிவாப்
- தோற்றம் – 24 ஜனவரி 1971
- தலைவர் – பார்ஜ் பிரிண்டே

### புனே இராணுவ விளையாட்டு மைதானத்திற்கு நீரஜ் சோப்ரா பெயர்

- 2020 டோக்கியோ ஒலிம்பிக் ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவின் பெயர் புனே இராணுவ விளையாட்டு மைதானத்திற்கு சூட்டப்பட்டுள்ளது.

## 1.4 சிறந்த நபர்கள்

### சதாவதானி செய்குத் தம்பி படத்துக்கு மரியாதை

- சதாவதானி செய்குத் தம்பி பாவலரின் 148 ஆவது பிறந்ததினத்தையொட்டி, அரசு சார்பில் நடைபெற்ற விழாவில் இடலாக்குடியில் உள்ள நினைவு மண்டபத்தில் அவரது உருவப் படத்துக்கு, ஆட்சியர் மா.அரவிந்த் தலைமையில், தமிழக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
- நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: செய்குத் தம்பி பாவலர் கி.பி 1874 இல் ஜூலை 31 ஆம் தேதி, கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு இடலாக்குடியில் பிறந்தார். இலக்கணம், இலக்கியங்களை சிறப்பாக கற்றுத் தேர்ந்த அவர் தனது இனிய கவிதைகளை பிழையில்லாமல் எடுத்துக் கூறும் அளவுக்கு வல்லமை பெற்றிருந்தார்.
- இளம் வயதிலேயே கவிபாடும் திறன் இருந்ததால் அனைவராலும் பாவலர் என அழைக்கப்பட்டார். சுதந்திரப் போராட்ட காலத்தில் நாஞ்சில் நாட்டில் தேசிய விடுதலை உணர்வூட்டும் பணிகளை மேற்கொண்ட பாவலர் 1950இல் பிப்ரவரி 13ஆம் தேதி காலாமானார்.
- இவரது புத்தகங்கள் 2008ஆம் ஆண்டில் முன்னாள் முதல்வர் கருணாநிதியால் அரசுடைமை ஆக்கப்பட்டது.

### உலக மாஸ்டர் பட்டம் பெற்ற : மான் கவுர்

- தடகள போட்டிகளில் உலக மாஸ்டர் தங்கப் பதக்கம், ஆசிய போட்டிகளில் தங்கம் வென்ற மான் கவுர் 105 வயதில் காலமானார்.
- 1916ல் பிறந்த கவுர் சண்டிகரின் அதிசய அம்மா என அறியப்படுகிறார்.

### காலமானார் சித்த மருத்துவர் க.வேங்கடேசன்

- மூலிகைமணி இதழின் ஆசிரியரும், மூத்த சித்த மருத்துவருமான க.வேங்கடேசன் (75) வயது மூப்பு காரணமாக சென்னையில் காலமானார்.

## வெண்கலம் வென்றார் சிந்து

- டோக்கியோ ஒலிம்பிக் பாட்மிண்டன் போட்டியில் 3–ஆம் இடத்துக்கான சுற்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21–13, 21–15 என்ற செட்களில் சீனாவின் ஹீ பிங் ஜியாவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஒலிம்பிக்கில் தொடர்ந்து 2–ஆவது முறையாக பதக்கம் வென்றுள்ளார் சிந்து. முன்னதாக 2016 ரியோ ஒலிம்பிக்கில் அவர் வெள்ளி வென்றிருந்தார். இந்த ஒலிம்பிக்கில் சிந்து தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அரையிறுதியில் உலகின் முதல்நிலை வீராங்கனையான சீன தைபேவைச் சேர்ந்த டைஸுயிங்கிடம் அவர் வீழ்ந்தார். எனினும் அதிலிருந்து மீண்டு தற்போது வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- சாய்கோம் மீராபாய் சானு, சிந்து பதக்கம் வென்றுள்ள நிலையில், குத்துச்சண்டை வீராங்கனை லவ்லினா போர் கோஹெய்னும் இந்தியாவுக்காக ஒரு பதக்கத்தை உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தீரன் சின்னமலை நினைவுநாள்

- சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாளையொட்டி தமிழக அரசின் சார்பில் சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த படத்துக்கு அஞ்சலி செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலர் ஈஸ்வரன். அமைச்சர்கள் கே.என். நேரு, பெரியகருப்பன், சேகர்பாபு, செந்தில்பாலாஜி. முன்னாள் எம்.பி. சுப்புலட்சுமி ஜெகதீசன்.

## K2 சிகரத்தை அடைந்துள்ள மிக இளம் நபர்

- ஷெரோஸ் காசிப் 19 வயதில் இந்தியாவின் மிக உயரமான சிகரமான K2 வை ஏறி சாதனை படைத்துள்ளார்.
- இவர் 20 வயதில் K2 சிகரத்தை ஏறி சாதனை படைத்த முகம்மது அலி சாட்பாராவின் மகனாவார். 14க்கும் மேற்பட்ட சிகரங்களை அடைந்து சாதனை படைத்துள்ளார்.

## எழுத்தாளர் பத்மா சச் தேவ்

- பத்ம ஸ்ரீ விருது பெற்றுள்ள புகழ்பெற்ற டோக்ரி, இந்தி மொழி எழுத்தாளர் பத்மா சச்தேவ் சமீபத்தில் காலமானார். இவரது "மேரி கீத்" 1971 ல் சாகித்திய அகாடமி விருது பெற்றது.

## அபிந்திரநாத் தாகூரின் 150வது ஆண்டு விழா

- வங்காள கலைப் பாணி (Bengal School of Art) யின் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாளர்களில் ஒருவரான அபிந்திரநாத் தாகூரின் 150வது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கொல்கத்தாவின் விக்டோரியா நினைவு மஹாலில் அவரது ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

## இந்திய வனவிலங்கு கணக்கெடுப்பு அமைப்பின் முதல் பெண் தலைவர்

- Dr.திரிபாதி பானர்ஜி இந்திய வனவிலங்கு கணக்கெடுப்பு அமைப்பின் முதல் பெண் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 100 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இந்த அமைப்பின் முதல் பெண் தலைவர் இவராவார்.

## SS பாபு நாராயண்

- இந்திய அணிக்காக ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடிய (டென்மார்க் – 1956, ரோம் – 1960) SS பாபு நாராயண் காலமானார்.

## அனுபம் ஷ்யாம்

- பழம்பெறும் இந்திய சின்னத்திரை நடிகர் அனுபம் ஷ்யாம் காலமானார்.
- ஸ்டார் பிளஸ் சேனலில் மான்கி அவாஸ் பிரதிக்யா என்ற நாடகத்தில் தாக்கூர் சஜன்சிங் கதாபாத்திரத்தில் நடித்தவர்.

## காசார்கோட் பட்னாஷெட்டி கோபால் ராவ்

- இந்தியா பாகிஸ்தான் இடையே நடைபெற்ற 1971 போரில் பங்கேற்ற கமாண்டர் காசர்கோட் பட்னாஷெட்டி கோபால் ராவ் சமீபத்தில் காலமானார்.
- கராச்சியின் ஆபரேஷன் நாக்டாஸ் லில்லி யுடன் தொடர்புடையவர்.

## ஆயுர்வேத மருத்துவர் பாலாஜி தம்பே மறைவுக்கு பிரதமர் இரங்கல்

- ஆயுர்வேத மருத்துவரும், யோகா நிபுணருமான பாலாஜி தம்பேயின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

- 81 வயதான பாலாஜி தம்பே, உடல் நலக்குறைவு காரணமாக மகாராஷ்டிர மாநிலம் புனேவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.
- ஆன்மிகம், ஆயுர்வேதம், யோகா தொடர்பாக பல்வேறு புத்தகங்களையும் பாலாஜி தம்பே எழுதியுள்ளார்.

## சுடோகுவை உருவாக்கிய மகி காஜி

- மகிகாஜி பரவலாக சுடோகு எனப்படும் திறன் விளையாட்டை கண்டறிந்தவர் ஜப்பானைச் சேர்ந்த இவர் சமீபத்தில் காலமானார்.

## ஜெயபிரகாஷ் நாராயன் சரிதை

- "The Dream of Revolution: A Biography of Jayaprakash Narayan" என்ற புத்தகம் பிமால் பிரசாத் மற்றும் சுஜாதா பிரசாத் அவர்களால் எழுதப்பட்டு ஆகஸ்ட் 23ல் வெளியிடப்பட உள்ளது.
- பென்குயின் பதிப்பகம் வெளியிட உள்ளது.

## உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் மறைவு

- உத்தரபிரதேச முன்னாள் முதல்வரும், ராஜஸ்தான் மாநில முன்னாள் ஆளுநருமான கல்யாண் சிங் காலமானார்.

## முன்னாள் ஒலிம்பிக் கால்பந்தாட்ட வீரர்

- முன்னாள் ஒலிம்பிக் கால்பந்தாட்ட வீரர் O.சந்திரசேகர் சமீபத்தில் காலமானார். இவர் கேரளாவைச் சேர்ந்தவர். 1960ம் ஆண்டு ரோம் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பாக பங்கேற்றவர்.

## வங்க எழுத்தாளர் புத்ததேவ் குஹா காலமானார்

- புகழ்பெற்ற வங்கமொழி எழுத்தாளரான புத்ததேவ் குஹா (85) மாரடைப்பால் காலமானார்.
- 'மதுகரி', 'ஜங்கல்மஹால்', 'சோரோய்பேடி' உள்ளிட்ட பல சிறந்த வங்கமொழி நூல்களின் ஆசிரியரான புத்ததேவ் குஹா, கடந்த ஏப்ரலில் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, ஒரு மாதத்துக்குப் பிறகு அதிலிருந்து மீண்டார்.

## வ.உ.சி. 150–ஆவது பிறந்தநாள் சிறப்பு நிகழ்ச்சிகள்

- மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்.

# 1.5 முக்கிய இடங்கள் பற்றிய செய்திகள்

### உலகின் மிக உயரமான சாலை

- கிழக்கு லடாக் மாநிலம் உம்லிங் கணவாய் அருகே எல்லைச் சாலை அமைப்பால் உலகின் மிக உயரமான சாலை 19300 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.
- பொலிவியால் 18953 உயரத்தில் அமைக்கப்பட்ட சாலையே உலகின் மிக உயரமானதாக இவ்வளவு நாள் இருந்து வந்தது.

# 1.5 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### கல்பனா சாவ்லா விருது

- கரோனா களத்தில் பணியாற்றும் போது, நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இறந்த மதுரை பெண் மருத்துவர் சண்முகப்பிரியாவுக்கு துணிவு, சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இருந்து அவரது கணவர் சண்முகப் பெருமாள் பெற்றுக் கொண்டார்.
- கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மாநில மக்களுக்கு உரையாற்றிய பிறகு விருதுகளை அவர் அளித்தார்.
- கல்பனா சாவ்லா விருது: மதுரை அனுப்பானடி அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் கரோனா காலத்திலும் மருத்துவப்பணியில் சேவையாற்றியவர், மருத்துவர் ப.சண்முகப்பிரியா. 582 காய்ச்சல் சிறப்பு முகாம்களில் பங்கேற்று, 10,961 பேருக்கு கரோனா மாதிரிகளை சேமித்துள்ளார். 302 பேருக்கு சிகிச்சைகளையும் அளித்துள்ளார்.

### விமானப் படை விமானிகள் இருவருக்கு "வாயு சேனா" பதக்கம்

- விமானப் படையினரின் சிறப்பான பணிகளுக்கு வழங்கப்படும் வாயு சேனா பதக்கம் ஸ்குவாட்ரான் லீடர் தீபக் மோகனன், விங் கமாண்டர் உத்தர்குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்தப் பதக்கங்களை வழங்கினார்.

# 1.6 விளையாட்டு

## அலெக்ஸாண்டர் வெரிங்

- ஜெர்மனியை சேர்ந்த அலெக்ஸாண்டர் வெரிவ் டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

## லவ்லினாவுக்கு வெண்கலம்

- டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான 69 கிலோ பிரிவு குத்துச்சண்டையில் இந்தியாவின் லவ்லினா போர் கோஹெய்ன் (23) வெண்கலப் பதக்கம் வென்றார். இந்த ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இது 3–ஆவது பதக்கமாகும்.
- அரையிறுதிக்கு முன்னேறியிருந்த லவ்லினா, அந்தச் சுற்றில் துருக்கியின் புசெனாஸ் சுர்மெனெலியிடம் (0–5) வீழ்ந்தார். குத்துச்சண்டையின் அரையிறுதிகளில் தோல்வி காணுவோருக்கும் வெண்கலம் வழங்கப்படுகிறது.
- இந்தியாவுக்காக ஒலிம்பிக் குத்துச்சண்டையில் பதக்கம் வென்ற 3–ஆவது போட்டியாளர் லவ்லினா. முன்னதாக விஜேந்திர் சிங் (2008 பெய்ஜிங்), மேரி கோம் (2012 லண்டன்) ஆகியோர் இதே போல் வெண்கலம் வென்றனர்.

4–ஆவது பதக்கத்தை உறுதி செய்தால் ரவி தாஹியா

- இந்தியாவுக்காக, மல்யுத்தத்தில் ஒரு பதக்கத்தை ரவி தாஹியா உறுதி செய்துள்ளார். ஆடவருக்கான 57 கிலோ பிரிவு இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ள அவர், தங்கம் அல்லது வெள்ளியைச் கைப்பற்றுவார்.

## ஹாக்கியில் இந்தியாவுக்கு வெண்கலம் 41 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கம்

- ஜப்பானில் நடைபெறும் டோக்கியோ ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டில் 3–ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி 5–4 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.
- ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஹாக்கி அணிக்கு 41 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்துள்ள பதக்கம் இதுவாகும். கடைசியாக இந்தியா, 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றிருந்தது.
- தற்போது வென்றுள்ள வெண்கலத்தையும் சேர்த்து, ஒலிம்பிக் ஹாக்கியில் இந்திய ஆடவர் அணி 8 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 12 பதக்கங்களை வென்றுள்ளது.
- முன்னதாக, 3–ஆவது இடத்துக்கான இந்த ஆட்டத்தில் பதக்கம் வெல்லும் உறுதியுடன் இருந்த இந்தியா, என்றும் நினைவில் நிற்கும் வகையிலான ஒரு ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தடுப்பாட்டத்தில் செய்த சில தவறுகளால் முதலில் 1–3 என பின்தங்கினாலும், பிறகு அதிலிருந்து உத்வேகத்துடன் மீண்டு ஆட்டத்தை வென்றது இந்தியா.

## ரவி தாஹியாவுக்கு வெள்ளி

- மல்யுத்தத்தில் ஆடவருக்கான ஃப்ரீஸ்டைல் 57 கிலோ பிரிவில் இந்தியாவின் ரவி தாஹியா இறுதிச்சுற்றில் தோல்வியடைந்தது வெள்ளிப் பதக்கம் பெற்றார்.
- அவரது வெள்ளிப் பதக்கம், ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள 5–ஆவது பதக்கமாகும். இதற்கு முன் 1 வெள்ளி, 3 வெண்கலம் கிடைத்துள்ளது. இறுதிச்சுற்றில் ரவி தாஹியா நடப்பு உலக சாம்பியனான ரஷியாவின் ஜாவுர் உகுயேவிடம் 4–7 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்றார். தாஹியா அரையிறுதியில் வெளிப்படுத்திய அட்டகாசமான திறமையால், இறுதிச்சுற்றில் அவர் தங்கம் வெல்வார் என்ற பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அவருக்கு வெள்ளியே கிடைத்தது.

## ஒலிம்பிக் தடகளத்தில் இந்தியாவுக்கு முதல் பதக்கம்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டி தடகள பிரிவில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா (23) தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.
- கடந்த 1920 ஆண்ட்வெர்ப் ஒலிம்பிக் போட்டியில் தொடங்கி, 101 ஆண்டுகளாக அந்த விளையாட்டுத் திருவிழாவில் களம் கண்டு வரும் இந்தியாவுக்கு தடகளத்தில் கிடைத்துள்ள முதல் மகுடம் இது. முன்னதாக ஒலிம்பிக் தடகளத்தில் ஓட்டப் பந்தயத்தில் மில்கா சிங் 1960 ரோம்), பி.டி.உஷா (1984 லாஸ் ஏஞ்சலீஸ்) போராடி தவற விட்ட பதக்க வாய்ப்புகளை, தற்போது நீரஜ் சோப்ரா தட்டிச் சென்றுள்ளார்.
- டோக்கியோ ஒலிம்பிக் நிறைவடைகிறது. இதில் இந்தியாவின் கடைசி களம் ஈட்டி எறிதலாக இருந்த திலையில், அதில் தங்கம் வென்று இந்தியாவின் பங்கேற்பை திருப்தி கொள்ளும் வகை யில் நிறைவு செய்துள்ளார் நிரஜ் சோப்ரா.

- ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்ற தில் இருந்தே அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது. அதற்கு வலு சேர்க்கும் வகையில் கடந்த வாரம் நடைபெற்ற தகுதிச்சுற்றில் முதல் முயற்சியிலேயே சிறப்பான தூரம் எறிந்து முதலிடம் பிடித்து இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றார். அதிலும் அசத்துவார் என்ற நம்பிக்கை மேலோங்க, அது வீண்போகாத வகையில் வரலாறு படைத்துள்ளார்.

## மல்யுத்தம்: பஜ்ரங் புனியாவுக்கு வெண்கலம்

- மல்யுத்தம் 65 கிலோ பிரிவில் இந்தியாவின் பஜ்ரங் புனியா (27) வெண்கலப் பதக்கம் வென்றார்.
- 3–ஆவது இடத்துக்கான சுற்றில் கஜகஸ்தானின் தௌலத் நியாஸ்பெகோவை 8–0 என்ற கணக்கில் வீழ்த்தினார். மல்யுத்தத்தில் இந்தியாவுக்கு இது 2–ஆவது பதக்கமாகும். முன்னதாக, ரவி தாஹியா ஆடவருக்கான 57 கிலோ பிரிவில் வெள்ளி வென்ற நிலையில், தற்போது புனியா வெண்கலம் வென்றுள்ளார். ஏற்கெனவே. ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இந்தியா இதேபோல் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 2 பதக்கங்கள் வென்றதே அதிகபட்சமாக உள்ளது. 2012 லண்டன் ஒலிம்பிக்கில் சுஷில் குமார் வெள்ளியும், யோகேஷ்வர் தத் வெண்கலமும் வென்றிருந்தது நினைவுகூரத்தக்கது.

## ஒலிம்பிக் திருவிழா நிறைவு

- ஜப்பானில் நடைபெற்று வந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்தது.
- இந்த 32–ஆவது ஒலிம்பிக் போட்டியின் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா (113) முதலிடத்தையும், சீனா (88) 2–ஆம் இடத்தையும் பிடித்தன. போட்டியை நடத்திய ஜப்பான் 58 பதக்கங்களுடன் 3–ஆம் இடம் பிடித்தது. இந்தியா 7 பதக்கங்களுடன் 48–ஆம் இடம் பிடித்தது. இந்த ஒலிம்பிக் போட்டியிலும் வழக்கம்போல பல்வேறு பிரிவுகளில் முந்தைய உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டு, பல புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

## டெக்ஸாஸ் பல்கலைக்கழக உதவித் தொகையுடன் கூடிய கல்விக்கு தமிழக வீராங்கனை தேர்வு

- தமிழகத்தைச் சேர்ந்த வட்டு எறிதல் ஜூனியர் வீராங்கனை கிருஷ்ணா ஜெயசங்கர் அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் விளையாட்டுக்கான முழு உதவித்தொகையுடன் (சுமார் ரூ.1.5 கோடி) சேர்க்கை பெற்றுள்ளார்.

## யுஇஎஃப் சூப்பர் கோப்பை கால்பந்து செல்சி சாம்பியன்

- யுஇஎஃப்ஏ சூப்பர் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் செல்சி அணி "பெனால்டி ஷூட் அவுட்" முறையில் 6–5 என்ற கோல் கணக்கில் வில்லாரியலை வீழ்த்தி சாம்பியன் ஆனது. கடந்த மே மாதம் சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் சிட்டியை வீழ்த்தி பட்டம் வென்ற 10 வாரங்களுக்குள்ளாக இந்தக் கோப்பையையும் வென்றிருக்கிறது செல்சி.

## ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் மெத்வதேவ், கமிலா சாம்பியன்

- ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ் சாம்பியன் ஆனார்.
- போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த அவர் இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் ரைலி ஒபெல்காவை 6–4, 6–3 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார்.

## 69வது செஸ் கிராண்ட் மாஸ்டர்

- புனேவைச் சேர்ந்த ஹர்ஷித் ராஜா இந்தியாவின் 69வது கிராண்ட் செஸ் மாஸ்டராக உருவாக்கியுள்ளார்.

## உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்

- போலாந்தின் ரக்லோவில் நடைபெற்ற உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் கோமாலிகா (19) 21 வயதிற்கு உட்பட்டவர்கள் பிரிவில் புதிய உலக சாதனை புரிந்துள்ளனர். பந்த் சாலன்கே என்ற வீராங்கனையும் கலப்பு அணி பிரவில் பதக்கம் வென்றுள்ளார்.

## ஜூனியர் மல்யுத்தம்: இந்தியாவுக்கு 6 பதக்கங்கள்

- ரஷியாவில் நடைபெற்ற உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியாவுக்கு ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என 6 பதக்கங்கள் கிடைத்துள்ளன.
- ஆடவருக்கான 61 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரவீந்தர் 3–9 என்ற கணக்கில் ஈரான் வீரர் ரஹ்மான் மௌசா அமௌசத்காலிலியிடம் வீழ்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

## யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப் இந்திய கலப்பு ரிலே அணிக்கு வெண்கலம்

- கென்யாவில் நடைபெறும் 20 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 4*400 மீட்டர் ரிலேவில் இந்திய கலப்பு அணி வெண்கலப் பதக்கம் வென்றது.
- இப்பிரிவின் தகுதிச்சுற்றில் இந்தியாவின் பரத் ஸ்ரீதர், பிரியா மோகன், சம்மி, கபில் ஆகியோர் அடங்கிய அணி 3 நிமிஷம் 23.3 விநாடிகளில் இலக்கை எட்டி 2–ஆவது அணியாக இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தது. பின்னர் இறுதிச்சுற்றில் 3 நிமிஷம் 20.60 விநாடிகளில் இலக்கை எட்டி 3–ஆம் இடம் பிடித்தது அதே இந்திய அணி.

## ஜெர்மன் சூப்பர் கோப்பை கால்பந்து: பேயர்ன் முனீச் சாம்பியன்

- ஜெர்மன் சூப்பர் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் பேயர்ன் முனீச் 3–1 என்ற கோல் கணக்கில் போருசியா டார்ட்மன்டை வீழ்த்தி சாம்பியன் ஆனது.
- ஜெர்மனியின் டார்ட்மன்ட் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 40 நிமிஷங்களுக்கு கோல் அடிக்கப்படவில்லை. இரு அணிகளுமே பரஸ்பரம் முயற்சித்தும் எதிரணியின் வலுவான தடுப்பாட்டத்தால், ஆட்டம் கோல் இன்றி நீடித்தது. இந்த நிலையை 41–ஆவது நிமிஷத்தில் உடைத்தார் பேயர்ன் முனீச் வீரர் ராபர்ட் லிவான் டோவ்ஸ்கி.

## யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப்: நடைப்பந்தயத்தில் அமித் காத்ரிக்கு வெள்ளி

- இருபது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 10,000 மீட்டர் நடைப்பந்தயத்தில் இந்தியாவின் அமித்காத்ரி (17) வெள்ளிப்பதக்கம் வென்று அசத்தினார்.
- பந்தய இலக்கை அவர் 42 நிமிஷம் 17.94 விநாடிகளில் எட்டி 2–ஆம் இடம் பிடித்தார். கென்யாவின் ஹெரிஸ்டோன் வன்யோனி (42:10.84) முதலிடமும், ஸ்பெயினின் பால் மெக்ராத் (42:26.11) 3–ஆம் இடமும் பிடித்தனர்.

## பிபாஷாவுக்கு வெள்ளி

- ரஷியாவில் நடைபெறும் உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்திய வீரங்கனை பிபாஷா வெள்ளி வென்றார். அத்துடன் இரு வெண்கலப் பதக்கங்களும் இந்தியாவுக்கு கிடைத்தது.
- இதில் பிபாஷா, 76 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் அமொரிக்காவின் கைலி ரெனீ வெல்கரிடம் தோற்று வெள்ளி பெற்றார். 62 கிலோ பிரிவு வீராங்கனையான சஞ்சு தேவி, அரையிறுதியில் அஜர்பைஜான் பிர்குல் சோல்டானோவாவை 8–5 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அதில் அவர் ரஷியாவின் அலினா கசாபிவாவை எதிர்கொள்ள இருக்கிறார்.

## சின்சினாட்டி மாஸ்டர்ஸ்: வெரேவ், பர்ட்டி சாம்பியன்

- அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் வெரேவ், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லிபர்ட்டி ஆகியோர் சாம்பியன் ஆகினர்.
- இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் போட்டித் தரவரிசையில் 3–ஆம் இடத்திலிருந்த வெரேவும், போட்டித் தரவரிசையில் 4–ஆம் இடத்திலிருந்த ரஷியாவின் ஆன்ட்ரே ரூபலேவும் மோதினர்.

## தொடங்கியது டோக்கியோ பாராலிம்பிக்

- ஜப்பானின் டோக்கியோ நகரில் 16–ஆவது பாராலிம்பிக் போட்டி அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.
- டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி (ஐபிசி) தலைவர் ஆன்ட்ரூ பார்சன்ஸ், ஜப்பான் அரசர் நருஹிடோ, ஜப்பான் பிரதமர் யோஷி ஹிடே சுகா உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## முதல் தங்கத்தை ஆஸ்திரேலியா வென்றது

- டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிய நிலையில், முதல் தங்கப்பதக்கத்தை ஆஸ்திரேலிய சைக்கிளிங் வீராங்கனை பெய்ஜ் கிரேகோ வென்றார்.

## செக். ஓபன் டேபிள் டென்னிஸ்: சத்யன் சாம்பியன்

- செக் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றார் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன்.
- உலகின் 39–ஆம் நிலை வீரரான
- சத்யன், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தொடக்க சுற்றுகளிலேயே தோல்வியடைந்தார்.
- கடந்த சில நாள்களுக்கு முன்பு புடாபெஸ்டில் நடைபெற்ற உலக டேபிள் டென்னிஸ் போட்டி கண்டென்டர் போட்டியில் இரட்டையர் பிரிவில் மனிகா பத்ராவுடன் இணைந்து பட்டத்தை கைப்பற்றினார்.

## பார்சிலோனா ஓபன் செஸ்: சேதுராமன் சாம்பியன்

- பார்சிலோனா ஓபன் செஸ் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் எஸ்.பி. சேதுராமன் சாம்பியன் பட்டம் வென்றார். மற்றொரு இந்திய வீரர் கார்த்திகேயன் முரளி மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

## சர்வதேச தடகளம்: தமிழகத்தின் சமீஹா பர்வீனுக்கு 7–ஆம் இடம்

- போலந்து நாட்டில் நடைபெற்று வரும் செவித்திறன் குன்றியோருக்கான சர்வதேச தடகளப் போட்டிகளில் நீளம் தாண்டுதலில் குமரி மாவட்ட வீராங்கனை சமீஹா பர்வீன் ஏழாவது இடம்பெற்றார்.
- இதன் மூலம் 2024–இல் பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

## இந்தியாவுக்கு 2 வெள்ளி, 1 வெண்கலம்

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் பவினாபென் படேலும், உயரம் தாண்டுதலில் நிஷாத் குமாரும் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்தனர். மேலும் ஆடவர் வட்டு எறிதலில் வெண்கலப் பதக்கம் வென்றார் வினோத்குமார்.

## உயரம் தாண்டுதல்: வெள்ளி வென்றார் நிஷாத் குமார்

- பாராலிம்பிக் ஆடவர் உயரம் தாண்டுதலில் டி47 பிரிவில் இந்தியா பர்வின் நிஷாத் குமார் 2.06 தூரம் குதித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். மேலும் அவர் புதிய ஆசிய சாதனையையும் படைத்தார்.

## வட்டு எறிதல்: வினோத்குமாருக்கு வெண்கலம்

- தடகளம் ஆடவர் வட்டு எறிதல் எஃப் 52 பிரிவில் 19.91 மீ தூரம் எறிந்து மூன்றாவது இடத்துடன் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார். இந்திய வீரர் வினோத் குமார். 41 வயதான வினோத்குமார் இதில் ஆசிய சாதனையையும் நிகழ்த்தி உள்ளார். போலந்தின் கோஸ்விக்ஸ் 20.02 மீ தூரம் எறிந்து தங்கப் பதக்கமும், குரோஷியாவின் வெளிமீர் சான்டோர் 19.98 மீட்டர் தூரத்துடன் வெள்ளியும் வென்றனர்.

## ஆசிய ஜூனியர் குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 2 தங்கம், 1 வெள்ளி

- ஆசிய ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர்கள் தலா 2 தங்கம், 1 வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினர்.
- துபையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஒரு பகுதியாக இறுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. 48 கிலோ எடைப்பிரிவு இறுதிச் சுற்றில் இந்திய வீரர் ரோஹித் சமோலி 3–2 என்ற புள்ளிக் கணக்கில் மங்கோலியாவின் ஓகோன் பயார் டுவிஷின்ஸயாவை போராடி வீழ்த்தி தங்கம் வென்றார். 81 கிலோ எடைப்பிரிவில் கஜகஸ்தான் வீரர் எர்டோஸ் ஷரிபெக்கை 5–0 என்ற புள்ளிக்கணக்கில் தங்கம் வென்றார் பாரத் ஜுன்.
- 70 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் கௌரவ் சைனி 0–5 என்ற புள்ளிக் கணக்கில் உஸ்பெகிஸ்தானின் போல்தேவிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

## இந்தியாவுக்கு 3 தங்கம் உள்பட 9 பதக்கம்

- துபாயில் நடைபெற்ற ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி என 9 பதக்கங்கள் வென்றது.

- ஆடவருக்கான இறுதிச்சுற்றில் 51 கிலோ பிரிவில் விஷ்வாமித்ர சோங்தம் 4–1 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் குஸிபோயேவ் அஹ்மத்ஜோனை வென்றார். 80 கிலோ பிரிவில் விஷால் 5–0 என்ற கணக்கில் கிர்ஜிஸ்தானின் அக்மதோவ் சன்ஸாரை வீழ்த்தினார். மகளிருக்கான 54 கிலோ பிரிவில் நேஹா 3–2 என்ற கணக்கில் கஜகஸ்தானின் அய்ஷா குல்யலுபயேவாவை தோற்கடித்தார்.
- எனினும், ஆடவர் பிரிவில் விஷ்வநாத் சுரேஷ் (48 கிலோ) , வன்ஷாஜ் (63.5 கிலோ), ஜெய்தீப் ராவத் (71 கிலோ) ஆகியோரும், மகளிர் பிரிவில் நிவேதிதா (48 கிலோ), தமன்னா (50 கிலோ), சிம்ரன் (52 கிலோ) ஆகியோரும் இறுதிச்சுற்றில் தோல்வி கண்டு வெள்ளி பெற்றனர்.

### துப்பாக்கி சுடுதல்: அவனி லெகாரா

- திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வுகளில், மகளிருக்கான துப்பாக்கி சுடுதலில் (ஆர்–2) 10மீட்டர் ஏர் ரைஃபிள் ஸ்டான்டிங் எஸ்ஹெச்1–இல் அவனி லெகாரா (19) தங்கம் வென்றார். பாராலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

### வட்டு எறிதல்: யோகேஷ் கதுனியா

- ஆடவர் வட்டு எறிதலில் 'எஃப்56' பிரிவில் யோகேஷ் கதுனியா (24) வெள்ளிப் பதக்கம் வென்றார். பாராலிம்பிக்கிற்காக பயிற்சியாளரே இல்லாத நிலையில் ஓராண்டாகத் தயாராகி சளைக்காமல் பதக்கம் வென்றுள்ளார் யோகேஷ். 2019 உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்றதன் மூலம் டோக்கியோ பாராலிம்பிக்கிற்கு தகுதி பெற்றிருந்தார்.

### ஈட்டி எறிதல்

- ஆடவர் ஈட்டி எறிதலில் 'எஃப்64' பிரிவில் சுமித் அன்டில் (23) உலக சாதனையை 3 முறை முறியடித்து தங்கம் வென்றார். மற்றொரு பிரிவான எஃப்46'–இல் தேவேந்திர ஜஜ்ஜரியா (40) வெள்ளியும், சுந்தர் சிங் குர்ஜர் (25) வெண்கலமும் வென்றனர்.

## 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### எழுத்தாளர் கோணங்கிக்கு விஜயா வாசகர் வட்டத்தின் கி.ரா. விருது

- விஜயா வாசகர் வட்டம், சக்தி மசாலா நிறுவனம், வழங்கும் 2021 ஆம் ஆண்டுக்கான கி.ரா. விருதுக்கு எழுத்தாளர் கோணங்கி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- உலக புத்தக தினத்தையொட்டி கோவை விஜயா பதிப்பகத்தின் வாசகர் வட்டம் சார்பில் சிறந்த படைப்பாளிக்கு கடந்த 5 ஆண்டுகளாக விருது வழங்கப்படுகிறது. படைப்பாளிகளுக்கு ஜெயகாந்தன் விருது, கவிஞர் மீரா விருது, புதுமைப்பித்தன் விருது, சிறந்த அரசு நூலகருக்கு சக்தி வை.கோவிந்தன் விருது, சிறந்த புத்தக விற்பனையாளருக்கு வானதி திருநாவுக்கரசு விருது ஆகியவை வழங்கப்படுகின்றன.
- இந்நிலையில், கடந்த ஆண்டு கி.ரா.வின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய பெயரில் ரூ.2 லட்சம் பரிசுத்தொகையுடன் கூடிய கி.ரா. இலக்கிய விருதை வழங்க நடிகர் சிவகுமாரின் முயற்சியின் பேரில் சக்தி மசாலா துரைசாமி – சாந்தி துரைசாமி தம்பதியினர் முன்வந்தனர். இதையடுத்து கடந்த ஆண்டு கி.ரா.வின் பிறந்த நாளன்று புதுவையில் உள்ள அவரது இல்லத்தில், அவரது கரங்களால் எழுத்தாளர் கண்மணி குணசேகரனுக்கு கி.ரா. விருது வழங்கப்பட்டது.

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### சீரம் நிறுவன தலைவருக்கு "லோகமான்ய திலக்" தேசிய விருது

- கரோனா தடுப்பூசியான கோவிஷீட்டை இந்தியாவில் தயாரித்து வரும் சீரம் நிறுவனத்தின் தலைவர் சைரஸ் பூனாவாலாவுக்கு லோகமான்ய திலக் தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து லோகமான்யதிலக் அறக்கட்டளையின் தீபக் திலக் கூறியதாவது:
- கரோனா பேரிடரில்சைரஸ் பூனாவாலாவின் பணி போற்றுதலுக்குரியது. சைரஸ் பூனாவாலா அவரின் அயராத அரும்பணியால் உருவாக்கப்பட்ட கோவிஷீல்ட் தடுப்பூசியானது பல்லாயிரக்காணக்கான உயிர்களை காப்பாற்ற பெரிதும் உதவியது. குறைந்த விலையில் பல்வேறு வகையான தடுப்பூசிகளை தயாரிப்பதில் சைரஸ் பூனாவாலா முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறார்.
- எனவே, அவரது சேவையைப் போற்றும் விதமாக 2021–ஆம் ஆண்டுக்கான லோகமான்ய திலக் தேசிய விருதை சைரஸ் பூனாவாலாவுக்கு வழங்கி கௌரவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 13–ஆம் தேதி நடைபெறவுள்ள விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது என்றார்.

### இந்திய பொருளாதார வல்லுநர்களுக்கு C.R.ராவ் நூற்றாண்டு விருது

- இந்திய பொருளாதார வல்லுநர்களான Dr.ஜகதீஷ்பகவதி Dr.C.ரங்கராஜன் ஆகியோருக்கு இந்திய பொருளாதார சமூக அறக்கட்டளையின் பேராசிரியர் C.R.ராவ் நூற்றாண்டு தங்கப்பதக்கம் வழங்கப்பட உள்ளது.
- இந்திய வம்சாவளி பொருளாதார நிபுணர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த விருது வழங்கப்படுகிறது.

### வயலின் கலைஞர் கன்னியாகுமரிக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தில் புகழாரம்

- வயலின் கலைஞர் ஏ.கன்னியாகுமரி மிகச்சிறந்த இசைத் தூதராகத் திகழ்வதாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் புகழாரம் சூட்டப்பட்டது.
- இதுகுறித்து நாடாளுமன்ற மேலவையான பிரதிநிதிகள் சபையில் இந்திய வம்சாவளி எம். பி.ராஜா கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது:
- வயலின் கலைஞர் ஏ.கன்னியாகுமரி, கர்நாடக சங்கீதப் பாரம்பரியத்தின் எழிலை உலகெங்கும் ரசிகர்களிடம் கொண்டு செல்லும் மிகச் சிறந்த இசைத் தூதராகத் திகழ்கிறார்.
- கர்நாடக சங்கீதத்தை அடுத்த தலைமுறையினரிடையே விதைக்கும் பணியை கன்னியாகுமரி செய்து வருகிறார்.
- இதற்காக, கட்டணம் எதுவும் வசூலிக்காமலேயே பிறருக்கு அவர் இசை பயிற்றுவித்து வருகிறார். வயலின் இசை மேதையான அவர், சிறந்த இசையமைப்பாளராகவும் இசைஆசிரியையாகவும் விளங்குகிறார். கர்நாடக சங்கீதத்தில் அவரது ஞானம் மற்றும் இசைத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை கடந்த 2015–ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது மூலம் இந்திய அரசு அங்கீகரித்துள்ளது.

### கிரசென்ட் கல்வி நிறுவனத்திற்கு மத்திய அரசின் விருது

- வண்டலூர் பி.எஸ்.அப்துல் ரகுமான் கிரசென்ட் உயர் கல்வி நிறுவனத்திற்கு மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற கல்வித் திட்டத்தின் கீழ் சிறந்த பசுமை வளாக விருது வழங்கப்பட்டுள்ளது.
- நாட்டின் தூய்மை செயல் திட்டத்தின் அங்கமாக மாவட்ட அளவில் கல்வி நிறுவன வளாகங்களில் பசுமை மரங்கள் வளர்ப்பு, கழிவுநீர் மேலாண்மை, மரபுசாரா எரிசக்தி பயன்பாடு, தூய்மை வளாக மேலாண்மை உள்ளிட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களுக்கு மத்திய அரசு பசுமை வளாக விருதுடன் ரொக்கப் பரிசாக ரூ. 5000 வழங்கி ஊக்குவித்து வருகிறது.

### தமிழகத்தின் 8 காவல் ஆய்வாளர்களுக்கு மத்திய அரசு விருது

- தமிழக காவல்துறையில் 8 ஆய்வாளர்களுக்கு சிறந்த புலனாய்வுக்கான மத்திய உள்துறை அமைச்சர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- புலனாய்வில் சிறந்து விளங்கும் காவல்துறை அதிகாரிகளுக்கு சில ஆண்டுகளாக மத்திய உள்துறை அமைச்சரின் விருது வழங்கப்பட்டு வருகிறது. மத்திய உள்துறை விருது வழங்கப்பட்டு வருகிறது. மத்திய உள்துறை அமைச்சகம், இந்த

விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 152 நபர்களின் பெயர்களை அறிவித்தது.

- இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 8 காவல் ஆய்வாளர்கள் விவரம்:
- நாகப்பட்டினம் சிபிசிஐடி ஆய்வாளர் எம்.சரவணன், திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஏ.அன்பரசி, கடலூர் மாவட்டம் புதுச்சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் பி.கவிதா, திருவள்ளூர் மாவட்டம் வெங்கல் காவல் நிலைய ஆய்வாளர் ஆர்.ஜெயவேல், செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் காவல் நிலைய ஆய்வாளர் கே.கலைச்செல்வி, சென்னை நுண்ணறிவுப் பிரிவு காவல் ஆய்வாளர் ஜி.மணிவண்ணன், சென்னை குரோம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் பி.ஆர்.சிதம்பரமுருகேசன், கன்னியாகுமரி மாவட்டம் தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் சி.கண்மணி ஆகியோர் மத்திய உள்துறை அமைச்சர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## ஆண்டுதோறும் ஜூன் 3–இல் "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது"

- சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு புத்துயிர் அளிக்கப்படும். கடந்த 2010–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் இருக்கும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, இனி ஆண்டுதோறும் ஜூன் மாதம் 3–ஆம் தேதி ரூ.10 லட்சத்துடன் வழங்கப்படும்.
- ஆட்சி மொழி: நிர்வாகம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்றால், அரசு தனது பணிகளை மக்களின் மொழியில் செயல்படுத்த வேண்டும். இது தொடர்பாக, தலைமைச் செயலகம் முதல் மாநிலத்தின் அனைத்து துறை அலுவலகங்கள் வரையிலும், தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும். தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒருங்குறி எழுத்துரு அனைத்து அரசுத் துறைகளிலும் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

## தமிழக காவல்துறையில் 24 பேருக்கு குடியரசுத் தலைவர் விருது

- தமிழக காவல்துறையில் 24 பேருக்கு இந்திய குடியரசுத் தலைவர் விருது கிடைத்துள்ளது.
- இந்திய குடியரசுத் தலைவரின் தகைசால் பணிக்கான விருதுக்கு தமிழக காவல்துறையில் மாநில குற்ற ஆவண காப்பக ஏடிஜிபி வினித்தேவ் வான்கடே உளுந்தூர்பேட்டைதமிழ்நாடு சிறப்புக் காவல் படை 10–ஆம் பணி கமாண்டன்ட் து.ஜெயவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதேபோல இந்திய குடியரசு தலைவரின் பாராட்டத்தக்கப் பணிக்கான காவல் விருதுக்கு 22 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- அவர்கள் விவரம்

1. விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மு.மனோகர்,
2. சென்னை பெருநகர காவல்துறையின் மத்தியக் குற்றப்பிரிவு துணை ஆணையர் வெ.பாலசுப்பிரமணியன்,
3. சென்னை சிபிசிஐடி காவல் கண்காணிப்பாளர் மு.தில்லை நடராஜன்,
4. திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு சிறப்புக் காவல்படை முதல் அணி கமாண்டன்ட் மு.ஆனந்தன்,
5. புதுதில்லி தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 8ஆம் அணி கமாண்டன்ட் த.செந்தில்குமார்,
6. சென்னை காவல்துறையின் ஆயுதப்படை கூடுதல் துணை ஆணையர் மு.ராதாகிருஷ்ணன்,
7. ஆவடி தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 5–ஆம் அணி துணை கமாண்டன்ட் பெ.சிவன்,
8. தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு குழுமம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ரா.சுஷில்குமார்,
9. சென்னை காவல்துறையின் ஆயுதப்படை உதவி ஆணையர் ஆ.நடராஜன்,
10. வேலூர் ஆயுதப்படை காவல் துணைக் கண்காணிப்பாளர் ஜா.ஜெயகரன்,
11. திருப்பத்தூர் மாவட்ட க்யூ பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் சா.ராஜகாளீஸ்வரன்,
12. விருதுநகர் லஞ்ச ஒழிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் பா.கருப்பையா,
13. சென்னை எஸ்பிசிஐடி காவல் துணைக் கண்காணிப்பாளர் தி.கோபால்,
14. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் க.நமச்சிவாயம்
15. கள்ளக்குறிச்சி காவல் துணைக் கண்காணிப்பாளர் து.ராமநாதன்,
16. சென்னை லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் து.செல்வக்கண் டேவிட்

17. சென்னை எஸ்பிசிஐடி ஆய்வாளர் தி.சதாசிவம்,
18. சென்னை எஸ்பிடிஐடி ஆய்வாளர் அ.வெல்கம் ராஜசீலன்,
19. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமம் ஆய்வாளர் சி.சு.கௌரி,
20. ஈரோடு சிறப்பு அதிரடிப்படை உதவி ஆய்வாளர் வே.சண்முகம்,
21. கோயம்புத்தூர் க்யூ பிரிவு உதவி ஆய்வாளர் சா.ரூபன்,
22. சென்னை லஞ்ச ஒழிப்புத்துறை தலைமையிட உதவி ஆய்வாளர் ச.ரங்கசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ஜம்மு–காஷ்மீர் காவல் துறை அதிகாரி பாபு ராமுக்கு "அசோக சக்ரா" விருது

- இந்தியாவில் வீரதீரச் செயல்களுக்கு அளிக்கப்படும் உயரிய விருதான "அசோக சக்ரா" விருது ஜம்மு–காஷ்மீர் காவல்துறை பாபு ராமுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- 'கீர்த்தி சக்ரா' விருது: வீரதீரச்செயலுக்கான இரண்டாவது உயரிய விருதான 'கீர்த்தி சக்ரா' விருது ஜம்மு–காஷ்மீர் காவல் துறையைச் சேர்ந்த காவலர் அல்தாஃப் ஹுசைனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீநகரில் உள்ள ராத்போரா பகுதியை சேர்ந்த இவர், கடந்த ஆண்டு கந்தர்பாலில் தனிப் பாதுகாப்பு அலுவலராகப் பணியமர்த்தப்பட்டிருந்தார்.
- 'சௌர்ய சக்ரா' விருது: மூன்றாவது உயரிய விருதான 'சௌர்ய சக்ரா' விருது ராணுவத்தைச் சேர்ந்த 6 பேர் உள்பட 15 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த விருது ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் அருண் குமார் பாண்டே, மேஜர் ரவிகுமார் சௌதரி, கேப்டன் அஷுதோஷ் குமார், கேப்டன் விகாஸ் கத்ரி, ராணுவ வீரர்கள் முகேஷ் குமார், நீரஜ் ஹலாவத் ஆகிய 6 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- மெட்ராஸ் படைப் பிரிவைச் சேர்ந்தவர்: 'சௌர்ய சக்ரா' விருது அறிவிக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவரான ராணுவ கேப்டன் அஷுதோஷ் குமார் மெட்ராஸ் படைப்பிரிவைச் சேர்ந்தவர். கடந்த ஆண்டு ஜம்மு–காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் நடைபெற்ற மோதலின் போது அவர் உயிரிழந்தார்.
- கோப்ரா கமாண்டோக்களுக்கும் கடந்த 2019–ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக அங்கு மாவோயிஸ்ட் வன்முறையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சுக்மா மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையின் (சிஆர்பிஎஃப்) கோப்ரா பிரிவு துணை கமாண்டன்ட் சிதேஷ் குமார், உதவி ஆய்வாளர் மஞ்ஜிந்தர் சிங், காவலர் சுனில் சௌதரி ஆகிய மூவர் தீரத்துடன் செயல்பட்டு 4 நக்ஸல்களை கொன்றனர்.

### முதுபெரும் தலைவர் சங்கரய்யாவுக்கு "தகைசால் தமிழர்" விருது

- முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு "தகைசால் தமிழர்" விருதினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அளித்தார்.
- சென்னை குரோம்பேட்டையில் உள்ள சங்கரய்யாவின் இல்லத்துக்கு நேரில் சென்று விருதினை வழங்கினார். இந்த விருதானது ரூ.10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் அடங்கியது.

## தமிழகம், புதுவை ஆசியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது

- ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை போற்றும் வகையில் அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5–ஆம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாட்டில் ஆசிரியர் பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு இந்நாளில் தேசிய நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.
- அந்த வகையில் இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 44 ஆசிரியர்களை மத்தியக் கல்வி அமைச்சகம் தேர்வு செய்துள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழகத்தில் இருந்து திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை கே.ஆஷா தேவி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை டி. லலிதா ஆகிய இருவரும் விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஆசிரியர் ஆஷா தேவி மாணவர்களுக்கு 10–க்கும் மேற்பட்ட தனித்திறன் பயிற்சிகள் வழங்குவது, மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார். அதேபோன்று ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றுக் கொடுக்கும் செயல்முறைகளை ஆசிரியர் லலிதா அறிமுகப்படுத்தியுள்ளார்.

## முகமது அசாம்

- தெலுங்கானா மாநிலம் கரீம் நகரை சேர்ந்த முகம்மது அசாம் தேசிய இளைஞர் விருது அளித்து மத்திய விளையாட்டு துறை அமைச்சர் அனுராக்சிங் தாக்கூரால் கௌரவிக்கப்பட்டார்.

## வேதாரண்யம் மாணவிக்கு "கோல்டன்" விசா

- துபை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பார்மஸி பட்டப் படிப்பில் சிறப்பிடம் பெற்ற வேதாரண்யம் மாணவிக்கு, அந்நாட்டு அரசு 10 ஆண்டுகளுக்கான கோல்டன் விசா வழங்கி பாராட்டியுள்ளது.
- நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள தோப்புத்துறையை சேர்ந்தவர் ஷர்மினா பேகம் பஷீர் அகமது. இவர், துபை மருத்துவ பல்கலைக்கழகத்தில் பார்மஸி முதுகலை பட்டம் படித்து முடித்துள்ளார்.

## மடூர் பாய்முடைவோருக்கு தேசிய விருது

- மடூர் கத்தி எனப்படும் புவிசார் குறியீடு பெற்ற பாய் முடைவதில் வல்லவரான கவுரி ராணி ஜானி, கவுரி பாலா தாஸ் போன்றோருக்கு தேசிய விருது அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த மடூர் கத்தி பாய் மேற்கு வங்க மாநிலம் மெதின்பூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் புவிசார் குறியீடு பெற்ற பொருளாகும்.

## மெர்ல்போர்ன் இந்திய திரைப்பட திருவிழா–2021

- 2021ம் ஆண்டிற்கான மெர்ல்போர்ன் இந்திய திரைப்பட திருவிழா 2021 விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

**விருது பட்டியல்**

- சிறந்த திரைப்படம் – சூரரைப் போற்று
- சிறந்த செயல்பாடு – சூர்யா (சூரரைப் போற்று)
- சிறந்த செயல்பாடு (பெண்) – வித்யா பாலன் (ஷெர்னி), நிமிஷா சிஜயன் (The Great Indian Kithen)
- சிறந்த இயக்குநர் – அனுராக் பாசு
- சிறந்த தொடர் – மிர்காபூர்
- சிறந்த நடிகை – சமந்தா அகினேனி

## EASE மறுசீரமைப்பு விருதுகள்

- வங்கி மறுசீரமைப்பு EASE 3.0 கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் வெளியீடுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட தரவரிசையில் SBI முதலிடத்தில் உள்ளது.
- சில மையக்கருத்துகள் அடிப்படையில் வெற்றி பெற்ற வங்கிகள் விவரம்.

| Theme | Winner Bank |
|---|---|
| Top bank in improvement from March Baseline | Indian Bank |
| Theme 1: Smart Lending for Aspiring India | Bank of Baroda |
| Theme 2: Tech–enabled ease of Banking | SBI |
| Theme 3: Institutionalized Prudent Banking | Bank of Baroda |
| Theme 4: Governance and Outcome centric HR | Union Bank of India |
| Theme 5: Deepening FI and Customer Protection | Union Bank of India |

# 1.9 கலாச்சாரம்

## கீழடியில் வாணிபத்திற்கான வெள்ளி நாணய சான்று கண்டெடுப்பு

- மதுரை அருகே சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்ட திருப்புவனம் அடுத்த கீழடியில் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் மூன்று கட்ட அகழாய்வு பணிகள் இந்தியத் தொல்லியல் துறை சார்பாக நடைபெற்றது.
- நான்கு, ஐந்து, 6ஆம் கட்ட அகழாய்வுகள் தமிழ்நாடு தொல்லியல் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. நடந்து முடிந்த 6ஆம் கட்ட அகழாய்வில் கீழடி மட்டுமல்லாமல் கொந்தகை, அகரம், மணலூர் உள்ளிட்ட நான்கு இடங்களில் அகழாய்வு நடைபெற்றது.
- 7ஆம் கட்ட அகழாய்வில் நடைபெற்று வரும் நிலையில் வணிகத்திற்குச் சான்றாக, வெள்ளி நாணயம் கிடைத்துள்ளது. கிமு 200 முதல் 600ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என தொல்லியல்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## பழங்குடிகள் நடனம்

- உதகையிலுள்ள ராஜ்பவன் மாளிகையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில், நீலகிரியின் பூர்விக குடிகளான தோடர் மற்றும் கோத்தர் இன பழங்குடி மக்களின் பாரம்பரிய நடனங்களைக் கண்டுகளித்தார்.

## தாரோ சிகோவின் கல்லறை

- ஹிமாபுன் காலத்திற்கு பிந்தைய முகாலய இளவரசர் தாரா சிகோவின் கல்லறையை கண்டுபிடித்ததில் இன்னும் மர்மம் நீடிப்பதாக இந்திய தொல்லியல் துறையால் அமைக்கப்பட்ட குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தாரோ சிகோ ஷாஜகானின் மகனாவார். அவரது சமாதியும் ஹிமாயுன் கல்லறைப் பகுதியிலேயே அமைந்துள்ளதாக கருதப்படுகிறது.

## சிந்துசமவெளி பகுதிகளில் திராவிட மொழிகளுக்கான சான்றுகள்

- சிந்துசமவெளி மக்கள் பேசிய மொழி குறித்து சமீபத்தில் வெளியிடப்பட்ட Dravidian Languages in Indus Civilization: Ultraconserved Dravidian Toothword Reveals Deep Linguistic Ancestry and Supports Genetics", என்ற இதழ் பகதா அன்சுமலி முகோபாத்யாய் அவர்களால் வெளியிடப்பட்டது.
- இந்த இதழ் தெற்கு ஆசியாவின் மொழி வரலாற்றை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

## அகரத்தில் சுடுமண்ணலான வளையம்

- கீழடி, அகரம், கொந்தகை பகுதியில் 7ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்ற வருகிறது.
- அகரம் பகுதியில் சங்காலத்திய சுடுமண்ணால் செய்யப்பட்ட வளையம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## பொற்பனைக்கோட்டை அகழாய்வில் செங்கல் கால்வாய் கட்டுமானம்

- புதுக்கோட்டை மாவட்டம், பொற்பனைக்கோட்டை அகழாய்வில், செங்கற்களால் கட்டப்பட்ட கால்வாய் போன்ற கட்டமைப்பு வெளிக்கொணரப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை அருகேயுள்ள பொற்பனைக்கோட்டைப் பகுதியில் சங்க காலக்கோட்டை இருந்ததற்கான, சுமார் 1.63 கிலோ மீட்டர் நீளத்தில் வட்ட வடிவிலான சுற்றுச்சுவர் உள்ளிட்ட அடையாளங்களைக் கொண்டுள்ளது.
- இங்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் இனியன் தலைமையிலான குழுவினர் கடந்த 13 நாள்களாக அகழாய்வை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு
- முன்பு இந்த அகழாய்வுக் குழிகளில் இரும்பாலான கொக்கி, மண்பானைகள், குடுவையின் மூடியிலுள்ள கூம்பு போன்ற மேல்பகுதி, விளையாட்டுப் பொருளாகக் கருதப்படும் சுடுமண் வட்டச்சில்லு போன்றவையும் கண்டெடுக்கப்பட்டன.

## அகரத்தில் சுடுமண்ணாலான முத்திரை

- அகரம் பகுதியில் 7ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றது. அங்கு உருளை வடிவான மூன்று அடுக்குகளில் அழகுப்படுத்தப்பட்ட 2.15 செ.மீ உயரம் கொண்ட 25 கிராம் எடை கொண்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட முத்திரை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## பெரம்பலூர் அருகே பழைமையான கல் செக்கு கண்டெடுப்பு

- பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கலம் கிராமத்தில் சுமார் 900 ஆண்டுகள் பழைமையான, கல்லால் ஆன எண்ணெய் பிழியும் செக்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இதன் உயரம் 33 செ.மீ., வெளி விட்டம் 71 செ.மீ., உள் விட்டம் 64 செ.மீ., செக்கின் நடுவிலுள்ள குழியின் ஆழம் 30 செ.மீ., விட்டம் 20 செ.மீ. ஆகும். செக்கின் பக்கவாட்டுப் பகுதியில் இரண்டு வரிகளில் ஸ்ரீ மல்லடி நாட்டான் னிடுவித்த(ச்) செக்குப் பந்தல் லம்பலம் எனும் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது.

## கீழடி அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.
- சிவகங்கை மாவட்டம், கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வருகின்றன. இதில் சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## கீழடி அகழாய்வில் தந்தத்தினாலான பகடை கண்டெடுப்பு

- கீழடியில் நடைபெற்றுவரும் 7–ஆம் கட்ட அகழாய்வில், தந்தத்தில் செய்யப்பட்ட கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.
- சிவகங்கை மாவட்டம் கீழடி அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக, அகரத்தில் 8 குழிகள், மணலூரில் 3 குழிகள், கொந்தகையில் 5 குழிகள், கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.
- இதில், சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என ஏராளமான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தந்தத்தினாலான பகடை அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து தொல்லியலாளர்கள் தெரிவித்தது: கீழடி உள்ளிட்ட 4 பகுதிகளில் செப்டம்பர் மாதம் வரை அகழாய்வுப் பணிகள் நடைபெறும்.

# 1.10 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

## இந்தியாவில் முதல்முறையாக வியத்நாம் துணைத் தூதரகம்

- இந்தியாவில்முதல்முறையாகவியத்நாம்துணைத் தூதரகம் பெங்களூரில் திறக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து பெங்களூரில் வியத்நாம் நாட்டுக்கான இந்திய தூதர் பான் சன்ஹ் செள செய்தியாளர்களிடம் கூறியதாவது:
- பெங்களூரில் திறக்கப்பட்டுள்ள வியத்நாம் துணைத்தூதரகத்தின் கௌரவ துணைத்தூதராக என்.எஸ்.சீனிவாஸ் மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். வியத்நாம் மற்றும் இந்தயாவுக்கு இடையே முதலீடுகளை மேம்படுத்துவதற்காகவே துணைத் தூதரகம் திறக்கப்பட்டுள்ளது. வியத்நாமின் 80 சதவீத மக்கள் பௌத்த மதத்தை பின்பற்றி வருவதால், இந்தியாவுக்கும் வியத்நாமுக்கும் இடையே வரலாற்று ரீதியான தொடர்பு உள்ளது.

# 1.11 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

## சாகித்ய அகாடமி விருதுகள்

- யசோதரா மிஷ்ரா மற்றும் ஓம்செரி N.N. பிள்ளை ஆகியோருக்கு 2020ம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது, ஒடியா மற்றும் மலையாளம் மொழிகளின் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.
- மிஷ்ராவின் சமுத்ரகுலா காரா மற்றும் N.N.பிள்ளையின் அகாஸ்மிகம் ஓம் செரியுடே ஓர்மக் குறிப்புகள்" என்ற புத்தகங்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

# 1.12 நியமனங்கள்

## கடற்படை துணைத் தளபதியாக எஸ். என். கோர்மாடே பதவியேற்பு

- கடற்படை துணைத் தளபதியாக எஸ்.என். கோர்மாடே பொறுப்பேற்றுக் கொண்டார்.
- தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படையில் 39 ஆண்டு சேவையாற்றிய பின்துணைத் தளபதி பொறுப்பில் இருந்து ஓய்வுபெற்ற ஜி.அசோக்குமாரிடம் இருந்து அப்பொறுப்பை எஸ். என். கோர்மாடே ஏற்றுக் கொண்டார்.

## தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக தீபக் தாஸ் பொறுப்பேற்பு

- புதிய தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக (சிஜிஏ) தீபக் தாஸ் ஞாயிற்றுக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். 25–ஆவது தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக அவர் பணியாற்ற இருக்கிறார்.
- நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால் நியமிக்கப்பட்ட தீபக் தாஸ், 1986–ஆம் ஆண்டு இந்திய குடிமைக் கணக்கு பணிப் பிரிவைச் சேர்ந்தவர்.
- 35 ஆண்டுகால பணிக் காலத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் மற்றும் வனம், தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் கனரக தொழில் துறைகள், வர்த்தகம் மற்றும் ஜவுளி, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன், சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கப்பல், உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களிலும், மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்திலும் அவர் முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார். இந்திய குடிமைக் கணக்குப் பணியின் பயிற்சி அகாதெமியான அரசு கணக்கு மற்றும் நிதி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

## மியான்மர் புதிய பிரதமர்

- மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. தற்போது இராணுவ தலைமை தளபதியாக உள்ள மின் ஆங் ஹிலாங் அந்நாட்டின் பிரதமராக தன்னை நியமனம் செய்து கொண்டுள்ளார்.

## வருமான வரி புலனாய்வுப் பிரிவு தலைமை இயக்குநர் பொறுப்பேற்பு

- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமான வரித் தலைமை இயக்குநராக (புலனாய்வு) சுனில் மாத்தூர் பொறுப்பேற்றுள்ளார்.இவர் பதவி உயர்வு பெற்று, வாராணசியிலிருந்து மாற்றலாகி சென்னை வந்துள்ளார்.

## தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர்

- ரேகா ஷர்மா தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவராக 3 ஆண்டுகளுக்கு பதவி நீட்டிப்பு பெற்றுள்ளார்.
- 57 வயதான ரேகா ஷர்மா 2018ல் நியமனம் செய்யப்பட்டனர்.

## அண்ணா பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர்

- அண்ணா பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக, முனைவர் ஆர்.வேல்ராஜை நியமித்து தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உத்தரவிட்டுள்ளார்.
- அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த எம்.கே.சூரப்பாவின் பதவிக்காலம் கடந்த ஏப்ரல் 11–ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது.

துணைவேந்தர் பதவிக்கு நாடு முழுவதும் இருந்து 10 பேர் விண்ணப்பித்திருந்தநிலையில், அதில் 10 பேரை நேர்முகத் தேர்வுக்குத் தகுதியானவர்களாகத் தேடல் குழு இறுதி செய்தது.

- அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் 5 பேர், சென்னை ஐஐடி பேராசிரியர்கள் இருவர் ஆகியோர் உள்ளிட்ட 10 பேருக்கான நேர்காணல் ஆகஸ்ட் 9–ஆம் தேதி நடத்தப்பட்டது. இதில் இருந்து 3 பேர் கொண்ட பட்டியல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## வங்கி முறைகேடுகள் விழிப்புணர்வில் நீரஜ் சோப்ரா

- ரிசர்வ வங்கி முறைகேடுகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் தூதராக ஒலிம்பிக் ஈட்டி எறிதலில் தங்க பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவை நியமனம் செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளது.

## உள்துறைச் செயலருக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு

- மத்திய உள்துறைச் செயலர் அஜய் குமார் பல்லாவுக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு அளித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அவரது தற்போதைய பதவிக்காலம் அடுத்த வாரம் நிறைவடையவுள்ள நிலையில், இந்தப் பணி நீட்டிப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் இந்த அறிவிப்பை வெளியிட்டது.
- அஸ்ஸாம்–மேகாலயம் பிரிவில் இருந்து 1984–ஆம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியான அஜய் பல்லா, கடந்த 2019–ஆம் ஆண்டு உள்துறை செயலராக நியமிக்கப்பட்டார். 60 வயது நிறைவடைந்த நிலையில் கடந்த ஆண்டு நவம்பருடன் அவர் ஓய்வு பெற இருந்தார். ஆனால், அப்போது அவருக்கு 2021 ஆகஸ்ட் வரை பணி நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இப்போது மேலும் ஓராண்டுக்குப் பணி நீட்டிப்பு பெற்றுள்ளார்.

## ட்விட்டர் நிறுவனத்தின் இந்திய தலைமை அதிகாரி அமெரிக்காவுக்கு மாற்றம்

- ட்விட்டர் நிறுவனம் தனது இந்திய தலைமை அதிகாரி மணீஷ் மகேஸ்வரியை அமெரிக்காவுக்கு பணியிடமாற்றம் செய்துள்ளது.
- அவர் பணியிட மாற்றம் செய்யப்பட்டதற்கான காரணத்தை அந்த நிறுவனம் தெரிவிக்கவில்லை. அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் உள்ள அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் வருவாய் ஈட்டுதல் மற்றும் செயல்பாடு பிரிவின் மூத்த இயக்குநராக அவர் பணியாற்றவுள்ளார்.
- மணீஷ் மகேஸ்வரியின் பணியிட மாற்ற விவரத்தை ட்விட்டர் நிறுவனத்தின் ஜப்பான், ஆசிய பசிபிக் பிரிவு துணைத் தலைவர் யு சச மோடோ உறுதி செய்தார்.

## கடற்படை துணைத் தளபதியாக எஸ். என். கோர்மாடே பதவியேற்பு

- கடற்படை துணைத் தளபதியாக எஸ்.என். கோர்மாடே பொறுப்பேற்றுக் கொண்டார்.
- தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படையில் 39 ஆண்டு சேவையாற்றிய பின்துணைத் தளபதி பொறுப்பில் இருந்து ஓய்வுபெற்ற ஜி.அசோக்குமாரிடம் இருந்து அப்பொறுப்பை எஸ். என். கோர்மாடே ஏற்றுக் கொண்டார்.

## தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக தீபக் தாஸ் பொறுப்பேற்பு

- புதிய தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக (சிஜிஏ) தீபக் தாஸ் ஞாயிற்றுக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். 25–ஆவது தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டு அதிகாரியாக அவர் பணியாற்ற இருக்கிறார்.
- நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால் நியமிக்கப்பட்ட தீபக் தாஸ், 1986–ஆம் ஆண்டு இந்திய குடிமைக் கணக்கு பணிப் பிரிவைச் சேர்ந்தவர்.
- 35 ஆண்டுகால பணிக் காலத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் மற்றும் வனம், தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் கனரக தொழில் துறைகள், வர்த்தகம் மற்றும் ஜவுளி, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன், சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கப்பல், உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களிலும், மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்திலும் அவர் முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார். இந்திய குடிமைக் கணக்குப் பணியின் பயிற்சி அகாதெமியான அரசு கணக்கு மற்றும் நிதி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

## அண்ணா பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தர்

- அண்ணா பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக, முனைவர் ஆர்.வேல்ராஜை நியமித்து தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உத்தரவிட்டுள்ளார்.
- அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த எம்.கே.சூரப்பாவின் பதவிக்காலம் கடந்த ஏப்ரல் 11–ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது. துணைவேந்தர் பதவிக்கு நாடு முழுவதும் இருந்து 10 பேர் விண்ணப்பித்திருந்தநிலையில், அதில் 10 பேரை நேர்முகத் தேர்வுக்குத் தகுதியானவர்களாகத் தேடல் குழு இறுதி செய்தது.
- அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் 5 பேர், சென்னை ஐஐடி பேராசிரியர்கள் இருவர் ஆகியோர் உள்ளிட்ட 10 பேருக்கான நேர்காணல் ஆகஸ்ட் 9–ஆம் தேதி நடத்தப்பட்டது. இதில் இருந்து 3 பேர் கொண்ட பட்டியல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## மியான்மர் புதிய பிரதமர்

- மியான்மர் நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. தற்போது இராணுவ தலைமை தளபதியாக உள்ள மின் ஆங் ஹிலாங் அந்நாட்டின் பிரதமராக தன்னை நியமனம் செய்து கொண்டுள்ளார்.

## வருமான வரி புலனாய்வுப் பிரிவு தலைமை இயக்குநர் பொறுப்பேற்பு

- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமான வரித் தலைமை இயக்குநராக (புலனாய்வு) சுனில் மாத்தூர் பொறுப்பேற்றுள்ளார்.இவர் பதவி உயர்வு பெற்று, வாராணசியிலிருந்து மாற்றலாகி சென்னை வந்துள்ளார்.

## தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர்

- ரேகா ஷர்மா தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவராக 3 ஆண்டுகளுக்கு பதவி நீட்டிப்பு பெற்றுள்ளார்.
- 57 வயதான ரேகா ஷர்மா 2018ல் நியமனம் செய்யப்பட்டனர்.

## வங்கி முறைகேடுகள் விழிப்புணர்வில் நீரஜ் சோப்ரா

- ரிசர்வ வங்கி முறைகேடுகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் தூதராக ஒலிம்பிக் ஈட்டி எறிதலில் தங்க பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவை நியமனம் செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளது.

## உள்துறைச் செயலருக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு

- மத்திய உள்துறைச் செயலர் அஜய் குமார் பல்லாவுக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு அளித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அவரது தற்போதைய பதவிக்காலம் அடுத்த வாரம் நிறைவடையவுள்ள நிலையில், இந்தப் பணி நீட்டிப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் இந்த அறிவிப்பை வெளியிட்டது.
- அஸ்ஸாம்–மேகாலயம் பிரிவில் இருந்து 1984–ஆம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியான அஜய் பல்லா, கடந்த 2019–ஆம் ஆண்டு உள்துறை செயலராக நியமிக்கப்பட்டார். 60 வயது நிறைவடைந்த நிலையில் கடந்த ஆண்டு நவம்பருடன் அவர் ஓய்வு பெற இருந்தார். ஆனால், அப்போது அவருக்கு 2021 ஆகஸ்ட் வரை பணி நீட்டிப்பு அளிக்கப்பட்டது. இப்போது மேலும் ஓராண்டுக்குப் பணி நீட்டிப்பு பெற்றுள்ளார்.

## டிஜிட்டல் – நிர்வாக நடைமுறை எளிமையாக்கல்: அரசு ஆலோசகராக டேவிதார் நியமனம்

- தமிழக அரசின் மின் ஆளுகைத் துறைக்குட்பட்ட டிஜிட்டல் மற்றும் நிர்வாக நடைமுறை எளிமையாக்கல் நடவடிக்கைகளுக்கான ஆலோசகராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி பி.டபிள்யூ. சி.டேவிதார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதற்கான அறிவிப்பை முதன்மைச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்டுள்ளார். இதுகுறித்து வெளியிடப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: தமிழகத்தில் வெளிப்படையான ஆட்சி நிர்வாகத்தை மேற்கொள்ளும் நோக்கில் மின் ஆளுகை நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும் என்றும் அதன் வாயிலாக எங்கேயும், எப்போதும் அரசின் சேவைகளைப் பெற முடியும் என்றும் சட்டப் பேரவையில் ஆளுநர் அண்மையில் பேசினார்.

## ஜாம்பியா புதிய அதிபர்

- 2021 ஜாம்பியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஹகைன்டி ஹிசிலிமா வெற்றி பெற்றுள்ளார்.

## 3 பெண் நீதிபதிகள் உள்பட 9 பெயர்கள் பரிந்துரை

- உச்சநீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை நிரப்புவதற்காக 3 பெண் நீதிபதிகள் உள்பட 9 பேரின் பெயர்களை தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- உச்சநீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதி பணியிடங்கள் 34–ஆக உள்ள நிலையில், கடந்த 12–ஆம் தேதி நீதிபதி ஆர்.எஃப். நாரிமன் ஓய்வு பெற்றதுடன் உச்சநீதிமன்றத்தில் பணியிலிருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை 25–ஆக குறைந்தது. உச்சநீதிமன்ற நீதிபதி நவீன் சின்ஹா ஓய்வுபெற்றதால், அந்த எண்ணிக்கை 24–ஆக குறைந்தது. உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் கடந்த 2019, மார்ச் 19–ஆம் தேதி ஓய்வு பெற்றது முதல், புதிதாக நீதிபதிகள் நியமனம் எதுவும் உச்சநீதிமன்றத்தில் நடைபெறவில்லை.
- இந்தச் சூழலில் நீதிபதி காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக, தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையில் நீதிபதிகள் யு.யு.லலீத், ஏ.எம்.கான்வில்கர், டி.ஒய். சந்திரசூட் எல்.நாகேஸ்வர ராவ் ஆகியோரைக் கொண்ட உச்சநீதிமன்ற கொலீஜியம், நீதிபதி பணியிடங்களுக்கான பெயர்களை இறுதி செய்து, 3 பெண் நீதிபதிகள் உள்பட 9 பெயர்களை மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதியாக சென்னை உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான எம்.எம். சுந்தரேஷ் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

## ட்விட்டர் நிறுவனத்தின் இந்திய தலைமை அதிகாரி அமெரிக்காவுக்கு மாற்றம்

- ட்விட்டர் நிறுவனம் தனது இந்திய தலைமை அதிகாரி மணீஷ் மகேஸ்வரியை அமெரிக்காவுக்கு பணியிடமாற்றம் செய்துள்ளது.
- அவர் பணியிட மாற்றம் செய்யப்பட்டதற்கான காரணத்தை அந்த நிறுவனம் தெரிவிக்கவில்லை. அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் உள்ள அந்த நிறுவனத்தின் அலுவலகத்தில் வருவாய் ஈட்டுதல் மற்றும் செயல்பாடு பிரிவின் மூத்த இயக்குநராக அவர் பணியாற்றவுள்ளார்.
- மணீஷ் மகேஸ்வரியின் பணியிட மாற்ற விவரத்தை ட்விட்டர் நிறுவனத்தின் ஜப்பான், ஆசிய பசிபிக் பிரிவு துணைத் தலைவர் யு சச மோடோ உறுதி செய்தார்.

## வங்கி முறைகேடுகளை களையும் ஆலோசனைக் குழுவின் தலைவராக T.M.பாஷின் நியமனம்

- மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் வங்கி முறைகேடுகளை களையும் ஆலோசனைக் குழுவின் தலைவராக T.M.பாஷின் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 50 கோடிக்கும் அதிகமான முறைகேடுகள் இந்த குழுவால் விசாரிக்கப்படும்.

**மத்திய கண்காணிப்பு ஆணையம்**

- 1963ம் ஆண்டு சந்தானம் குழு அளித்த பரிந்துரையின் பேரில் 1964ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.
- 2003ம் ஆண்டில் சட்ட ரீதியிலான அமைப்பாக மாற்றப்பட்டது.

**உலக வங்கி**

## மணிப்பூர் ஆளுநராக இல.கணேசன் நியமனம்

- தமிழகத்தைச் சேர்ந்த பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் (76) மணிப்பூர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இது தொடர்பான அறிவிப்பை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அலுவலகம் வெளியிட்டது.

## BARC இந்தியா தலைமை செயல் அதிகாரியாக நகுல் சோப்ரா நியமனம்

- ஒலிபரப்பு பார்வையாளர் ஆராய்ச்சி கவுன்சில் (Boradcoast Audience Research council (India)) தலைமை செயல் அதிகாரியாக நகுல் சோப்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

BARC

- 2010ல் துவங்கப்பட்டது.
- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அறிவிக்கை (2014)ன் கீழ் ஒழுங்குமுறைகளை பின்பற்றுகிறது.

## நியூயார்க்கின் முதல் பெண் ஆளுநர் பதவியேற்பு

- அமெரிக்காவிலுள்ள நியூயார்க் மாகாணத்தின் முதல் பெண் ஆளுநராக கேத்தலீன் ஹோக்கல் பதவியேற்றுக்கொண்டார்.
- 62 வயதாகும் அவர், 16 மாதங்களுக்கு ஆளுநர் பொறுப்பை வகிப்பார்.

## கூட்டுறவு துறை செயலாளர் நியமனம்

- அபய் குமார் சிங் மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## பிஎஸ்எஃப் புதிய இயக்குநராக பங்கஜ் சிங் நியமனம்

- எல்லைப் பாதுகாப்புப் (பிஎஸ்எஃப்) இயக்குநர் ஜெனரலாக மூத்த ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். 30 ஆண்டுகளுக்கு முன்பு இதே பதவியை இவரின் தந்தை பிரகாஷ் சிங் வகித்தது குறிப்பிடத்தக்கது.
- ராஜஸ்தான் மாநிலத்தின் 1988–ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பங்கஜ் சிங், ஆக. 31–ஆம் தேதி பிஎஸ்எஃப் இயக்குநராகப் பதவியேற்றுக் கொள்வார் என அதிகாரபூர்வ உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தில்லியில் உள்ள பிஎஸ்எஃப் தலைமையகத்தில் சிறப்பு இயக்குநர் ஜெனரலாக பணியாற்றி வருகிறார்.

## காசநோய் தடுப்பு கூட்டுக் குழு தலைவராக அமைச்சர் மன்சுக் மாண்டவியா பொறுப்பேற்பு

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, காசநோய் தடுப்பு கூட்டுக் குழு வின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார்.
- 2024–ஆம் ஆண்டு வரை அவர் இந்தப் பொறுப்பை வகிப்பார். ஐக்கிய நாடுகளின் காசநோய் ஒழிப்பு இலக்கை 2022–ஆம் ஆண்டுக்குள் அடையவும், 2030–ஆம் ஆண்டுக்குள் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் மைல்கல் தருணத்தை அடையவும், காசநோய் தடுப்பு கூட்டுச் செயலகம், கூட்டாளிகள் மற்றும் காசநோய் சமூகத்தின் முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.
- இந்த நிகழ்ச்சியின்போது பேசிய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, 'வரும் 2025–ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலிருந்து காசநோயை முற்றிலும் ஒழிக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

## RBI புதிய செயல் இயக்குநர் நியமனம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய செயல் இயக்குநராக அஜய் குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### இந்திய ரிசர்வ் வங்கி

- 1934 சட்டத்தின் படி 1935ல் ஹில்டன் யங் கமிஷன் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்டுள்ளது.
- 1 ஆளுநர் 4 துணை ஆளுநர்களை கொண்ட அமைப்பு.

வாய்மையே வெல்லும்



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### முத்ரா திட்டம்

- 2021–22ம் ஆண்டிற்கான முத்ரா திட்டத்தின் கடன் வழங்கும் இலக்கு. 3 டிரில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது.
- இந்த இலக்கு முன்னதாக 3.21 டிரில்லியன் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

பிரதம மந்திரி முத்ரா திட்டம்:

- சிறு, குறு நடுத்தர நிறுவனங்கள் துவங்க கடன் வழங்கும் திட்டம் 2015ல் துவங்கப்பட்டது.
- சி.சு–50000, கிஷோர் 50000 – 500000, தருண் 500000 – 1000000.

### பிரதமர் கிஸான் திட்டத்தின் கீழ் அடுத்த தவணை நிதி விடுவிப்பு

- பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை திட்டத்தின் (பிஎம்–கிஸான்) கீழ் அடுத்த தவணையாக ரூ.19,500 கோடியை பிரதமர் நரேந்திர மோடி விடுவிக்கவுள்ளார்.
- அன்றைய தினம் நண்பகல் 12:30 மணிக்கு காணொலி முறையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், இந்தத் தொகையை விடுவிக்கிறார். அப்போது, 9.75 கோடிக்கும் அதிகமான விவசாய குடும்பங்களுக்கு சுமார் ரூ.19,500 கோடி, அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்படும்.
- இந்த நிகழ்ச்சியின்போது விவசாய பயனாளிகளுடன் கலந்துரையாடும் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களிடமும் உரையாற்றவுள்ளார். பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு 4 மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2,000 வீதம் மூன்று தவணையாக ஆண்டுக்கு மொத்தம் ரூ.6000 நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்படும்.

### ஜன்தன் திட்ட வங்கி கணக்குகளில் ரூ.1.46 லட்சம் கோடி டெபாசிட்

- பிரதமரின் ஜன்தன் யோஜனா (பிஎம்ஜேடிஒய்) திட்டத்தின் கீழ் வங்கிகளில் தொடங்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 43 கோடியாகவும், மொத்த டெபாசிட்டுகளின் மதிப்பு ரூ.1.46 லட்சம் கோடியாகவும் அதிகரித்துள்ளன.
- இது குறித்து மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது: அனைவருக்கும் நிதிச் சேவை சென்றடைய வேண்டும் என்ற இலக்குடன் மத்திய அரசு தொடக்கி வைத்த ஜன்தன் திட்டம் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- இந்த நிலையில், 2021 ஆகஸ்ட் 18–ஆம் தேதி நிலவரப்படி ஜன்தன் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட மொத்த கணக்குகளின் எண்ணிக்கை 43.04 கோடியாக இருந்தது.



# 3. புவியியல்

## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### இந்தியாவில் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

- இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் சிங்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு வேகமாக அதிகரித்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- உலக சிங்கங்கள் தினம் செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 10) கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, சிங்கங்களைப் பாதுகாப்பதில் ஆர்வமுள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக அவர் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:
- சிங்கம் கம்பீரமான மற்றும் துணிச்சல் மிகுந்த விலங்கு. ஆசிய சிங்கங்களின் இருப்பிடமாக இருப்பதில் இந்தியா பெருமை கொள்கிறது. உலக சிங்கங்கள் தினத்தில், சிங்கத்தை பாதுகாப்பதில் ஆர்வமுள்ள விலங்குகள் நல ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் சிங்கங்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக சீராக அதிகரித்து வருவது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

## 3.2 இயற்கை பேரழிவு–பாதுகாப்பு நடவடிக்கைகள்

### கிரீஸ்: காட்டுத் தீ

- கிரீஸ் நாட்டில் இரண்டாவது மிகப் பெரிய தீவான ஈவியாவில் உள்ள பிரிஸ்டின் காட்டில் ஏழாவது நாளாக காட்டுத் தீ எரிந்து வருகிறது.

### ஹிமாச்சலில் நிலச்சரிவு: இடிபாடுகளில் புதைந்த அரசுப் பேருந்து

- ஹிமாசல பிரதேசத்தின் கின்னௌர் மாவட்டத்தில் மலையில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில், பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்தும், பிற வாகனங்களும் மண்ணுக்குள் புதைந்தன.



# 4. பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதார கொள்கை மற்றும் அரசுத்துறை

### குங்குமப்பபூ ஏற்றுமதி ரூ.13 கோடியை எட்டியது

- கடந்த நிதியாண்டில் குங்குமப்பூ ஏற்றுமதி 17.2 லட்சம் டாலரை (ரூ.13 கோடி) எட்டியுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் ஆண்டுக்கு 4 முதல் 5 டன் அளவுக்கு குங்குமப்பூ உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 85 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை புல்வாமா மாவட்டம் வழங்கி வருகிறது.
- கடந்த 2014–ஆம் ஆண்டு வரையில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஆண்டுக்கு 8 முதல் 10 டன் குங்குமப்பூ உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில், 2014–இல் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளப்பபெருக்கால் குங்குமப்பூ சாகுபடி பெரிய அளவில் பாதிக்கப்பட்டது.
- ஒரு கிலோ உலர்ந்த குங்குமப்பூ தயாரிக்க 1,40,000 மலர்கள் தேவைப்படுகிறது. 2020–இல் காஷ்மீர் குங்குமப்பூவுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறை அளவு 18.2%

- இந்தியாவின் மொத்த ஆண்டுக்கான பட்ஜெட் தொகையில் 18.2% அளவிற்கு 2.7 இலட்சம் கோடி மதிப்பிலான நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பொதுக்கணக்கு அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2020ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ம் ஆண்டு நிதி பற்றாக்குறை சற்று முன்னேற்ற நிலையிலேயே (9.3%) இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜிஎஸ்டி வருவாய் ஜூலையில் ரூ.1.16 லட்சம் கோடி

- கடந்த ஜூலை மாதத்தில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி வருவாய் ரூ.1,16,393 கோடியாக இருந்ததாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது கடந்த ஆண்டு ஜூலையுடன் ஒப்பிடுகையில் 33 சதவீத அதிக வருவாயாகும்.
- கரோனா தொற்றின் 2–ஆவது அலை பரவல் காரணமாக பல மாநிலங்களில் அமல்படுத்தப்பட்ட பொதுமுடக்கம் காரணமாக, கடந்த ஜூன் மாதத்தில் ரூ.92,849 கோடி மட்டுமே ஜிஎஸ்டி வருவாய் கிடைத்தது.
- இந்நிலையில், கடந்த ஜூலையில் ரூ.1,16,393 கோடி சரக்கு–சேவை வரி வசூலாகியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. அதில் மத்திய சரக்கு–சேவை வரியாக (சிஜிஎஸ்டி ரூ.22,197 கோடியும், மாநில சரக்கு–சேவை வரியாக (எஸ்ஜிஎஸ்டி ரூ.28,541 கோடியும், ஒருங்கிணைந்த சரக்கு–சேவை வரியாக (ஐஜிஎஸ்டி ரூ.57,864 கோடியும் வசூலாகியுள்ளது. செஸ் வரியாக ரூ.7790 கோடி வருவாய் கிடைத்துள்ளது.
- இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஜிஎஸ்டி வருவாய் தொடர்ந்து 8 மாதங்களுக்கு ரூ.1 லட்சம் கோடியைக்கடந்தது. ஆனால், கடந்த ஜூனில் அது ரூ.1 லட்சம் கோடியைவிடக் குறைந்தது.

## பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான 10% இடஒதுக்கீடு 9–ஆவது அட்டவணையில் சேர்க்கப்படாது

- பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு மத்திய அரசால் அளிக்கப்பட்டுள்ள 10 சதவீத இடஒதுக்கீடு அரசியல் சாசனத்தின் 9– ஆவது அட்டவணையில் சேர்க்கப்படாது என மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் துறை அமைச்சர் பிரதிமா பௌமிக் மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான இடபிள்யுஎஸ்) 10 சதவீத இடஒதுக்கீடு எந்த ஆய்வு தரவுகளின்படி அளிக்கப்பட்டது? இடபிள்யுஎஸ் பிரிவினருக்கு ரூ. 8 லட்சம் வருமான வரம்பு எந்த அடிப்படையில் வழங்க அரசு முடிவெடுத்தது. இந்த இடஒதுக்கீட்டை அரசியல் சாசனத்தின் 9–ஆவது அட்டவணையில் சேர்க்க பரிசீலிக்கப்படுகிறதா? போன்ற கேள்விகளை திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள நாமக்கல் மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ் எழுப்பியிருந்தார்.
- இதற்கு மத்திய சமூகநீதி, அதிகாரமளித்தல் துறை அமைச்சர் பிரதிமா பௌமிக் அளித்த பதில்:
- பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான ஆணையம் மேஜர் ஜெனரல் ஒய்வு எஸ்.ஆர். சின்ஹோ தலைமையில் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம்2010 ஜூலை 22–ஆம் தேதி அரசுக்கு அறிக்கையை அளித்தது. இந்த ஆணையம் அளித்த அறிக்கையின் அடிப்படையில் 10 சதவீத இடஒதுக்கீட்டை பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு அரசு வழங்கியது. அரசின் விரிவான ஆலோசனைகளுக்குப் பின்னர் ரூ. 8 லட்சம் வருமான வரம்பு முடிவு செய்யப்பட்டது. இந்த இடஒதுக்கீட்டை 9–ஆவது அட்டவணையில் சேர்க்கும் முடிவு அரசிடம் இல்லைஎன அமைச்சர் தெரிவித்தார்.
- பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு கல்வியிலும்வேலை வாய்ப்புகளிலும் 10 சதவீத இடஒதுக்கீட்டை மத்திய அரசு 2019–ஆம் ஆண்டு கொண்டுவந்தது.

## அதிக மதிப்புகளுக்கான செக் பயன்பாடு

- அதிக பண மதிப்புடைய பரிமாற்றங்களுக்காக இந்திய ரிசர்வ் வங்கி 2021 ஜனவரி 1 முதல் "பாசிட்டிவ் பே" என்ற புதிய செக் முறையை வெளியிட்டுள்ளது.
- இந்த தொழில்நுட்ப செக் அமைப்பு தேசிய பேமண்ட் கார்பரேஷனால் உருவாக்கப்பட்டது.
- 50000 ரூபாய்க்கு மேற்பட்ட பணவரித்தனைகளுக்கு பாஸிட்டிவ் பே "செக்" ஐ பயன்படுத்தும் வசதியை ஏற்படுத்த ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

## இந்தியா–உலக வங்கி ஒப்பந்தம்

- இந்தியாவில் உள்ள அணைகளை பாதுகாக்க இந்தியா மற்றும் உலக வங்கி இடையே 250 மில்லியன் டாலர் திட்டத்திற்கு கையெழுத்திட்டுள்ளது.

உலக வங்கி 2021ல் கடன் வழங்க உள்ள திட்டங்கள்

- கொல்கத்தா உள்நாட்டு நீர்வாழ் போக்குவரத்து திட்டங்கள் – 105 மில்லியன்
- சட்டீஸ்கர் கிராமப்புற வேளாண் மேம்பாட்டு திட்டம் – 100 மில்லியன்
- நாகாலாந்து பள்ளி மேம்பாடு – 68 மில்லியன்
- MSME மேம்பாடு – 500 மில்லியன்
- மிசோரம் சுகாதார மேம்பாடு – 32 மில்லியன்
- ஆந்திராவின் SALT திட்டத்திற்கு – 250 மில்லியன்

## முன் தேதியிட்டு வரி வசூலிக்கும் முறை ரத்து மக்களவையில் மசோதா தாக்கல்

- நிறுவனங்களிடமிருந்து முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் நடைமுறையை ரத்து செய்யும் வகையில் வரி விதிப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான மசோதாவை மத்திய அரசு மக்களவையில் தாக்கல் செய்துள்ளது.
- முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் விவகாரத்தில் கெய்ர்ன், வோடஃபோன் நிறுவனங்கள் தொடுத்த வழக்குகளில் எதிராக சர்வதேச தீர்ப்பாயம் உத்தரவிட்டிருந்த நிலையில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் அமளி தொடர்ந்தது. அமளியால் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதன் காரணமாக, மக்களவை பல முறை ஒத்தி வைக்கப்பட்டது.
- மக்களவை மீண்டும் மாலை 5 மணிக்குக் கூடியபோது, வருமான வரிச் சட்டம் (1961), நிதிச் சட்டம் (2012) ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் வரி விதிப்புச் சட்டத் திருத்த மசோதாவை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

- வோடஃபோன் வழக்கு: ஹட்சிசன் நிறுவனத்தின் பங்குகளை வாங்கியதில் ஈட்டிய லாபத்துக்கு வட்டியுடன் சேர்த்து ரூ.22,100 கோடியை வரியாகச் செலுத்த வேண்டுமென வோடஃபோன் நிறுவனத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டது.
- கெய்ர்ன் வழக்கு: பிரிட்டனைச் சேர்ந்த கெய்ர்ன் நிறுவனத்திடமிருந்து முன்தேதியிட்டு வரி வசூல் நடைமுறையை மத்திய அரசு மேற்கொண்டது. இந்த விவகாரம் சர்வதேச தீர்ப்பாயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு கெய்ர்ன் நிறுவனத்துக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## வட்டி விகிதங்களில் மாற்றமில்லை: ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவிப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து (ஆர்பிஐ) வங்கிகள் பெறும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தில் (ரெப்போ ரேட் மாற்றம் செய்யப்படவில்லை என ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
- வட்டி விகிதம் 4 சதவீதமாகவே தொடரும் என்று அவர் தெரிவித்துள்ளார். அதேபோல், ரிசர்வ் வங்கியில் மற்ற வங்கிகள் வைத்துள்ள சேமிப்புகளுக்கு ஆர்பிஐ வழங்கும் வட்டி விகிதத்திலும் (ரிவர்ஸ் ரெப்போ ரேட் மாற்றம் செய்யப்படவில்லை. அது 3.35 சதவீதமாகத் தொடரும் என்று ஆர்பிஐ அறிவித்துள்ளது.
- பணவீக்கம்: நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் பணவீக்கம் 5.7 சதவீதமாக இருக்கும் என்று ஆர்பிஐ கணித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி குறைவு, உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு, விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்டவை காரணமாக பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க ஒபெக் நாடுகள் முடிவெடுத்துள்ளதால், அதன் விலை குறைய வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்துள்ள ஆர்பிஐ ஆளுநர், பருவமழை காரணமாக உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்து விநியோகம் சீராக வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதன் காரணமாக வரும் மாதங்களில் பணவீக்கம் குறையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.
- ஜிடிபி வளர்ச்சி: நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீதமாக இருக்கும் என்று ஆர்பி தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி வளர்ச்சி 21.4 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மின்னணு பணம்: மாதிரி விதிகள் எப்போது?

- நாட்டில் மின்னணு பணத்தை (டிஜிட்டல் கரன்சி) அறிமுகப்படுத்துவதற்கான மாதிரி விதிகளை நடப்பாண்டு இறுதிக்குள் தயாரிக்கவுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) துணை ஆளுநர் டி.ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.
- மின்னணு பணத்துக்கான பயன்பாடு, தொழில்நுட்பம், விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆர்பிஐ குழு ஆராய்ந்து வருவதாகவும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.
- காகிதப் பணத்தை ரொக்கமாக கையாளுவது குறைந்து மின்னணு முறையில் பணப் பரிமாற்றம் செய்வது இப்போது இந்தியாவில் அதிகரித்து வருகிறது. இதன் அடுத்தகட்டமாக கிரிப்டோகரன்சி வகையைச் சேர்ந்த மின்னணு பணத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

## "சீனாவுடனான வர்த்தக பற்றாக்குறை 4,400 கோடி டாலராக குறைந்தது"

- சீனாவுடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை2020–21–ஆம் நிதியாண்டில் 4402 கோடி டாலராக (ரூ.3.26 லட்சம் கோடி குறைந்துள்ளது.
- கடந்த 2018–19–ஆம் நிதியாண்டில் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 1675 கோடிடாலராக இருந்தது. இது, 2019–20–ஆம் நிதியாண்டில் 1661 கோடி டாலராகவும், 2020–21 நிதியாண்டில் 2,119 கோடி டாலராகவும் இருந்தது.
- அதேபோன்று சீனாவிலிருந்து இறக்குமதி 2018–19–இல் 7032 கோடி டாலராகவும், 2019–20–இல் 6,526 கோடி டாலராகவும், 2020–21–இல் 6,521 கோடி டாலராகவும் இருந்தது.
- 2018–19–ஆம் நிதியாண்டில் 5,357 கோடி டாலராக இருந்த சீனாவுடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை 2020–21 நிதியாண்டில் 4402 கோடி டாலராக குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.
- அந்நிய நேரடி முதலீடு: கடந்த 2020–21 நிதியாண்டில் ஜவுளித் துறையில் 29.86 கோடி டாலர் (ரூ.2216 கோடி அளவுக்கு அந்நிய நேரடி முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித் துறை இணையமைச்சர் தர்ஷனா ஜர்தோஷ் தெரிவித்துள்ளார்.
- இது குறித்து அவர் மக்களவையில் அளித்த

எழுத்துபூர்வமான பதிலில் கூறியுள்ளதாவது: கடந்த 2019–20–ஆம் நிதியாண்டில் இந்திய ஜவுளித் துறை ஈர்த்த அந்நிய நேரடி முதலீட்டின் அளவு 32.35 கோடி டாலராக இருந்தது. இந்த நிலையில், கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் இத்துறையில் 29.86 கோடி டாலர் அளவுக்கு அந்நிய நேரடி முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜவுளித்துறை தானியங்கி வழிமுறையில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜர்தோஷ் தெரிவித்துள்ளார்.

## டிஜிட்டல் வங்கி பயன்பாட்டில் சிறந்த கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வங்கி

- தி பேங்கர் என்ற இதழ் 2021ம் ஆண்டில் டிஜிட்டல் வங்கி பயன்பாட்டில் சிறந்த கண்டுபிடிப்புக்களை கொண்டுள்ள வங்கியாக DBS வங்கியை தேர்வு செய்துள்ளது.
- இது தவிர ஆசியா பசிபிக் பகுதியில் பாதுகாப்பான வங்கி சேவையை வழங்கியதற்காக DBS வங்கி சைபர் பாதுகாப்பு விருதும் பெற்றுள்ளது.
- வங்கி துறையில் சிறந்த கண்டுபிடிப்புகளை உலக அளவில் செய்யும் சிறந்த வங்கிகளை தி பேங்கர் ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து விருது அளிக்கிறது.

## நாட்டின் ஏற்றுமதி 50% அதிகரிப்பு

- நாட்டின் ஏற்றுமதி ஆகஸ்ட் 1–7–ஆம் தேதி வரையிலான ஒரு வார காலகட்டத்தில் 50.45 சதவீதம் அதிகரித்து 741 கோடி டாலரை எட்டியுள்ளதாக (இந்திய மதிப்பில் ரூ.55,575 கோடி) மத்திய வர்த்தக அமைச்சகம் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:
- ஆகஸ்ட் முதல் வாரத்தில் பொறியியல் பொருள்கள், நவரத்தினங்கள், ஆபரணங்கள், பெட்ரோலியப் பொருள்களின் ஏற்றுமதி ஆரோக்கியமான வளர்ச்சியை கண்டுள்ளது. அதன் பயனாக, கடந்தாண்டைக் காட்டிலும் நடப்பாண்டின் ஆகஸ்ட் 1–7 காலகட்டத்தில் நாட்டின் ஏற்றுமதி 50.45 சதவீதம் அதிகரித்து 741 கோடி டாலரானது.

## 17 மாநிலங்களுக்கு வருவாய் பற்றாக்குறை மானியமாக ரூ.9,871 கோடி விடுவிப்பு

- 2021–22–ஆம் ஆண்டுக்கான பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறை (பிடிஆர்டி மானியத்தின் 5–ஆவது மாதத் தவணையாக 17 மாநிலங்களுக்கு மொத்தம் ரூ.9871 கோடியை மத்திய நிதியமைச்சகத்தின் செலவினத் துறை விடுவித்துள்ளது.
- இதில் தமிழ்நாட்டுக்கு ஜூலை மாதத்தில் ரூ.183.67 கோடியும், 2021–22–ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.918.33 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- இது தொடர்பாக மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது:
- இந்த 5–ஆவது தவணை விநியோகத்துடன், மொத்தம்ரூ.49,355 கோடி தகுதி பெற்றுள்ள மாநிலங்களுக்கு பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறை மானியமாக இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

## வளர்ச்சிப் பாதையில் பொருளாதாரம்: பிரதமர் மோடி

- நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது; உள்நாட்டு தொழில்நிறுவனங்கள் இடர்ப்பாடுகளை துணிவுடன் எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- கடந்த இரு ஆண்டுகளாக கரோனா தொற்று, அதன் காரணமாக அமல்படுத்தப்பட்ட பொதுமுடக்கங்கள் காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சுணக்கம் ஏற்பட்டது. வேலையின்மை, பொருள்கள், சேவைகளுக்கான தேவை குறைவு போன்ற பிரச்னைகள் ஏற்பட்டன. இதனை எதிர்கொண்டு பொருளாதாரத்தை சீரமைக்கும் வகையில் மத்திய அரசு 'சுயசார்பு இந்தியா' திட்டத்தின்கீழ் ரூ.29.87 லட்சம் கோடிக்கு சிறப்பு பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைந்த நிதித் திட்டங்களை அரசு அறிவித்தது.
- அந்நிய முதலீட்டுக்கு சிறந்த நாடாக: ஒரு காலத்தில் அந்நிய முதலீட்டுக்கு சிறந்த நாடாக இந்தியா கருதப்படவில்லை. ஆனால், இப்போது அனைத்து நிலைகளிலும் அந்நிய முதலீட்டுக்கு சிறந்த நாடாக இந்தியா உருவாகியுள்ளது. இந்தியாவின் வரி விதிப்புக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் முதலீட்டாளர்களை ஈர்த்துள்ளது.

- ஜிஎஸ்டி வசூல் சாதனை சரக்கு–சேவை வரியை (ஜிஎஸ்டி நடைமுறைப்படுத்துவதை அரசியல் காரணங்களுக்காக முந்தைய அரசு இழுபறி நிலையிலேயே வைத்திருந்தது. ஆனால், இப்போதைய அரசு ஜிஎஸ்டி–யை வெற்றிகரமாக அமல்படுத்தியதுடன், வரி வசூலிலும் சாதனை படைத்துள்ளது என்றார் மோடி.

## தொழில்துறை உற்பத்தி 13.2% வளர்ச்சி

- இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தி ஜூன் மாதத்தில் 13.6 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது.
- இதுகுறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) தெரிவித்துள்ளதாவது:
- நாட்டின் தொழில்துறை உற்பத்தி (ஐஐபி) சென்ற ஜூன் மாதத்தில் 13.6 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இது, 2020 ஜூனில் 16.6 சதவீதமாக பின்னடைவைக் கண்டிருந்தது.
- அதன்படி, 2021 ஜூனில் தயாரிப்பு துறையின் உற்பத்தி 13 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதே போன்று, சுரங்கத் துறையின் உற்பத்தியும் 23.1 சதவீதம் உயர்ந்துள்ளது. மின்சார துறையின் உற்பத்தி ஜூனில் 8.3 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. நடப்பாண்டின் ஏப்ரல் ஜூன் வரையிலான மூன்று மாத காலத்தில் ஐஐபி 45 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலாண்டில் இத்துறையின் வளர்ச்சி 35.6 சதவீதம் பின்னடைந்திருந்தது.

## சில்லறைப் பணவீக்கம் 5.59%–ஆக குறைவு

- நுகர்வோர் விலை குறியீட்டெண் (சிபிஐ) அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் சில்லறைப் பணவீக்கம் கடந்த ஜூலை மாத்தில் 5.59 சதவீதமாக குறைந்துள்ளது.
- இது குறித்து தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) தெரிவித்துள்ளதாவது: உணவுப் பொருள்களின் விலை குறைந்ததையடுத்து சென்ற ஜூலை மாதத்தில் சில்லறைப் பணவீக்கம் 5.59 சதவீதமாக சரிந்துள்ளது. அது, முந்தைய ஜூன் மாத்தில் 6.26 சதவீதமாகவும், 2020 ஜூலையில் 6.73 சதவீதமாகவும் அதிகரித்து காணப்பட்டது.
- உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் முந்தைய ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூலையில் 5.15 சதவீதத்திலிருந்து 3.96 சதவீதமாக குறைந்துள்ளது என என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.
- 2021–22–இல் சிபிஐ பணவீக்கம் 5.7 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி தெரிவித்திருந்தது.
- இது, 2–வது காலாண்டில் 5.9 சதவீதமாகவும், 3–வது காலாண்டில் 5.3 சதவீதமாகவும், 4–வது காலாண்டில் 5.8 சதவீதமாகவும் இருக்கும். 2022–23 முதல் காலாண்டில் இப்பணவீக்கம் 5.1 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி மதிப்பிட்டுள்ளது.

## பணவீக்கம் 11.16%–ஆக குறைந்தது

- பணவீக்கம் சென்ற ஜூலை மாதத்தில் 11.16 சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
- உணவுப் பொருள்களின் விலை குறைந்ததையடுத்து மொத்த விற்பனை விலை குறியீட்டெண் (டபிள்யூபிஐ)
- அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் தொடர்ந்து இரண்டாவது மாதமாக சென்ற ஜூலையிலும் 11.16 சதவீதமாக குறைந்துள்ளது.

## நிதி உள்ளடங்கள் குறியீடு

- இந்திய ரிசர்வ் வங்கி நிதி உள்ளடங்கள் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- நாடு முழுவதும் மக்கள் வங்கி சேவை, காப்பீடு, ஓய்வூதியம் போன்றவற்றில் எவ்வாறு பங்கேற்றுள்ளனர். அடைதல் பயன்பாடு, தரம் ஆகிய 3 நிலைகளை ஆராய்ந்து இந்த குறியீடு 97 வகைகளின் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.
- 100 மதிப்பெண்களுக்கு நாடு தற்போது 53.9 என்ற மதிப்பெண்களை பெற்றுள்ளது.

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.4% ஆக இருக்கும் இந்தியா ரேட்டிங்ஸ்

- நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.4 சதவீதமாக இருக்கும் என இந்தியா ரேடிங்ஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது
- முன்பு காணப்பட்ட சந்தை நிலவரங்களின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 9.1 சதவிதம் அளவுக்கு வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டிருந்தது. டிசம்பருக்குள் அரசின்

இலக்குப்படி தடுப்புசி திட்டம் செயல்படுத்தப்படும் எனில் இந்த வளர்ச்சி 9.6 சதவீதமாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

- இந்த நிலையில். தற்போது ஏற்பட்டுள்ள தொய்வின் காரணமாக இந்த தடுப்புசி திட்டம் அனைவருக்கும் செயல்படுத்தப்படுவது மார்ச் வரை நீடிக்கவே அதிக வாய்ப்புகள் உள்ளன.
- இருப்பினும், பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீடு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு கரோனா இரண்டாவது அலையின் தாக்கத்துக்குப் பிறகு பொருளாதாரம் ஆச்சிரியப்படும் விதத்தில் மீட்சியடைந்து வருவதே முக்கிய காரணம். இதனை எடுத்துக்காட்டும் விதத்தில், நாட்டின் ஏற்றுமதி சிறப்பான அளவில் மேம்பட்டுள்ளது. இவைதவிர, நடப்பாண்டில் பருவமழையும் போதுமான அளவுக்கு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## ரூ.6 லட்சம் கோடி சொத்துகளை பணமாக்கும் திட்டம் தொடக்கம்

- மத்திய அரசுக்குச் சொந்தமான ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்கும் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடக்கி வைத்தார்.
- சாலைகள், ரயில்வே, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்குவதற்கான வழிமுறைகள் அடங்கிய திட்டத்தை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடக்கி வைத்தார்.
- அப்போது அவர் கூறுகையில், சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கை என்பது அவற்றை விற்பதல்ல. சொத்துகளின் உரிமை அனைத்தும் மத்திய அரசு வசமே இருக்கும். அதே வேளையில், அந்தச் சொத்துகளைத் திறம்படப் பயன்படுத்தி நிதி திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- நாடு முழுவதும் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கையின் மூலமாக ரூ.6 லட்சம் கோடியைத் திரட்ட முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2024–25–ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது.
- இவ்வாறு புதிய வழிகளில் நிதியைத் திரட்டுவதன் வாயிலாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும். பல்வேறு மக்கள்நலத் திட்டங்களையும் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தின் வாயிலாக அரசின் சொத்துகளைத் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டு, அரசு–தனியார் பங்களிப்பு வாயிலாக சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவது உறுதி செய்யப்படும்.

## உலக தடகளப் போட்டி: வெள்ளி வென்றார் ஷைலி சிங்

- 20 வயதுக்குட்பட்டோர் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி மகளிர் நீளம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார் இந்தியாவின் ஷைலிசிங்.
- கென்ய தலைநகர் நைரோபியில் நடைபெறும் இப்போட்டியின் ஒரு பகுதியாக நீளம் தாண்டுதல் போட்டி நடைபெற்றது. இதில் ஸ்வீடன் வீராங்கனை மஜா அஸ்காக் 6.60 மீ தூரம் குதித்து தங்கப் பதக்கம் வென்றார். இந்தியாவின் ஷைலி 6.59 மீ தூரம் குதித்து வெள்ளி வென்றார். உக்ரைன் வீராங்கனை மரியா 6.50 மீ தூரத்துடன் வெண்கலம் வென்றார்.

## 'மெலமைன்' மிகை இறக்குமதி தடுப்பு வரியை நீட்டிக்க பரிந்துரை

- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மெலமைனுக்கு மிகை குவிப்பு தடுப்பு வரியை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய வர்த்தக அமைச்சகத்தின் வர்த்தக குறைதீர் பொது இயக்குநரகம் (டிஜிடிஆர்) பரிந்துரை செய்துள்ளது.
- இதுகுறித்து டிஜிடிஆர் வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவித்துள்ளதாவது: தொழிற்சாலைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் மெலமைன், சீனாவிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்டு குவிக்கப்படுவதால் உள்நாட்டு நிறுவனங்கள் பாதிப்புக்குள்ளாவதாக புகார் எழுந்தது.

## EASE 4.0

- வங்கி துறையில் பொதுத்துறை வங்கிகளின் மறுசீரமைப்பு குறித்த செயல்பாட்டு திட்டமான EASE 4.0ஐ நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் துவங்கி வைத்தார்.
- EASE–Enhanced Access Service Excellence (E).

### முக்கிய நடவடிக்கைகள்

- சிறப்பாக கடனளித்தல்
- 24x7 வங்கி சேவை தொழில்நுட்ப வசதியுடன்
- சிறப்பான வெளிப்பாட்டிற்காக பல வங்கிகள் இணைந்த செயல்பட வைத்தல்.
- சுலபமான வங்கி சேவை
- வங்கி நிறுவன மயமாதல்

- ஆளுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு மையமாதல்.

## இந்தியப் பொருளாதாரம் 18.5% வளர்ச்சி காணும்: எஸ்பிஐ

- இந்தியப் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 18.5 சதவீத வளர்ச்சி காணும் என எஸ்பிஐ ஆய்வறிக்கையான எக்கோராப் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் என கணிக்கப்பட்டுள்ளது. அக்காலாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 18.5 சதவீதமாக இருக்கும். இருப்பினும், இது முந்தைய மதிப்பீடான 21.4 சதவீதத்தை காட்டிலும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பத்திரங்கள் வாயிலாக கட்சிகளுக்கு ரூ.3,429 கோடி நன்கொடை

- தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாயிலாக கடந்த 2019–20–ஆம் நிதியாண்டில் கட்சிகளுக்கு ரூ.3,429.56 கோடி நன்கொடை கிடைத்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2019–20–ஆம் நிதியாண்டில் கட்சிகளின் வரவு–செலவு தொடர்பாக ஜனநாயகத்துக்கான சீர்திருத்தங்கள் கூட்டமைப்பு (ஏடிஆர்) என்ற தன்னார்வ நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- ஆய்வு நடத்தப்பட்ட காலத்தில் கட்சிகளுக்கு ரூ.3,429.56 கோடி நன்கொடையானது தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலமாகக் கிடைத்துள்ளது. மொத்த நன்கொடையில் 87.29 சதவீதமானது பாஜக, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு மட்டுமே கிடைத்துள்ளது.
- தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாயிலாக பாஜகவுக்கு ரூ.2,555 கோடியும், காங்கிரஸுக்கு ரூ.317.861 கோடியும், திரிணமூல் காங்கிரஸுக்கு ரூ.100.46 கோடியும், தேசியவாத காங்கிரஸுக்கு ரூ.20.50 கோடியும் நன்கொடையாகக் கிடைத்துள்ளன.

## அந்நிய நேரடி முதலீடு 168% அதிகரிப்பு

- இந்தியாவில் நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்–ஜூன் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 168 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் மேலும் கூறியுள்ளதாவது: நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் அந்நிய நேரடி முதலீட்டு வரத்து 1,757 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.31 லட்சம் கோடி) இருந்தது. இது, கடந்தாண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடான 656 கோடி டாலருடன் (ரூ.49,200 கோடி) ஒப்பிடும் போது 168 சதவீதம் அதிகம் ஆகும். இதற்கு, மத்திய அரசு மேற்கொண்ட கொள்கை சீர்திருத்தங்களும், எளிதில் தொழில் தொடங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுமே முக்கிய காரணம்.

## தங்கப் பத்திரம் வெளியீடு: கிராம் ரூ.4,732–ஆக நிர்ண்யம்

- தங்கப் பத்திர விற்பனை (ஆகஸ்ட் 30) தொடங்கவுள்ள நிலையில், அப்பத்திரத்தின் விலை கிராமுக்கு ரூ.4,732–ஆக நிர்ணயம் செய்து ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
- இதுகுறித்து ரிசர்வ் வங்கி கூறியுள்ளதாவது:
- 6 கட்ட தங்கப் பத்திர விற்பனை: 2021 மே மாதத்திலிருந்து 2021 செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் ஆறு கட்டங்களாக தங்கப் பத்திர விற்பனையை மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த தங்கப் பத்திரங்களை மத்திய அரசின் சார்பில் ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது.
- சேமிப்பை ஊக்குவிப்பதே குறிக்கோள்: நேரடியாக தங்கம் வாங்கும் பழக்கத்துக்கு மாற்றாக சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த 2015–ஆம் ஆண்டு நவம்பரில் தங்கப் பத்திரம் திட்டத்தை மத்திய அரசு தொடக்கி வைத்தது.
- இந்த திட்டம் தொடங்கி 2021 மார்ச் இறுதி வரையிலுமாக தங்கப் பத்திர விற்பனையின் மூலமாக ரூ.25,702 கோடி திரட்டப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் வேளாண்மை குறியீடு

- தேசிய பங்குகள் மாற்று நிறுவனத்தால் (NCDEX) முதல் வேளாண்மை அறிக்கை GUAREX வெளியிடப்பட்டுள்ளது.

- இது முழுவதுமாக கொத்தவரை (Guar) தாவரத்தின் உற்பத்தி எதிர்காலம் குறித்த தகவல்களை கொண்டுள்ளது.

**தேசிய பங்குகள் மாற்ற நிறுவனம் (NCDEX)**

- துவக்கம் – 2003
- இணையதளம் வாயிலாக பங்கு வாங்குபவர் மற்றும் விற்பவரை நெறிப்படுத்துகிறது.

## செப்டம்பர் 3–இல் நிதி ஸ்திரத்தன்மை, மேம்பாட்டு கவுன்சில் கூட்டம்

- நிதி ஸ்திரத்தன்மை, மேம்பாட்டு கவுன்சில் (எஃப். எஸ்.டி.சி.) கூட்டத்தை வரும் செப்டம்பர் 3–ஆம் தேதி நடத்துவதற்கு அதன் தலைவரும், மத்திய நிதியமைச்சருமான நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.
- நிதித்துறையின் நிலை, கரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீண்டெழும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.
- முந்தைய கூட்டம், கடந்த ஆண்டு டிசம்பர் 15–ஆம் தேதி நடைபெற்றது. இந்நிலையில், எஃப்.எஸ்.டி.சி. யின் 24–ஆவது கூட்டம், வரும் செப்டம்பர் 3–ஆம் தேதி நடைபெறவுள்ளது.
- இந்தக்கூட்டத்துக்கு உறுப்பினர்களான ரிசர்வ் வங்கியின் ஆளுநர், காப்பீட்டு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர், இந்திய பங்கு– பரிவர்த்தனை வாரியத்தின் தலைவர்(செபி), ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாவது: எஃப்.எஸ்.டி.சி. கூட்டம், காணொலி முறையில் நடைபெறவுள்ளது. வரி வசூல் அதிகரிப்பு, கடன் வளர்ச்சி, சில துறைகளில் உற்பத்தி அதிகரிப்பு, சில துறைகளில் ஏற்றுமதி அதிகரிப்பு ஆகியவை நாட்டின் பொருளாதாரம் மீண்டு வருவதைக் காட்டுகின்றன.

# 5. அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### செயற்கைக்கோள் படங்கள் மூலம் எல்லைகளை வரையறுக்க முடிவு

- வடகிழக்கு மாநிலங்களுக்கு இடையிலான எல்லைகளை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் வரையறுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- மாநிலங்களுக்கு இடையிலான எல்லைகளை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் வரையறுக்கும் யோசனையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த சில மாதங்களுக்கு முன்பு முன்வைத்தார். இந்நிலையில், அஸ்ஸாம்–மிஸோரம் இடையிலான எல்லைப் பிரச்னைவன்முறைக்கு வித்திட்டதைத் தொடர்ந்து வடகிழக்கு மாநிலங்களுக்கு இடையிலான எல்லைகளை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் வரையறுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியானது மத்திய அரசின் விண்வெளித் துறையும் வடகிழக்கு கவுன்சிலும் இணைந்து தொடங்கிய வடகிழக்கு விண்வெளி தொழில்நுட்ப மையத்திடம் (என் இஎஸ்ஏசி) ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் இருவர் தெரிவித்தனர்.

### NISAR–திட்டம்

- புவியின் சில மாறுபட்ட அளவீடுகள் கண்டறிவதற்கான மேம்பட்ட ரேடார் கருவிகயை கொண்ட செயற்கைக்கோளை உருவாக்க இஸ்ரோவும் நாசாவும் இணைய திட்டமிட்டுள்ளது.

NISAR

- (NASA – ISRO synthetic Aperture Roder) என்ற திட்டம் பருவகால மாற்றம், கோள்களின் செயல்களில் ஏற்படும் மாற்றம், நிலப்பரப்பு, கடற்கரை போன்ற அமைப்புகளை அறிய பயன்படுத்தப்பட உள்ளது.

### இந்தியாவின் முதல் மெய்நிகர் மாநாட்டு தொழில்நுட்பம்

- சென்னை IIT நிறுவனம் இந்தியாவின் முதல் மெய்நிகர் மாநாட்டு தொழில்நுட்பமான (CAVE)ஐ துவங்கியுள்ளது.
- இந்த தொழில்நுட்பம் இந்தியாவில் அரசு நிறுவனங்கள் அலுவலர்கள் மற்றும் அரசு மாநாடுகளை நடத்துவதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்காவிடமிருந்து ரூ.600 கோடிக்கு "ஹார்பூன்" ஏவுகணை கொள்முதல்

- கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய திறன் கொண்ட 'ஹார்பூன்' ஏவுகணையையும் அதன் உதிரி பாகங்களையும் சுமார் ரூ.600 கோடி மதிப்பில் அமெரிக்காவிடமிருந்து இந்தியா கொள்முதல் செய்யவுள்ளது.
- இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்தியாவுக்கு ஹார்பூன் ஏவுகணை அமைப்பை விற்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஹார்பூன் பராமரிப்பு அமைப்பு, ஏவுகணைக்கான உதிரி பாகங்கள், அதைப் பராமரிப்பதற்கான கருவிகள், ஏவுகணையைப் பரிசோதிப்பதற்கான கருவிகள், ஏவுகணையை எடுத்துச் செல்வதற்கான கருவிகள் உள்ளிட்டவையும் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளன.
- ஹார்பூன் ஏவுகணை அமைப்பை சுமார் ரூ.600 கோடிக்கு இந்தியாவுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக இந்தியா–அமெரிக்கா இடையேயான நல்லுறவு மேலும் வலுவடையும். இந்தோ–பசிபிக் பிராந்தியம், தெற்காசியப் பிராந்தியம் ஆகியவற்றில் அமைதி,

நிலைத்தன்மை உள்ளிட்டவை நிலவுவதில் இந்தியா முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

- பாதுகாப்புத் துறையில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியான இந்தியாவின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு ஹார்பூன் ஏவுகணை அமைப்பு உதவும். இதன் வாயிலாக தற்போதைய, எதிர்கால பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இந்தியா திறம்பட எதிர்கொள்ள முடியும்.

ஏவுகணை சிறப்பம்சங்கள்

- கடந்த 1977–ஆம் ஆண்டு முதல் ஹார்பூன் ஏவுகணை அமைப்பு அமெரிக்க ராணுவத்தில் பயன்பாட்டில் உள்ளது. அடுத்தடுத்த காலகட்டங்களில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. கடலில் உள்ள கப்பல்களைத்தாக்கி அழிக்கவல்ல திறன் கொண்ட அந்த ஏவுகணை, ரேடாரின் துணையுடன் செயல்படும் தன்மை கொண்டது.
- கப்பல்களைத் தாக்கி அழிப்பதில் உலகின் மிகச் சிறந்த ஏவுகணை அமைப்பாக ஹார்பூன் உள்ளது. தற்போது 30–க்கும் மேற்பட்ட நாடுகள் அந்த ஏவுகணையைப் பயன்படுத்தி வருகின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவுக்கு 'முக்கிய பாதுகாப்பு கூட்டாளி' என்ற அந்தஸ்தை கடந்த 2016–ஆம் ஆண்டில் அமெரிக்கா வழங்கியது. அதன் அடிப்படையில் பாதுகாப்புத் துறை சார்ந்த முக்கிய தொழில்நுட்பங்களையும் போர்த் தளவாடங்களையும் இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது.

## புவி கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப் 10 ராக்கெட்

- புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப் 10 ராக்கெட் ஆகஸ்ட் 12–இல் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
- புவி கண்காணிப்பு பணிகளுக்காக இஓஎஸ்–03 என்ற அதிநவீன செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது. இந்த செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், கரோனா பரவலால் ராக்கெட் ஏவுதல் பணிகளில் தாமதம் ஏற்பட்டது.
- இந்நிலையில் நோய்த்தொற்று பரவல் சற்று தணிந்துள்ள நிலையில், மீண்டும் திட்டப்பணிகளை இஸ்ரோ முடுக்கிவிட்டுள்ளது. அதன்படி இஓஎஸ்–03 செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள 2–ஆவது ஏவுதளத்தில் இருந்து ஆகஸ்ட் 12–ம் தேதி காலை 5.43 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.
- இதற்கான இறுதிகட்ட பணிகளில் விஞ்ஞானிகள் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இஓஎஸ்–03 செயற்கைக்கோள் 2,268 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 7 ஆண்டுகள். இதிலுள்ள 3டி கேமராக்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் புவிப்பரப்பை துல்லியமாக படம் எடுக்க முடியும். வானிலை சூழல்களை கண்காணித்து புயல் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள உதவும் என்று விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்தனர்.

## விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி எஃப் 10 ராக்கெட்

- புவிக்கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப் 10 ராக்கெட் வியாழக்கிழமை விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
- புவி கண்காணிப்புப் பணிகளுக்காக இஓஎஸ்–03 என்ற அதிநவீன செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது. இந்த செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், கரோனா பரவலால் ராக்கெட் ஏவுதல் பணிகளில் தாமதம் ஏற்பட்டது.
- இந்நிலையில் நோய்த்தொற்று பரவல் சற்று தணிந்துள்ள நிலையில், மீண்டும் திட்டப்பணிகளை இஸ்ரோ முடுக்கிவிட்டுள்ளது. அதன்படி இஓஎஸ்–03 செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவண் விண்வெளி ஆராய்ச்சி
- மையத்தில் உள்ள 2–ஆவது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான இறுதிக் கட்டப்பணிகளில் விஞ்ஞானிகள் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## நிலவில் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்தது "சந்திரயான்–2"

- நிலவில் நீர் மூலக்கூறுகள் இடம்பெற்றிருப்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) சந்திரயான்–2 விண்கலம் அனுப்பிய தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

- இஸ்ரோ முன்னாள் தலைவர் ஏ.எஸ்.கிரண்குமார் இணைந்து எழுதியிருக்கும் ஆய்வுக் கட்டுரையில் இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.
- நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்–2 விண்கலத்தை கடந்த 2019 ஜுலை 22–ம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இஸ்ரோ அனுப்பியது. பல்வேறு கட்ட பயணத்துக்கு பிறகு, சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்டம்பர் 7ம் தேதி சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீர் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் வேகமாக சென்று நிலவின் தரையில் மோதி தகவல் தொடர்பிலிருந்து விலகியது.
- எனினும், விண்கலத்தின் மற்றொரு பகுதியான "ஆர்பிட்டர்" நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அந்த ஆர்பிட்டர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நிலவை சுற்றி வந்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு, பூமிக்கு தகவல்களை அனுப்பி வருகிறது.
- இந்த தரவுகள் மூலம் நிலவின் பரப்பில் நீர் மூலக்கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடப்பு அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளுக்கான வலைதளத்தில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் கூறியிருப்பதாவது:
- ஆர்பிட்டரில் இடம்பெற்றிருக்கும் ஐஐஆர்எஸ் கருவி எடுத்து அனுப்பியிருக்கும் ஆரம்ப கட்ட புகைப்பட தரவுகளில், இயற்பியல் அடிப்படையிலான வெப்பதிருத்த ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு, நிலவின் பரப்பில் "29என்" மற்றும் "62என்" இடையேயான அட்சரேகை பகுதயில் "ஒஹைச் (ஹைட்ராக்ஸில்), ஹெச்2ஓ" ஆகிய நீர் மூலக்கூறுகள் பரவலாக இடம்பெற்றிருப்பது தெளிவாக தெரிகிறது.

## "GiSAT–1"

- இந்தியா அதி நவீன புவி – புகைப்பட செயற்கைக் கோளை (GiSAT–1) வடிவமைத்து உள்ளது. பாகிஸ்தான் மற்றும் சீனாவினுடனான இந்திய எல்லைப் பகுதியை ஒரு நாளில் 4–5 முறை கண்காணிக்க இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- 2268 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் GSLV–F10 மூலம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. ('eye in the sky') விண்ணில் நமது கண் என்ற வகையில் செயல்பட உள்ளது.

## புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை நிலைநிறுத்தும் முயற்சி தோல்வி

- புவி கண்காணிப்புப் பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட இஓஎஸ்– 03 செயற்கைக் கோளை சுமந்தபடி 'ஜிஎஸ்எல்வி எப்–10' ராக்கெட் விண்ணில் சீறிப்பாய்ந்த நிலையில், ராக்கெட்டில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக இலக்கை எட்டவில்லை என்று இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.
- புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்புப்பணிகளுக்காக இஓஎஸ்–03 (ஜிஐசாட் என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங் செயற்கைக்கோளை இஸ்ரோ தயாரித்தது. ராக்கெட் ஏவுதலுக்கான 26 மணி நேர கவுன்ட்டவுன் முடிவடைந்த நிலையில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து இஓஎஸ்–03 செயற்கைக்கோளை சுமந்து கொண்டு ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. ஆனால், ராக்கெட்டில் திடீரென கோளாறு ஏற்பட்டதால், புவி சுற்றுப்பாதையை வெற்றிகரமாக அடையவில்லை என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

## கருந்துளைகள் ஒன்றிணைந்த அரிய நிகழ்வு

- விண்மீன் திரள்களிலிருந்து மூன்று மிகப்பெரிய கருந்துளைகள் ஒன்றிணைந்து, மூன்று மடங்கு தீவிரமான விண்மீன் திரளின் மையப் பகுதியை உருவாக்கியுள்ளதை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது தொடர்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை தெரிவித்திருப்பது:
- கருந்துளைகள் ஒளி எதையும் வெளிப்படுத்தாது என்பதால் அவற்றைக் கண்டறிவது கடினம். ஆனால், சுற்றுப்புறத்தில் அவை ஏற்படுத்தும் விளைவுகளில் இருந்து அவற்றைக் கண்டறிய முடியும். சுற்றுப்பகுதிகளில் இருந்து தூசிகளும் வாயுக்களும் கருந்துளைகளை நெருங்கும்போது அவற்றின் ஒரு பகுதி கருந்துளைகளால் விழுங்கப்படுகின்றன; மற்றொரு பகுதி ஆற்றலாக உருமாற்றப்பட்டு, மின்காந்த கதிர்வீச்சாக வெளிப்படுகிறது.
- அந்த வகையில் விண்மீன் திரள்களிலிருந்து மூன்று மிகப்பெரிய கருந்துளைகள் ஒன்றிணைந்த அரிய நிகழ்வு பிரபஞ்சத்தில் நிகழ்ந்துள்ளதை இந்திய வானியற்பியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஜோதி யாதவ், மௌசுமி தாஸ், சுதான்ஷு பார்வே

ஆகியோர் பிரான்ஸை சேர்ந்த ஃபிரான்சுவா கோம்ப்ஸ் என்ற வானியற்பியல் ஆய்வாளருடன் இணைந்து கண்டுபிடித்துள்ளனர்.

## மனித வியர்வையில் சார்ஜ் ஏற்றும் பேட்டரி

- சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வியர்வையின் மூலம் சார்ஜ் ஆகும் பேட்டரியை அறிமுகம் செய்துள்ளது.
- இந்த குழுவில் தமிழ்நாட்டின் குருநாதன் தங்கவேலு பங்கெடுத்துள்ளார்.

### "Neo Bolt" – மோட்டர் சக்கர நாற்காலி

- சென்னை IIT ஐ சேர்ந்த விஞ்ஞானிகள் மோட்டார் மூலம் இயங்கக் கூடிய சக்கர நாற்காலியை வடிவமைத்து உள்ளது.
- "நியோபோல்ட்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சக்கர நாற்காலி இந்தியாவில் முதல்முறையாக உருவாக்கப்பட்டுள்ளது.

## மின்னணுக் கழிவுகளைக் கையாள்வதற்கான பிரத்யேக வலைதளம்

- மின்னணு கழிவுகளைக் கையாள்வதற்கான பிரத்யேக வலைதளத்தை சென்னை–ஐஐடி வடிவமைத்து வருகிறது.
- மின்னணுக்கழிவுகள் முறையாக மறுசுழற்சி செய்யப்படாமல், குப்பைக் கிடங்குகளில் குவிக்கப்படுகின்றன.
- இந்நிலையில், மின்னணு கழிவுகளைத் திறம்படக் கையாள்வதற்கென 'இ–சோர்ஸ்' என்ற பிரத்யேக வலைதளத்தை சென்னை ஐஐடி வடிவமைத்து வருகிறது. அந்த வலைதளத்தின் மூலமாக மின்னணு கழிவுப் பொருள்களை வைத்திருப்பவரும் அதை வாங்க விரும்புவோரும் எளிதில் தொடர்பு கொள்ள முடியும். இதன் மூலமாக அக்கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது எளிதாகும்.
- இது தொடர்பாக ஐஐடி பேராசிரியர் ஒருவர் கூறுகையில், "மின்னணு கழிவுகளில் உள்ள விலையுயர்ந்த உலோகப் பொருள்களை மட்டும் எடுத்துவிட்டு மற்ற உலோகப் பொருள் கள் குப்பைக் கிடங்குகளில் வீசப்படுகின்றன. மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.

## தென்னாப்பிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட சி.1.2 வகை கரோனா

- தென்னாப்பிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட புதிய உருமாறிய வகை சி.1.2 கரோனா தீநுண்மி, தடுப்பூசி பாதுகாப்பையும் மீறி அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.
- 'இந்த புதிய உருமாறிய வகை தென்னாப்பிரிக்காவில் கடந்த ஆண்டு மேமாதம் கண்டறியப்பட்டது. அதன் பிறகு ஆகஸ்ட் 13–ஆம் தேதி நிலவரப்படி சீனா, காங்கோ குடியரசு, மோரீஷஸ், பிரிட்டன், நியூஸிலாந்து, போர்ச்சுகல், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் இந்த புதிய உருமாறிய வகை கரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது' என்று தேசிய தொற்றுநோய் நிறுவனம் (என்ஐசிடி மற்றும் தென்னாப்பிரிக்காவின் குவாஸுலு–நேட்டால் ஆராய்ச்சி நிறுவன (கேஆர்ஐஎஸ்பி) விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## இந்தியாவின் முதல் குவாண்டம் கம்ப்யூட்டர் டூல்கிட்

- இந்தியாவின் முதல் குவாண்டம் கம்ப்யூட்டர் டூல்கிட்டை IIT–ரூர்கீ, IIS பெங்களூரு மற்றும் C–DAL இணைந்து உருவாக்கியுள்ளது.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

## நில நடுக்கத்தை அறியும் இந்தியாவின் முதல் செயலி

- உத்திரகாண்ட் மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை ஆணையம் "உத்திரகாண்ட் பூகம்ப அலர்ட்" என்ற நில நடுக்கத்தை முன்னறிவிப்பு செய்யும் செயலியை அறிமுகம் செய்துள்ளார்.
- நில நடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை இந்த செயலி முன்கூட்டியே வழங்கும்.

## பிஎம்-தாக்ஷ (PM DAKSHA) தளம் மற்றும் செயலி

- மத்திய சமூக நீதி மற்றும் வலுப்படுத்தல் அமைச்சர் விரேந்திர குமார் பின்தங்கிய மக்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்காக பிஎம்-தாக்ஷ என்ற தளத்தையும், செயலியையும் துவங்கி வைத்துள்ளார்.
- PM-DAKSH – Pradhan Mantri Dakshta Aur Kushalta Sampann Hitgrahi Yojana.

## சிலிண்டர் முன்பதிவுக்கு "ஊர்ஜா" சேவை: பாரத் பெட்ரோலியம் நிறுவனம் அறிமுகம்

- நாட்டின் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் முதல்முறையாக சமையல் எரிவாயு சிலிண்டர்களை முன்பதிவு செய்தல், சிலிண்டர்களை விநியோகிக்கும் நிறுவனத்தை மாற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்காக 'ஊர்ஜா' என்ற தகவல் பரிமாற்ற வசதியை பாரத் பெட்ரோலியம் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## யுக்தாரா தளம்

- மத்திய அறிவியல் தொழில்நுட்ப இணையமைச்சர் ஜிதேந்திரசிங் புவன் திட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் உருவாகும் சொத்துக்களை கணக்கீடு செய்ய இஸ்ரோ உதவியுடன் தொலையுணர்வு தொழில்நுட்ப தளமான யுக்தாராவை துவங்கி வைத்துள்ளார்.

## 100 மில்லியன் சந்தை மதிப்பை கொண்ட இன்போசிஸ் நிறுவனம்

- 100 பில்லியன் என்ற சந்தை மதிப்பை கொண்ட நிறுவனங்கள் பட்டியலில் இந்தியாவில் ரிலையன்ஸ் நிறுவனம், டாடா, HDFC வங்கிக்கு அடுத்த நிலையில் 4வது இடத்தில் இன்போசிஸ் நிறுவனம் இடம் பெற்றுள்ளது.

## e-shram தளம்

- அமைப்பு சாரா தொழிலாளர்கள் நாடு முழுவதும் 38 கோடிக்கும் அதிகமான அளவில் பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே தளத்தின் கீழ் ஒழுங்குபடுத்தி சலுகைகள் பெறுவதற்காக ஆதார் அடிப்படையிலான அடையாள அட்டை e-shram தளத்தின் மூலம் உருவாக்கிக்கொள்ள இயலும்.

## "ஃபிட் இந்தியா" செயலி: அமைச்சர் அனுராக் தாக்குர் தொடக்கி வைத்தார்

- இந்தியாசுதந்திரமடைந்து75-ஆவதுஆண்டுவிழா (அம்ருத்மகோத்சவம்) கொண்டாடப்படுவதின் ஒரு பகுதியாக, "பிட் இந்தியா" கைப்பேசி செயலியை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் தொடக்கி வைத்தார்.
- "ஃபிட் இந்தியா" இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவை கொண்டாடும் வகையிலும் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு தில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய விளையாட்டு அரங்கில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

# 6. தினசரி தேசிய நிகழ்வு



## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு தலைமையேற்கும் இந்தியா

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு முதன் முறையாக ஆகஸ்ட் 1–ஆம் தேதி தலைமையேற்க உள்ள இந்தியா,கடல்சார் பாதுகாப்பு, அமைதியை நிலைநாட்டுவது மற்றும் பயங்கரவாத தடுப்பு ஆகிய 3 முக்கிய விவகாரங்கள் மீதான உயர்நிலை கவுன்சில் கூட்டத்தை தனது தலைமையில் நடத்த உள்ளது.
- ஐ.நா. அமைப்பின் அதிகாரமிக்க பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினராக இந்தியா அண்மையில் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஜனவரி 1–ஆம் தேதி முதல் உறுப்பு நாடாக அங்கம் வகித்து வருகிறது. மொத்தம் 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களான 5 நாடுகளுடன் இந்தியா உள்பட 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன. இந்தியாவின் இரண்டு ஆண்டு உறுப்பினர் பதவி வரும் 2022–ஆம் ஆண்டில் நிறைவடைய உள்ளது.
- இந்த கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும், சுழற்சி முறையில் ஒவ்வொருமாதம் கவுன்சிலுக்கு தலைமை தாங்கும். அந்த வகையில், கவுன்சிலுக்கு இந்தியா முதன் முறையாக தலைமை தாங்கும் வாய்ப்பு ஆகஸ்ட் மாதத்தில் கிடைத்துள்ளது.
- இதுதொடர்பாக ஐ.நா. வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியா (ஆக.1) முதல் தலைமை வகிக்கும். இந்தப் பொறுப்பையேற்று முதல் பணி நாளான (ஆக.2) இந்தியா சார்பில் ஐ.நா. தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்திக்க இருக்கும் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி, பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாதத்துக்கான திட்டப் பணிகள் குறித்து விவரிப்பார். அது போல, பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினராக அல்லாத ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கும் அந்த விவரங்களை திருமூர்த்தி தெரிவிப்பார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 75–ஆவது சுதந்திர தினத்தை இந்தியா கொண்டாட இருக்கும் நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்பது என்பது இந்தியாவுக்கு கிடைத்த தனித்துவமான கௌரவமாகும். இந்த ஒரு மாத காலத்தில் கடல்சார் பாதுகாப்பு, அமைதியை நிலைநாட்டுவது மற்றும் பயங்கரவாத தடுப்பு ஆகிய 3 முக்கிய விவகாரங்கள் மீதான உயர்நிலை கவுன்சில் கூட்டத்தை தனது தலைமையில் இந்தியா நடத்த உள்ளது. அவற்றில், கடல்சார் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும். இந்த விவகாரத்தில் உள்ளார்ந்த அணுகுமுறையை அளிப்பது பாதுகாப்பு கவுன்சிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.
- அமைதியை நிலைநாட்டும் விவகாரம் இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமான ஒன்றாகும். இதற்கான முயற்சிகளுக்கு இந்தியா நீண்டகாலமாக ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

## 'இ–ருபி" பணப் பரிவர்த்தனை வசதி: தொடக்கி வைக்கிறார் பிரதமர் மோடி

- இருபி என்ற ரசீது முறை பணப் பரிவர்த்தனை வசதியை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார்.
- கரோனா தொற்று பரவலுக்குப் பிறகு இணையவழி பணப் பரிவர்த்தனைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. யுபிஐ என்ற இணைய வழிபணப் பரிவர்த்தனை வசதியை மத்திய அரசு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருகிறது. இணையவழி பணப் பரிவர்த்தனைக்கான பீம் செயலியையும் மத்திய அரசு ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்நிலையில், பணப் பரிவர்த்தனையை மேலும் எளிமைப்படுத்தும் நோக்கில் ".இ–ருபி" என்ற புதிய வசதியை மத்திய அரசு அறிமுகம் செய்யவுள்ளது. அதை பிரதமர் மோடி தொடக்கி வைக்கிறார். புதிய வசதியின்படி, இணையவழியில் முன்கூட்டியே பணத்தைச் செலுத்தி ரசீதுகளை வாடிக்கையாளர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

- பணம் செலுத்தவேண்டிய இடத்தில் அந்த ரசீது தொடர்பான விவரங்களை வழங்கினால் போதுமானதாகும். அதிலிருந்து பணம் பிடித்தம் செய்யப்பட்டுவிடும்.
- அந்த ரசீதை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு அது தொடர்பான விவரங்கள் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படும். அந்த விவரங்கள் க்யூஆர் குறியீடாகவும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- இந்த வசதியினால் பணம், கடன்அட்டை பற்று அட்டை உள்ளிட்ட எதையும் கையில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

## ஸ்வீடன் சென்றடைந்தது ஐஎன்எஸ் தபர்

- நட்பு நாடுகளுடனான ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் ஐஎன்எஸ் தபர் போர்க்கப்பல், ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோம் துறைமுகத்துக்கு சென்றடைந்தது.
- சுமார் இரண்டு தசாப்தங்களில் இந்திய கடற்படைக் கப்பல் ஸ்டாக்ஹோம் செல்வது இதுவே முதல் முறையாகும். ஸ்வீடன் கடற்படையின் துணைத்தலைவர் பிரிகேடியர்ஜெனரல்பெடெர் ஒல்சன், ஸ்வீடனில் உள்ள இந்திய தூதரகத்தின் பாதுகாப்புத்துறை அதிகாரி கேப்டன்பங்கஜ் மிட்டல் ஆகியோர் ஐஎன்எஸ் தபர் கப்பலை வரவேற்றனர்.

## G20 கலாச்சார அமைச்சர்கள் கூட்டம்

- இந்திய கலாச்சார இணையமைச்சர் மீனாக்ஷி யேகி ஜுலை 30ல் நடைபெற்ற G20 கலாச்சார அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா சார்பாக பங்கேற்றார்.
- இந்த கூட்டத்தை இத்தாலி இந்த ஆண்டு தலைமையேற்று நடத்துகிறது.
- கலாச்சார பகுதிகளை பாதுகாத்தல், கட்டிடங்களை வலுப்படுத்துல் கல்வி, பயிற்சி போன்றவற்றை அதிகரித்தல் இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## முஸ்லிம் பெண்கள் உரிமை தின நிகழ்ச்சி: மத்திய அமைச்சர்கள் பங்கேற்பு

- முத்தலாக் கூறி உடனடி விவாகரத்து செய்யும் நடைமுறைக்கு எதிரான சட்டம் அமல்படுத்தப்பட்ட 2 –ஆம் ஆண்டையொட்டி நாடு முழுவதும் பல்வேறு அமைப்புகளால் முஸ்லிம் பெண்கள் உரிமை தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
- புதுதில்லியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மத்திய சிறுபான்மை வார்த்தகத் துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி தொழிலாளர்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஆகியோர் கலந்து கொண்டனர். முத்தலாக் முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுடன் அவர்கள்கலந்துரையாடினார்.
- நிகழ்ச்சியில் முத்தலாக் முறைக்கு எதிராக சட்டம் கொண்டு வந்ததற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு முஸ்லிம் பெண்கள் நன்றி தெரிவித்தனர். 2019, ஆகஸ்ட் 1–ஆம் தேதி அமல்படுத்தப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் முஸ்லிம் பெண்களின் தன்னம்பிக்கை, சுயமரியாதையை மோடி அரசு வலுப்படுத்தியுள்ளதாகவும் தங்களின் அரசியலமைப்பு உரிமை அடிப்படை உரிமை, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துள்ளதாகவும் அவர்கள் கூறினார்.

## பிராந்திய மொழிகளில் பொறியியல் படிப்புகள்: 8 மாநிலங்களில் 14 கல்வி நிறுவனங்கள் தேர்வு

- தமிழகம், ஆந்திரம் உள்ளிட்ட 8 மாநிலங்களில் உள்ள 13 கல்வி நிறுவனங்கள் பிராந்திய மொழிகளில் பொறியியல் பாடங்கள் கற்பிக்க தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஏஐசிடிஇ தெரிவித்துள்ளது.
- பொறியியல் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் மட்டுமே பாடங்கள் நடத்தப்பட்டு வந்தன. இந்த நிலையில், பிராந்திய மொழிகளிலும் பொறியியல் கல்வியை பயிற்றுவிக்க ஏஐசிடிஇ எனப்படும் அகில இந்திய தொழில் நுட்ப கவுன்சில் மே மாதம் 27–ஆம் தேதி ஒப்புதல் வழங்கியது. அதன்படி, தமிழ், மலையாளம், தெலுங்கு கன்னடம், ஹிந்தி, குஜராத்தி, வங்கம் என 7 பிராந்திய மொழிகளில் கல்வி பயிற்றுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 500–க்கும் மேற்பட்ட கல்லூரிகள் விண்ணப்பித்தன.
- இந்தநிலையில் முதல்கட்டமாக தமிழ்நாடு, ராஜஸ்தான், உத்தரகண்ட் ஆந்திரம், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய எட்டு மாநிலங்களில் 14 கல்லூரிகளில் மட்டும் பிராந்திய மொழிகளில் பொறியியல் பாடங்களைக் கற்பிக்க ஏஐசிடிஇ அனுமதி அளித்துள்ளது. இந்த நிறுவனங்கள் நிகழ் கல்வியாண்டிலேயே பிராந்திய மொழியில் பொறியியல் கல்விமுறையை நடைமுறைப்படுத்தும்.

- இதில் ஹிந்தி மொழிக்கென உத்தரப்பிரதேச மாநிலத்தில் நான்கு கல்லூரிகளுக்கும், ராஜஸ்தானில் இரண்டு கல்லூரிகளுக்கும், மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரகண்டில் தலா ஒரு கல்லூரிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மராத்தி மொழிக்கு மகாராஷ்டிரத்தில் இரண்டு கல்லூரிகளுக்கும், தெலுங்கு வங்க மொழிகளுக்கு தலா ஒரு கல்லூரிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தைப் பொருத்தவரை ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் சிவில், மெக்கானிக்கல், மின் மற்றும் மின்னணுப் பொறியியல் என 3 பிரிவுகளுக்கும், கோவை ரத்தினம் பொறியியல் கல்லூரியில் கணினி அறிவியல் பாடப்பிரிவுக்கும் தமிழ் வழியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கரோனா சிகிச்சையில் அஸ்வகந்தா மூலிகை: ஆய்வு மேற்கொள்கிறது ஆயுஷ் அமைச்சகம்

- கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஸ்வகந்தா மூலிகையால் தயாரிக்கப்பட்ட மருந்து எந்த அளவுக்குப் பலனளிக்கும் என்பது குறித்து ஆய்வு செய்ய ஆயுஷ் அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- ஆயுஷ் அமைச்சகத்தின் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனமும், பிரிட்டனைச் சேர்ந்த லண்டன் சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவ மையமும் இணைந்து இந்த ஆய்வை நடத்தவுள்ளன. இதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளன.
- இதன்படி, பிரிட்டனில் உள்ள லெஸ்டர்ஷைர், பர்மிங்ஹாம், லண்டன் ஆகிய 3 நகரங்களைச் சேர்ந்த 2,000 பேர் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவர் என ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐடி சட்டத்தின் ரத்து செய்யப்பட்ட பிரிவு

- தகவல்–தொழில்நுட்ப (ஐடி) சட்டத்தின் 66ஏ பிரிவு ரத்து செய்யப்பட்டதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளுக்கே உள்ளதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தகவல்–தொழில்நுட்ப சட்டத்தின் 66ஏ பிரிவானது, சமூக வலைதளங்கள் உள்ளிட்டவற்றில் சர்ச்சைக்குரிய கருத்து தெரிவிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கவும் அபராதம் விதிக்கவும் வழிவகுத்து வந்தது. அது மக்களின் கருத்து தெரிவிக்கும் உரிமையை பாதிக்கும் வகையில் உள்ளதாகக் கூறி கடந்த 2015–ஆம் ஆண்டில் அந்தப் பிரிவை ரத்து செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
- அரசமைப்புச் சட்டத்தில் "காவல்", "பொது அமைதி" ஆகியவை மாநிலப் பட்டியலில் உள்ளன. காவலர்களை நிர்வகிக்கும் பொறுப்பும் மாநில அரசுகளிடமே உள்ளது. எனவே, நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் மாநில அரசுகளுக்கே உள்ளது.
- உச்சநீதிமன்ற உத்தரவை பின்பற்றி, தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டாமெனமாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்கு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்களவையில் அத்தியாவசிய பாதுகாப்பு சேவைகள் மசோதா நிறைவேற்றம்

- மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் தொடர் அமளிக்கிடையே அத்தியாவசிய பாதுகாப்பு சேவைகள் மசோதா நிறைவேற்றப்பட்டது.
- மசோதா விவரங்கள்: பாதுகாப்புத் துறை சார்ந்த அத்தியாவசிய சேவைகளில் பணியாற்றுவோர், வேலைநிறுத்தம் செய்வதைத் தடுக்கும் நோக்கில் இந்த மசோதா இயற்றப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோர் மீது பணிநீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த மசோதா வழிவகுக்கிறது.
- சட்டவிரோத வேலைநிறுத்தப் போராட்டம், அப்போராட்டத்தைத் தூண்டிவிடுவதற்காக நிதியுதவி வழங்குவது உள்ளிட்டவற்றைக் கண்காணித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மசோதா வழிவகுக்கிறது.
- தீர்ப்பாயங்கள் மசோதா நிறைவேற்றம்: பல்வேறு சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட 9 மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை ரத்து செய்யும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா மீதும் மக்களவையில் விவாதம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

## இணையவழி பணப் பரிவர்த்தனையில் "இ–ருபி" முக்கியப் பங்கு வகிக்கும்

- இணைவழி பணப் பரித்தனையில் "இ–ருபி" ரசீது வசதி முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பணப் பரிவர்த்தனையில் "இ–ருபி" ரசீது வசதி முக்கியப் பங்கு வகிக்கும். இதன் வாயிலாக இணையவழி பணப் பரிவர்த்தனையில் புதிய பரிமாணம் ஏற்பட்டுள்ளது. இணையவழி பணப் பரித்தனையில் வெளிப்படைத்தன்மையை இது உறுதி செய்யும். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர், கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளிட்டோருக்கு உதவி செய்ய விரும்புவோர் இனி பணமாக அளிக்க வேண்டிய அவசியமில்லை.
- "இ–ருபி" மூலமாக ரசீதுகளை வாங்கி சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிசளிக்க முடியும். குறிப்பிட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்படும் ரசீதை வேறு பயன்பாட்டுக்காகப் பயன்படுத்த முடியாது. தற்போது சுகாதார சேவைகளில் பயன்படுத்துவதற்கான ரசீதுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விரைவில் மற்ற சேவைகளுக்கான ரசீதுகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

## 100% தடுப்பூசி செலுத்தப்பட்ட முதல் நகரம்

- இந்தியாவில் கெரோனா தடுப்பூசி 100% செலுத்தப்பட்ட முதல் நகரம் ஒடிசா மாநிலம் புவனேஷ்வர் ஆகும்.

## Biotech–PRIDE வழிகாட்டு நெறிமுறைகள்

- தரவுகள் மாற்றம் மூலமான ஆராய்ச்சிகளை மேம்படுத்தும் Biotech – PRIDE என்ற வழிகாட்டு நெறிமுறைகள் மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங்கால் வெளியிடப்பட்டுள்ளது.

## ஓபிசி பட்டியல் தயாரிக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம்

- இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் (ஓபிசி) பட்டியலை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் தாங்களே தயாரிப்பதற்கு அதிகாரம் வழங்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவைக் கூட்டம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாவது:
- மகாராஷ்டிரத்தில் மராத்தா சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் கடந்த மே மாதம் 5–ஆம் தேதி இரு வேறு தீர்ப்புகளை வழங்கியது.

## கல்வி, ஆராய்ச்சியில் நெதர்லாந்து–இந்தியா இடையே ஒப்பந்தம்

- கல்வி, ஆராய்ச்சியில் இந்திய விண்வெளி அறிவியல், தொழில்நுட்பக் கல்வி நிறுவனமும் (ஐஐஎஸ்டி), நெதர்லாந்தின் டெல்ஃப்ட் தொழில்நுட்ப பல்கலைக்கழகமும் (டியு–டெல்ஃப்ட்) இணைந்து செயல்படுவதற்கு கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## இந்திய விமானப் படை தலைமை தளபதி இஸ்ரேல் பயணம்

- இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்திய விமானப் படை தலைமை தளபதி ஆர். கே.எஸ்.பதௌரியா இஸ்ரேல் சென்றுள்ளார்.
- இது தொடர்பாக இந்திய விமானப் படை சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "இந்தியாவும் இஸ்ரேலும் வலுவான, பல பரிமாணங்களை கொண்ட உறவை பேணி வருகின்றன.
- இந்நிலையில் இஸ்ரேல் விமானப் படைத் தளபதி அமீகம் நோர்கின் விடுத்த அழைப்பை ஏற்று அந்நாட்டுக்கு இந்திய விமானப்படை தலைமை தளபதி ஆர்.கே. எஸ்.பதௌரியா 3 நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

## குழந்தைகள் நல சட்டத் திருத்தங்கள்: திறம்பட அமல்படுத்த குடியரசு துணைத் தலைவர் அழைப்பு

- சிறார் நீதி (குழந்தைகளுக்கான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் சமீபத்தில் செய்யப்பட்ட திருத்தங்களை வரவேற்றுள்ள குடியரசு துணைத்தலைவர் எம். வெங்கையா நாயுடு, அதைத் திறம்பட அமல்படுத்த வேண்டியதும் அவசியம் என்றும் கூறினார்.
- மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, குடியாக துணைத் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது, வெங்கையா நாயுடு இந்த

கருத்துகளை தெரிவித்தார். பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற குழந்தைகள் தொடர்பான பிரச்னைகள் குறித்து பல கோரிக்கை மனுக்களை பெற்றதாக குடியரசு துணைத் தலைவர் குறிப்பிட்டார்.

- மாநிலங்களவையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சிறார் நீதி சட்டத் திருத்தம் 2021-இன் சிறப்பம்சங்களை குடியரசு துணைத்தலைவருக்கு அமைச்சர் ஸ்மிருதி இரானி விளக்கினார்.
- அப்போது தத்தெடுக்கும் முறைகளை விரைவுபடுத்தவும் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறப்பான பாதுகாப்பை உறுதி செய்யவும் சய்பத்திய சட்டத் திருத்தம், கூடுதல் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆதரவற்ற குழந்தைகளின் நலனுக்காக, மாநில அரசுகளுடன் இணைந்து, மத்திய அரசு அமல்படுத்தும் உதவி மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் பலவற்றை எடுத்து வருவதாக ஸ்மிருதி இரானி தெரிவித்தார்.

## காற்று தரக்கட்டுப்பாடு ஆணைய மசோதா

- தேசிய தலைநகர் புதுதில்லி பகுதியில் காற்று தரக்கட்டுப்பாட்டு ஆணையம் அமைப்பதற்கான மசோதா பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- புதுதில்லி பகுதியில் ஏற்படும் அதிக அளவிலான காற்று மாசுக்களை கட்டுப்படுத்தும் நோக்கத்திலான இந்த ஆணையத்தில் தலைவர் மற்றும் சில அமைச்சர்கள் உறுப்பினர்களாக செயல்படுவர்.
- இந்தியாவில் சுற்றுச்சூழல் சட்டங்கள் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## பாஸ்ட் ட்ராக் நீதிமன்றங்கள்

- மத்திய நீதிதுறை அமைச்சகம் 2019ம் ஆண்டு முதல் பாஸ்ட் ட்ராக் நீதிமன்றங்களை செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக போக்ஸோ வழக்குகள் இங்கு விசாரிக்கப்படுகின்றது.
- அவற்றை 1572 கோடியில் மீண்டும் செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## தொகுதி மேம்பாட்டு நிதி

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் 5 கோடி அளவில் நிதி வழங்கப்பட்டு வந்தது கெரோனா காலகட்டத்தில் அவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது செயல்படுத்தப்படும் பழைய திட்டங்களுக்கு 50% நிதி அளிக்கப்பட உள்ளது.

## சமக்ரா சிக்ஷா திட்டம் மேலும் 5 ஆண்டுகளக்கு நீட்டிப்பு

- பள்ளி கல்விக்கான சமக்ர சிக்ஷா திட்டத்தை (முழுமையான கல்வி திட்டம்) மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.1,85,398.32 கோடி சேர்த்து மொத்தம் ரூ.2,94,283.04 கோடியில், வரும் 2026-ஆம் ஆண்டு மார்ச் 31 வரை இந்த திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் 11.6 லட்சம் பள்ளிகளைச் சேர்ந்த 15.6 கோடி மாணவர்களும் 57 லட்சம் ஆசிரியர்கள் பயன்பெறுவர்.

## பிரதமர் மோடியுடன் ஆஸ்திரேலியா முன்னாள் பிரதமர் அபோட் சந்திப்பு

- இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் டோனி அபோட், தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப்பேசினார். அப்போது, இந்தியா-ஆஸ்திரேலியா இடையே வர்த்தகம், முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை வலுப்படுத்த இருவரும் உறுதியேற்றனர்.

## 2020-இல் 10 இலட்சம் பேருக்கு 21.03 நீதிபதிகள்: மத்திய சட்ட அமைச்சர்

- கடந்த ஆண்டு மக்கள்தொகை-நீதிபதிகள் விகிதம், 10 லட்சம் பேருக்கு 21.03 நீதிபதிகள் என்ற அடிப்படையில் இருந்தது என்று மாநிலங்களவையில் மத்திய சட்டத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.
- இது தொடர்பான கேள்விகளுக்கு அவர் எழுத்துபூர்வமாக அளித்த பதில்:
- 2011-ஆம் ஆண்டின் மக்கள்தொகையையும், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் பணியாற்றிய நீதிபதிகளின் எண்ணிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள்தொகை-நீதிபதி விகிதம் கணக்கிடப்படுகிறது.
- அதன்படி, கடந்த 2020-ஆம் ஆண்டு, மக்கள்தொகை-நீதிபதிகள் விகிதம், 10 லட்சம் பேருக்கு 21.03 நீதிபதிகள் என்ற அளவில் இருந்தது. இது, 2019-ஆம் ஆண்டில் 10 லட்சம்

பேருக்கு 20.39 நீதிபதிகள் என்ற விகிதத்திலும். 2018–ஆம் ஆண்டில் 10 லட்சம் பேருக்கு 19.78 நீதிபதிகள் என்ற விகிதத்திலும் இருந்தது.

- உச்சநீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை கடந்த 2014–இல் 31–ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை 2020–இல் 34–ஆக உயர்த்தப்பட்டது. இதேபோன்று, நாடு முழுவதும் உள்ள 25 உயர்நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 2014–இல் 906–ஆக இருந்தது. அது, கடந்த ஆண்டு டிசம்பரில் 1,079–ஆக உயர்த்தப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை கடந்த 2014–இல் 19,518–ஆக இருந்தது. அது, கடந்த ஆண்டு 24,225–ஆக உயர்த்தப்பட்டது என்றார் கிரண் ரிஜிஜு.

## காதி ஆணையம் தயாரித்த காகிதத்துக்கு காப்புரிமை

- நெகிழியால் (பிளாஸ்டிக்) இயற்கைக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் நோக்கில் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தால் உருவாக்கப்பட்ட நெகிழி கலந்த கையால் செய்யப்பட்ட காகிதம் காப்புரிமையை பெற்றுள்ளது.
- இந்திய அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் காப்புரிமை கட்டுப்பாட்டாளரால் ஜெய்ப்பூரில் உள்ள காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின், குமரப்பா தேசிய கையால் செய்யப்படும் காகித நிறுவனத்திற்கு கடந்த 2–ஆம் தேதி காப்புரிமை சான்றிதழ் வழங்கப்பட்டது.
- நெகிழி கலந்த கையால் செய்யப்படும் காகிதம் தயாரிக்கும் யோசனை 2018 செப்டம்பரில் தெரிவிக்கப்பட்ட நிலையில், இரண்டே மாதங்களில் குமரப்பா தேசிய கையால் செய்யப்படும் காகித நிறுவனத்தின் விஞ்ஞானிகளால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ரீபிளான் (இயற்கையில் நெகிழியின் அளவை குறைத்தல்) எனும் திட்டத்தின் கீழ் நெகிழி கலந்த கையால் செய்யப்படும் காகிதம் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தியாவில் முதல் முறையாக நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தில், நெகிழி கழிவு மறுசுழற்சிக்குள்ளாக்கப்பட்டு காகிதக் கூழுடன் கலந்து காகிதமாக மாற்றப்பட்டது. ஒரு முறை பயன்படுத்தும் நெகிழியை எதிர்த்து போராடுவதற்கு பிரதமர் விடுத்த அழைப்பை ஏற்று இந்தக் கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.
- சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் நீடித்த வேலைவாய்ப்பு ஆகிய இரண்டு நோக்கங்களை எட்டும் விதத்தில் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் இந்தக் கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.
- காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் மாநில காதி வாரியங்களின் கீழ் இயங்கும் சுமார் 2640 கையால் காகிதம் செய்யும் நிறுவனங்களுக்கு வருடத்திற்கு 3,000 மெட்ரிக் டன் நெகிழி கழிவை கையாளும் திறன் உண்டு.

## ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா என மாற்றம்

- ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருது இனி மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது என்று அழைக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
- தயான்சந்த் பெயரைச் சூட்ட வேண்டும் என, நாடு முழுவதும் மக்களிடமிருந்து பல வேண்டுகோள்கள் பெறப்பட்டன. அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கேல் ரத்னா விருது, இனிமேல் மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது என அழைக்கப்படும் என பிரதமர் மோடி கூறியுள்ளார். இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டன் தயான்சந்த், விளையாடிய காலகட்டத்தில் நமது அணி சர்வதேச அளவில் ஒலிம்பிக் உள்பட பல போட்டிகளில் சாதனைகளைப் படைத்தது.
- இது தொடர்பாக பிரதமர் மோடி சுட்டுரையில் வெளியிட்டபதிவில் மேலும் கூறியிருப்பதாவது:
- ஒலிம்பிக்கில் நமது நாட்டின் ஆண்கள், மகளிர் ஹாக்கி அணியின் மிகச் சிறப்பான செயல்பாடு நமது ஒட்டுமொத்த தேசத்தையும் கவர்ந்துள்ளது. ஹாக்கி விளையாட்டு தொடர்பான ஆர்வம் நாடு முழுவதும் அதிகரித்துள்ளது. இது எதிர்காலத்தில் ஹாக்கி மேலும் பிரபலமடைய மிகவும் நல்ல அறிகுறியாக இருக்கிறது.
- கேல் ரத்னா விருதுக்கு, மேஜர் தயான்சந்த் பெயரை சூட்ட வேண்டும் என நாடு முழுவதும் மக்களிடமிருந்து பல வேண்டுகோள்களை நான் ஏற்கெனவே பெற்றுள்ளேன். அவர்களின் கருத்துகளுக்கு நன்றி. அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கேல் ரத்னா விருது, இனிமேல் மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது என அழைக்கப்படும்.

- இந்தியாவுக்கு பெருமை சேர்த்த முன்னணி விளையாட்டு வீரர்களில், மேஜர் தியான் சந்தும் ஒருவர். நமது நாட்டின் மிக உயர்ந்த விளையாட்டு விருதுக்கு அவரது பெயர் சூட்டப்படுவது பொருத்தமானது என்று கூறியுள்ளார்.

## ஈரான் அதிபருடன் இந்திய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு

- ஈரான் புதிய அதிபராக பதவியேற்றுள்ள இப்ராஹிம் ரயிசியை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்தார்.

## இந்தியா–சீனாப் படைகள் கோக்ரா பகுதியிலிருந்து விலகல்

- கிழக்கு லடாக் பகுதியில் சீனாவின் அத்துமீறலை அடுத்து 2020ம் ஆண்டில் கிழக்கு லடாக்கின் கோக்ரா பகுதியில் படைகள் குவிக்கப்பட்டன. இருதரப்பு புரிந்துணர்விற்கு பிறகு தற்போது படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

## இந்தியாவின் அணுமின் உற்பத்தி திறன் 2031ல் 22480 மெகாவாட்

- இந்தியாவின் தற்போதைய அணுமின் உற்பத்தி திறன் 6780 மெகாவாட் இது 2031ம் ஆண்டில் 22480 மெகாவாட்டாக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பாரதிய நபிகியா வித்யூத் நிகாம் லிமிடெட் கட்டுமானத்தில் உள்ளது. அழுத்த கொதிகலன் 700 மெகாவாட் திறனில் 10 இடங்களில் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஜான்சன் & ஜான்சனின் ஒற்றைத் தவணை கரோனா தடுப்பூசிக்கு அவசரகால ஒப்புதல்

- அமெரிக்காவைச் சேர்ந்த ஜான்சன் & ஜான்சன் நிறுவனம் தயாரித்துள்ள ஒற்றைத் தவணை கரோனா தடுப்பூசியை இந்தியாவில் பயன்படுத்துவதற்கான அவசரகால ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- நாட்டில் கடந்த ஜனவரி முதல் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கோவிஷீல்ட் கோவேக்ஸின் கரோனா தடுப்பூசிகள், ரஷியாவின் ஸ்புட்னிக்–வி தடுப்பூசி, அமெரிக்காவின் மாடர்னா தடுப்பூசி ஆகியவற்றுக்கு இந்தியாவில் ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில், 5–ஆவது தடுப்பூசியாக ஜான்சன்கிஜான்சன் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்ற தடுப்பூசிகள் அனைத்தும் 2 தவணைகளாகச் செலுத்தப்படும் நிலையில், ஜான்சன் & ஜான்சன் தடுப்பூசியை ஒரே தவணையில் செலுத்தினால் போதுமானது.

## கத்தார் சிறப்புத் தூதருடன் அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு

- அரபு நாடுகளில் ஒன்றான கத்தாரின் சிறப்புத் தூதர் மசூத் அல் கங்காணியுடன் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

## இதய கோளாறுகளின் உயிர் வங்கி துவக்கம்

- கேரள மாநிலத்தில் (SCTIMST) ஸ்ரீ சித்ரா திருநாள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இந்தியாவின் முதல் இதய செயலிழப்பு உயிர் வங்கியை துங்கியுள்ளது.
- இதயம் செயலிழந்த நோயாளிகளின் உடல்நிலை, நோய் எதிர்ப்பு திறன் போன்றவை ஆராயப்படுகிறது.
- இங்கு உயர்தரமான உடல் செல்களும் ஆய்வு செய்யப்பட உள்ளது.

## ஹைட்ரஜன் வாயு மூலமாக ரயில் இயக்க ரயில்வே வாரியம் முடிவு

- மூலிகைமணி இதழின் ஆசிரியரும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஹைட்ரஜன் வாயு மூலமாக ரயிலை இயக்க ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளது. இதற்காக, ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.
- கடந்த 2015–ஆம் ஆண்டு பாரீஸ் பருவநிலை ஒப்பந்தப்படி, சுற்றுச்சூழல் மாசை குறைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, நாட்டில் ஹைட்ரஜன் வாயு உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது போன்று, ரயில்வே நிர்வாகமும் 2030–ஆம் ஆண்டுக்குள் சுற்றுச்சூழலுக்கு உகந்த ரயில் போக்குவரத்தை ஏற்படுத்த ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. இதற்காக இந்திய ரயில்வே மாற்று எரிபொருள் அமைப்பு ஹைட்ரஜன் வாயுவைப் பயன்படுத்தி ரயில் இயக்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது.

- இரு பக்கமும் டீசலால் இயங்கும் என்ஜின்கள் உள்ள ரயில் தொடரில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த ஒப்பந்தம் கோரியுள்ளது. இந்தத் திட்டம் ஹரியாணா மாநிலத்தில் உள்ள வடக்கு ரயில்வே பகுதியான சோனிபட் – ஜீந்த் (89 கி.மீ.) ரயில்பாதை பிரிவில் அமல்படுத்தப்பட உள்ளது.

## மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபாவுக்கு ஓராண்டு பதவி நீட்டிப்பு

- மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபாவுக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு அளித்து மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்தது.
- முன்னாள் உள்துறை செயலரான கௌபா, கடந்த 2019–ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவைச் செயலராக இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார். இப்போது, அந்தப் பதவிக் காலம் நிறைவடைவதையடுத்து அவருக்குப் பணி நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## பிரச்னைகளை இணைந்து எதிர்கொள்வோம்

- கடல்சார் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை இணைந்து எதிர்கொள்வதற்கு சர்வதேச நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- இந்த விவகாரத்தில் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் 5 கொள்கைகளை ஐ.நா. உயர்நிலை விவாதக் கூட்டத்தில் அவர் முன்மொழிந்தார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. இந்நிலையில், கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பான உயர்நிலை விவாதக்கூட்டத்தை இந்தியா நடத்தியது. 'கடல்சார் பாதுகாப்பு மேம்பாடு–சர்வதேச ஒத்துழைப்புக்கான முக்கிய விவகாரம்' என்ற தலைப்பில் காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:
- உலக நாடுகளுக்குப் பொதுவான பாரம்பரியமாக கடல்கள் உள்ளன. சர்வதேச வர்த்தகத்துக்கு கடல்வழிகளே முக்கிய ஆதாரமாக விளங்கி வருகின்றன. அந்தக் கடல்வழிகளை பயங்கரவாதத்துக்காகவும் கொள்ளை உள்ளிட்ட குற்றச்செயல்களுக்காகவும் சிலர் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர்.
- பேரிடர்களை எதிர்கொள்ளுதல்: மூன்றாவதாக, இயற்கைப் பேரிடர்களையும் பயங்கரவாதிகள், கொள்ளையர்கள் உள்ளிட்டோரால் ஏற்படும் கடல்சார் அச்சுறுத்தல்களையும் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும். புயல், சுனாமி உள்ளிட்ட விவகாரங்களில் நாடுகளின் ஒத்துழைப்பு அவசியமாகிறது.
- வளங்கள் பாதுகாப்பு: கடல் வளங்களைப் பாதுகாப்பது 4–ஆவது கொள்கையாகும். தற்போதைய காலகட்டத்தில் கடல்சார் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நெகிழிப் பொருள்கள், கப்பல்கள் மூலமாக எண்ணெய்க் கசிவு உள்ளிட்ட பல்வேறு மாசுபாடுகளால் கடல் வளங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன.
- பொறுப்பு மிக்க கடல்வழித் தொடர்பு: ஐந்தாவதாக, நாடுகளுக்கிடையேயான கடல்வழித் தொடர்பை பொறுப்புடன் முன்னெடுத்துச் செல்வது அவசியம். இந்த 5 கொள்கைகளையும் முறையாகப் பின்பற்றுவதன் வாயிலாக கடல்சார் பாதுகாப்பில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

## 80 கோடி அகண்ட அலை வரிசை இணைப்புகளை இரு மடங்காக உயர்த்த முயற்சி

- இந்தியாவில் தற்போதுள்ள 80 கோடி அகண்ட அலை வரிசை இணைப்புகளை (பிராட்பேண்ட் இரண்டு மடங்காக உயர்த்தி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் காண இந்திய இணையதள ஆளுகை குழுவின் துணைத் தலைவர் டி.வி.ராமச்சந்திரன் தெரிவித்தார்.
- ஐக்கிய நாடுகள் சபையை அடிப்படையாகக் கொண்ட இணையதள ஆளுகை குழுவின் இந்திய பிரிவை மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அமைத்துள்ளது. இந்த அமைச்சகத்தின் இந்திய தேசிய இணையதள இணைப்பகத்தின் (நிக்சி) தலைவர் அனில்குமார் ஜெயின் தலைவராகவும் இந்திய செல்லிடப்பேசி கூட்டமைப்பின் முன்னாள் தலைவரான தமிழகத்தைச் சேர்ந்த டி.வி.ராமச்சந்திரன் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அகண்ட அலைவரிசை இணைப்புகளை அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்து இந்திய 2–ஆவது இடத்தில் உள்ளது. தற்போது இந்தியாவில்

80 அகண்ட அலைவரிசை இணைப்புகள் உள்ளன. இந்த 80 கோடி இணைப்புகளை 80 கோடி பேர் பயன்படுத்துகிறார்கள் என்று அர்த்தமல்ல. நமது மக்கள் தொகையில் பாதி அளவுகூட பயன்படுத்துகிறார்கள் என்று கூற முடியாது. ஒருவரே 4 இணைப்புகளைக் கூட பெற்றிருக்கலாம். ஆனால், அமெரிக்காவில் 30 கோடி மக்களும் இணைப்புகளைப் பெற்றுள்ளனர்.

## புதிய கல்வி கொள்கையை செயல்படுத்தும் முதல் மாநிலம்

- 2020ம் ஆண்டில் மத்திய அரசால் துவங்கப்பட்ட புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்தும் உத்தரவை கர்நாடக மாநில அரசு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக பிறப்பித்துள்ளது.
- 2021-22 இந்த கல்வியாண்டிலேயே இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு ஒரே ஒழுங்கு முறையின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது.

## SCO – நீதித்துறை அமைச்சர்கள் மாநாடு

- சாங்சாய் ஒத்துழைப்பு அமைப்பின் நீதித்துறை அமைச்சர்கள் மாநாடு காணொலி காட்சி வழியாக நடைபெற்றது. இதில் இந்திய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜி கலந்து கொண்டார்.
- 8 நாடுகளின் அமைச்சர்கள் கூட்டம் தஜகிஸ்தானில் நடத்தப்படுகிறது.
- இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான, உஸ்பெகிஸ்தான், சீனா நாடுகளின் சட்ட அமைச்சர்கள் பங்கேற்றனர்.

## உணவு எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு பெற 11000 கோடி

- மத்திய அரசு வரும் ஆண்டுகளில் தேசிய அளவில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு பெற 11000 கோடி ரூபாயை செலவிட உள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- இதற்காக மத்திய வேளாண் அமைச்சகத்தால் தேசிய உணவு எண்ணெய் – பாமாயில் (NMEO-OP) என்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் 2.0

- ஏழைக் குடும்பங்களுக்கு 2-ஆம் கட்ட இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தை (பிரதம மந்திரி உஜ்வலா யோஜனா 2.0) பிரதமர் நரேந்திர மோடி தொடக்கிவைத்தார்.
- உத்தர பிரதேச மாநிலம், மஹோபா நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர், காணொலி முறையில் பங்கேற்று 10 பெண்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புக்கான ஆவணங்களை வழங்குவதாக அறிவித்தார். அவர் சார்பில், லக்னௌ நகரில் முதல்வர் யோகி ஆதித்யநாத், பயனாளிகளிடம் அந்த ஆவணங்களை ஒப்படைத்தார்.

## பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு 10% இடஒதுக்கீடு: 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் அமல்

- பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் முறை 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் பிரதிமா பௌமிக் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம், மகாராஷ்டிரம், குஜராத், கோவா, ஜார்க்கண்ட், உத்தரகண்ட், அஸ்ஸாம், மிஸோரம் ஆகிய மாநிலங்களிலும் தில்லி, ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசங்களிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.
- பட்டியலினத்தவர், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட மத்திய அரசு பணியிடங்களை நிரப்பும் பணிகளை மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறை கண்காணித்து வருகிறது.

## இந்தோ-திபெத் காவல் படையில் பெண்கள்

- முதல் முறையாக இந்தியா-திபெத் எல்லை காவல் படையில் பிரக்ரிதி, திக்ஷா என்ற இரண்டு பெண் இராணுவ அலுவலர்கள் பயிற்சி முடிந்து பணியில் சேர்ந்துள்ளனர்.
- மத்திய பணியாளர் தேர்வாணையம் மூலம் 2016ம் ஆண்டில் பணிக்கு தேர்வானவர்கள்.

## கோவிட்–19க்கு எதிரான கண்டுபிடிப்புகள் தரவரிசை

- ஸ்டார்ட் அப் பிளிங்க் நிறுவனம் வெளியிட்டுள்ள கொரோனா–19க்கு எதிரான நடவடிக்கைகளுக்கான கண்டுபிடிப்புகள் தரவரிசைப் பட்டியலில் இந்தியா 40 நாடுகளில் 32வது இடம் பெற்றுள்ளது.
- முதல் 5 நாடுகளில் அமெரிக்கா, இஸ்ரேல், கனடா, பெல்ஜியம், சுவிடசர்லாந்து போன்றவை உள்ளது.
- உலகம் முழுவதிலுமான 100 நகரங்களில் பெங்களூரு 49வது இடத்திலும் புதுதில்லி 55வது இடத்திலும் உள்ளது.

## உலக இளைஞர் மேம்பாட்டு குறியீடு

- இலண்டனில் உள்ள காமன்வெல்த் செயலகத்தில் வெளியிடப்பட்டுள்ள உலக இளைஞர் மேம்பாட்டு குறியீட்டில் இந்தியா 122வது இடம் பெற்றுள்ளது.
- ஆப்கானிஸ்தான், இந்தியா, ரஷ்யா, எத்தியோப்பியா, புர்கினாபோனா நாடுகளில் 2010 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓபிசி மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல்

- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான (ஓபிசி) பட்டியலை மாநிலங்களே தயாரித்துக் கொள்ள அனுமதி வழங்கும் மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.
- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரை மாநில அரசுகளே கண்டறியும் வகையில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசமைப்புச் சட்ட (127–ஆவது திருத்தம்) மசோதாவை மத்திய சமூக நீதி–அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் மக்களவையில் தாக்கல் செய்தார்.

## இணையவழியில் போக்குவரத்துத் துறை சேவைகள்

- தில்லி போக்குவரத்துத் துறையின் 33 பணிகள் தொடர்பான சேவைகளை இனிமேல் இணையவழியில் (ஆன்லைன்) பெறலாம் என்று முதல்வர் அரவிந்த் கேஜரிவால் தெரிவித்துள்ளார். இது ஒரு புரட்சிகர நடவடிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.
- இதுதொடர்பாக கேஜரிவால் மேலும் கூறியதாவது: ஐபி எஸ்டேட் மோட்டார் உரிம அலுவலகத்துக்கு (எம்எல்லு மக்கள் தங்கள் பணிக்காக இனிமேல் வர வேண்டிய தேவை இருக்காது.
- போக்குவரத்துத்துறை தொடர்பான பணிகளை மக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே செய்து முடிக்கலாம் என்று கேஜரிவால் தெரிவித்துள்ளார்.
- போக்குவரத்துத் துறையைப்போல, தில்லி அரசின் பல்வேறு துறைகளில் சேவைகள் ஆன்லைனில் பெறுவதற்கான வசதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

## சுயஉதவிக் குழு மகளிருடன் பிரதமர் மோடி கலந்துரையாடல்

- 4 லட்சத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுவினருக்கு ரூ.1625 கோடி அளவில் மூலதன நிதி உதவியையும் பிரதமர் விடுவிக்கிறார். உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகத்தின், பிரதமரின் சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் 7,500 பேருக்கு ரூ.25 கோடி மூலதன நிதியையும், தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்பட்ட 75 விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ரூ.4.13 கோடி நிதியையும் பிரதமர் மோடி வழங்குகிறார்.
- மத்திய ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங், மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் பசுபதி குமார் பாரஸ், ஊரக மேம்பாட்டு இணையமைச்சர்கள் சாத்வி நிரஞ்சன் ஜோதி, ஃபகான்சிங் குலஸ்தே, பஞ்சாயத்து ராஜ் இணையமைச்சர் கபில் மொரேஸ்வர் பாட்டீல் மற்றும் உணவுபதப்படுத்துதல் தொழில்துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.
- கிராமப்புற ஏழை குடும்பங்களை படிப்படியாக சுய உதவி குழுக்களாக மாற்றுவதையும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை பரவலாக்கவும், அவர்களின் வருமானம் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் நீண்டகால ஆதரவு வழங்குவதைதீன்தயாள் அந்தியோதயா திட்டம் – தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் பெரும்பாலான செயல்பாடுகள், சுய உதவிக் குழுவினரால் அமல்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

## முதல் இணையதள ஆளுமை மன்றம்

- முதல் இணையதள ஆளுமை மன்றத்தை இந்தியா அக்டோபர் 20ல் தலைமையேற்று நடத்த உள்ளது.
- Inclusive Internet for Digital India என்பது இதன் மையக்கருத்தாக இருக்கும்.
- தேசிய இணையதள எக்ஸேஞ்ச் மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஆகியோர் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

## வேளாண் துறையில் எஸ்சிஓ நாடுகளுடன் ஒத்துழைப்பு

- உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) உறுப்பு நாடுகளுடன் வேளாண் துறையில் மேலும் இணைந்து பணியாற்ற இந்தியா விரும்புவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறினார்.
- எஸ்சிஓ உறுப்பு நாடுகளின் வேளாண் துறை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில், அமைச்சர் நரேந்திர சிங் தோமர் காணொலி முறையில் பங்கேற்றுப் பேசியதாவது:
- உணவுப் பொருள் உற்பத்தியிலும், உணவுப் பாதுகாப்பிலும் கரோனா பெருந்தொற்று நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பிலும் கரோனா பெருந்தொற்று நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டுமெனில், அதன் உற்பத்தியிலும் விநியோகத்திலும் சுணக்கம் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக, எஸ்சிஓ நாடுகள் இன்னும் நெருக்கமாக, ஒத்துழைப்படன் இணைந்து செயல்பட வேண்டும்.
- வேளாண் துறையில் பிற நாடுகள் தன்னிறைவு அடைவதற்கு, அந்த நாடுகளின் உணவு பாதுகாப்பை உறுதி செய்யவும் தனிப்பட்ட முறையிலும், சர்வதேச அமைப்புகள் சார்பிலும் இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கும்.
- கரோனா பெருந்தொற்று பாதிப்புக்கு மத்தியிலும் இந்தியாவில் வேளாண் சாகுபடி சிறப்பாக இருந்தது. உற்பத்தி அதிகரித்தது மட்டுமின்றி, ஏற்றுமதியும் அதிகரித்தது.
- இதனால் சர்வதேச உணவுப் பாதுகாப்புக்கும் இந்தியா பங்களிப்பு செலுத்தியது என்றார் நரேந்திர சிங் தோமர்.

## யானை, புலிகள் எண்ணிக்கை கணக்கீடு: நெறிமுறைகள் வெளியீடு

- தேசிய அளவில் யானை மற்றும் புலிகளின் எண்ணிக்கையை வரும் 2022–ஆம் ஆண்டு கணக்கிடும் போது பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளை மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெளியிட்டார்.
- உலக யானை தினத்தையொட்டி யானைகள் மற்றும் புலிகளின் எண்ணிக்கை மதிப்பீட்டை அமைச்சகம் முதன்முறையாக இணைத்து, அதற்கான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் பூபேந்தர் யாதவ், யானைகளை பாதுகாப்பதில் உள்ளூர் மக்களின் பங்களிப்பை வலியுறுத்தியதோடு மனிதர்கள்–யானைகளுக்கு இடையேயான பிரச்சனைகளை குறைக்கும் வகையிலான அணுகுமுறையைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

## இந்தியாவில் மின்சார வாகன உள்கட்டமைப்பு: கையேட்டை வெளியிட்டது நீதி ஆயோக்

- மின்சார வாகனங்களில் மின்னேற்றம் (சார்ஜ்) செய்வதற்கான உள்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டும் கையேட்டை நீதி ஆயோக் வெளியிட்டது.
- மின்னேற்ற உள்கட்டமைப்பை மேம்படுத்தி மின்சார வாகனப் போக்குவரத்தை நோக்கி நாடு வேகமாக மாறுவதற்கு உதவுவதே இந்த கையேட்டின் நோக்கமாகும்.
- நீதி ஆயோக், மின்சார அமைச்சகம், மின் சிக்கனத்துக்கான அலுவலகம் மற்றும் வேர்ல்ட் ரிசோர்சஸ் இன்ஸ்டிட்யூட் இந்தியா ஆகியவை இணைந்து இக்கையேட்டை உருவாக்கியுள்ளன. மின்சார வாகனங்களுக்கான மினனேற்ற உள்கட்டமைப்பை திட்டமிடுதல், ஒப்புதல் அளித்தல் மற்றும் உருவாக்குவதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு முறையான மற்றும் முழுமையான வழிகாட்டுதல்களை இந்த கையேடு வழங்குகிறது.

## சீன பணியை இந்தியா பின்பற்றத் தேவையில்லை

- சீன பாணியைப் பின்பற்றி உலகின் உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்க முடியாது; எனவே, சீனா ஏற்கெனவே ஆதிக்கம் செலுத்தி வரும் தொழில்களை விடுத்து புதிதாக எழுச்சியடைந்து வரும் துறைகளில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும் என்று நீதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ அமிதாப்காந்த் தெரிவித்தார்.
- இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் (சிஐஐ) நிகழ்ச்சியில் காணொலி முறையில் பங்கேற்று அவர் பேசியதாவது:
- இந்திய தனியார் தொழில் துறையினர் புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜன், உயர்ரகமின்கலன்கள், நவீன சூரியமின் உற்பத்தி தகடுகள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தில் ஆன பொருள்களின் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- சீன பாணியைப் பின்பற்றி உலகின் உற்பத்திமையமாக இந்தியா உடுவெடுக்க முடியாது. நாம் நமது வளர்ச்சிக்காக நவீன தொழில்நுட்பத்தில் அமைந்த புதிய துறைகளைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்கு இதுதான் சரியான நேரம்.
- ஏற்கெனவே சீனா ஆதிக்கம் செலுத்தி வரும் தொழில்களை விடுத்து புதிதாக உருவாகி வரும் துறைகளில் இந்தியா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- ஏனெனில், சீனா ஏற்கெனவே கோலோச்சி வரும் தொழில்களை இந்தியா தனது வசப்படுத்துவது என்பது எளிதான காரியமல்ல. ஏற்கெனவே நமது நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் வலுவான நிறுவனங்கள் உள்ளன.

## முதுமலை புலிகள் காப்பகத்தில் சர்வதேச யானைகள் தினம்

- முதுமலை புலிகள் காப்பகத்தில் சர்வதேச யானைகள் தின விழா கொண்டாடப்பட்டது.
- நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் யானைகள் அணிவகுத்து நின்றன. யானைகளுக்குப் பிடித்த உணவுகளான பழங்கள், கரும்பு, வெல்லம், பொங்கல், ஊட்டச்சத்து உணவுகள் வழங்கப்பட்டன.

## நகர்ப்புற பகுதிகளில் வன மூலங்களின் உரிமை

- சட்டீஸ்கர் மாநிலத்தில் இந்தியாவிலேயே முதலாவதாக நகர்ப்புறங்களில் உள்ள ஜனங்களின் மூலங்களுக்கான உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.
- தாமத்ரி மாவட்டத்தில் உள்ள 4,127 ஹெக்டேர் வனப்பரப்பு புலிகள் காப்பக பகுதிக்குள் உள்ளடங்கியதாக வருவதால் 2006ம் ஆண்டு வன உரிமை சட்டத்தின் கீழ் இந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் நீர் ப்ளஸ் நகரம்

- இந்தியாவின் தூய்மையான நகரமான இந்தூர் நகரம் குடிநீர் தர மேலாண்மைக்கான (Water Plus) சான்றிதழ் பெற்றுள்ளது.
- இந்தியாவிலேயே சிறந்த குடிநீர் சேவைக்காக இந்த சான்றிதழை பெறும் முதல் நகரம் இதுவாகும்.

## "QUEST கல்வி"

- இந்தியாவின் சுகாதார தரநிலையை மேம்படுத்தும் QUEST கல்வியை இஸ்ரோ தலைவர் K.சிவன் QUEST – (Health Quality Upgradation Enabled by Space Technology of ISRO) முதல் கட்டமாக 20 தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

## வாகன மறுசுழற்சிக் கொள்கை பொருளாதாரத்தை மேம்படுத்தும்

- மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் வாகன மறுசுழற்சிக் கொள்கை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- குஜராத் தலைநகர் காந்திநகரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் காணொலி வாயிலாகப்பங்கேற்றபிரதமர் மோடி, தேசிய வாகன மறுசுழற்சிக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அப்போது அவர் பேசியதாவது:
- பழைய, உபயோகமற்ற வாகனங்களை மறுசுழற்சி செய்யும் நோக்கில் இந்தக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலமாக நாட்டின் போக்குவரத்துத் துறை முன்னேற்றம் காணும். சாலைகளில் அறிவியல்பூர்வமாக இயங்குவதற்கு சாத்தியமற்ற வாகனங்கள் இந்தக் கொள்கையின் வாயிலாக மறுசுழற்சி செய்யப்படும்.

- வாகனங்களை நவீனப்படுத்தும் வகையிலும், வாகனப் போக்குவரத்தை எளிமைப்படுத்தும் நோக்கிலும் இந்தக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நகரங்களில் மாசுபாட்டைக் குறைப்பதற்கும், வாகனக் கழிவுப் பொருள்களை முறையாகப் பயன்படுத்துவதற்கும் இக்கொள்கை உதவும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்தவும் இக்கொள்கை முக்கியப் பங்களிப்பை வழங்கும். போக்குவரத்து, உலோகங்கள் உற்பத்தித் துறைகளில் நாட்டை சுயசார்பு அடையச் செய்வதற்கு வாகன மறுசுழற்சிக்கொள்கை உதவும்.
- இக்கொள்கையின் கீழ் வாகனங்களை மறுசுழற்சி செய்ய ஒப்படைக்கும்நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். அச்சான்றிதழைக் கொண்டு புதிய வாகனங்களை வாங்கும்போது அதற்கு அவர்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

## ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு தடை

- அடுத்த ஆண்டு 2022 ஜுலை 1 முதல் நாடு முழுவதும் ஒரு முறை பயன்படுத்தும் பிளாடிக்கிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயாவிற்கு அனுமதி

- கோழி வளர்ப்பு துறையின் மேம்பாட்டிற்காக நாட்டில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயாவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஸ்கைட்ராக்ஸ் 100 விமான நிலையங்கள் பட்டியல்

- 2021ம் ஆண்டிற்கான உலகின் சிறந்த 100 விமான நிலையங்கள் பட்டியல் ஸ்கைட்ராக்ஸ் நிறுவனத்தால் வெளியிட்டுள்ளது.
- இதில் கத்தாரின் ஹமாத் சர்வதேச விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது.
- இதில் புதுதில்லி இந்திரா காந்தி விமான நிலையம் 45வது இடம் பெற்றுள்ளது (2020ல் 50வது இடம்).
- இந்தியாவில் ஹைதராபாத் (64) மும்பை (65) பெங்களூரு (71) பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

## ஆகஸ்ட் 14–ஆம் தேதி பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினம்

- இந்திய பிரிவினையின் போது நிகழ்ந்த மக்களின் போராட்டங்களையும், தியாகங்களையும் நினைவுகூரும் வகையில் ஆகஸ்ட் 14–ஆம் தேதியானது 'பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக' அனுசரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
- இதுதொடர்பாக பிரதமர் மோடி சுட்டுரையில் வெளியிட்ட பதிவுகளில், 'பிரிவினையின் வலிகளை ஒரு போதும் மறக்க முடியாது. லட்சக்கணக்கான நமது சகோதரர்களும் சகோதரிகளும் இடம்பெயர்ந்தனர். அப்போது வெறுப்புணர்வால் ஏற்பட்ட வன்முறையில் பலர் உயிரிழந்தனர். அந்தப் போராட்டத்தையும் மக்களின் தியாகங்களையும் நினைவுகூரும் வகையில் ஆகஸ்ட் 14–ஆம் தேதியானது பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக அனுசரிக்கப்படும்.
- இந்த தினத்தில் சமூகப் பிரிவினைகள், ஒற்றுமையின்மை உள்ளிட்டவற்றை நீக்கி சமூக நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சமூக மேம்பாடு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக மக்கள் உறுதியேற்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.
- பிரதமரின் அறிவிப்பைத் தொடர்ந்து, ஆக. 14–ஆம் தேதியை பிரிவினைக் கொடுமைகள் நினைவு தினமாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டது.
- உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி: மத்திய செய்தி, ஒலிபரப்புத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ஆண்டுதோறும் சுதந்திர தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். ஆனால், சுதந்திரத்துடன் பிரிவினையின் துயரங்களையும் மக்கள் அனுபவிக்க நேரிட்டது.

## செப்டம்பர் 25–இல் பிரதமர் மோடி நேரடியாக உரையாற்ற வாய்ப்பு

- இந்த ஆண்டுக்கான ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக கலந்து கொண்டு வரும் செப்டம்பர் மாதம் 25–ஆம் தேதி உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: இந்த ஆண்டுக்கான ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றும் தலைவர்களின் பட்டியலை அந்த அமைப்பு அண்மையில் வெளியிட்டது. அந்தப்

பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி வரும் செப்டம்பர் 25–ஆம் தேதி உரையாற்றுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய ராம்சார் ஈரநிலப் பகுதிகள்

- ராம்சார் ஈரநிலப்பகுதிகள் இந்தியாவிலிருந்து மேலும் 4 பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது.
- குஜராத்தின் தோல், குஜராத்தின் வத்வானா ஹரியானா சுல்தான்பூர், ஹரியானாவின் பின்டாவாஸ் ஆகிய பகுதிகளுடன் சேர்த்து இந்தியாவில் 46 ராம்சார் ஈரநிலப்பகுதிகள் இந்தியாவில் உள்ளது.

## செயற்கைக்கோள் தொலைபேசியை கொண்டுள்ள இந்தியாவின் முதல் தேசிய பூங்கா

- அஸ்ஸாம் மாநிலம் காசிரங்கா தேசிய பூங்காவில் செயற்கைக்கோள் வசதியுடைய தொலைபேசி நாட்டிலேயே முதல்முறையாக அமைக்கப்பட்டுள்ளது. BSNL நிறுவனத்தால் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் ட்ரோன் தடய அறிவியல் ஆய்வகம்

- கேரள மாநிலத்தில் இந்தியாவின் முதல் அங்கீகாரமில்லாத ட்ரோன்களை ஆராய்வதற்கான ஆய்வகத்தை கேரளாவில் அம்மாநில முதலமைச்சர் பினாராயி விஜயன் திறந்து வைத்தார்.

## ரூ.100 லட்சம் கோடியில் "உத்வேகம்" திட்டம்

- நாட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ரூ.100 லட்சம் கோடி மதிப்பில் 'உத்வேகம்' திட்டம் ('கதி சக்தி') செயல்படுத்தப்படும் என்று சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- அடுத்த 25 ஆண்டுகளை நாட்டுக்குப் பெருமைதரும் ஆண்டுகளாக மாற்ற வேண்டுமென்று நாட்டு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.
- வரலாற்று உச்சம்: நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளும் அந்நியச் செலாவணி கையிருப்பும் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளன.
- 'உத்வேகம்' தேசிய பெருந்திட்டத்தின் கீழ் ரூ.100 லட்சம் கோடியில் போக்குவரத்து உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டம் எதிர்கால பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருக்கும்.
- 'வந்தே பாரத்' ரயில்கள்: நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டைக் கொண்டாடும் வகையில், 75 வாரங்களுக்குள் நாடு முழுவதும் 75 'வந்தே பாரத்' ரயில்கள் இயக்கப்படவுள்ளன. வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்கள் அனைத்தும் விரைவில் ரயில்கள் மூலமாக இணைக்கப்படும்.
- சிறு விவசாயிகளின் நலன் நாட்டில் உள்ள விவசாயிகளில் 80 சதவீதம் பேர் சிறு விவசாயிகளாக உள்ளனர். அவர்களது நலனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு விவசாயிகள் நாட்டின் பெருமையாக மாற வேண்டும்.
- தாய்மொழியில் கல்வி: ஏழ்மைக்கு எதிரான போராட்டத்தில் புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியப் பங்குவகிக்கும். அக்கொள்கை வாயிலாக தாய்மொழிக் கல்வி ஊக்குவிக்கப்படும். 2–ஆம் உலகப் போருக்குப் பிறகு நாடுகளுக்கிடையேயான தொடர்பின் தன்மை மாறியது. கரோனா தொற்று பரவல் கட்டுக்குள் வந்தபிறகும் சர்வதேசத் தொடர்பு மாற்றங்களைச் சந்திக்கும்.
- இந்தியாவில் தயாரிப்போம்: அனைத்துத் துறைகளிலும் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தை மேம்படுத்த வேண்டும். பல்வேறு துறைகளுக்கு உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தைமத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.7 ஆண்டுகளுக்கு முன் ரூ.56,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகளை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. தற்போது சுமார் ரூ.21,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## எரிசக்தித் துறையில் தற்சார்பு

- எரிசக்தித் துறையில் 2047–ஆம் ஆண்டுக்குள் (சுதந்திர நூற்றாண்டு) தற்சார்பு அடைவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை அடையும் நோக்கில், மாசுபாட்டை ஏற்படுத்தாத ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான திட்டம் செயல்படுத் தப்படவுள்ளது. தேசிய ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, அதை மற்ற நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி

செய்யும் மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### இந்தியா கவு: India Gau

- இந்தியாவின் முதல் கால்நடை மரபணு சிம் இந்தியா கவு என்ற பெயரில் மத்திய அமைச்சர் Dr.ஜிதேந்திர சிங்கால் வெளியிடப்பட்டுள்ளது.
- உள்நாட்டு கால்நடை இனங்களான, கிர், கண்க்ரெஜ் சாஹிவால், ஓங்கோல் போன்ற இனங்களை காப்பதற்காக ஹைதரபாத்தில் உள்ள தேசிய கால்நடை உயிரி தொழில்நுட்ப ஆய்வு மையம் இதை உருவாக்கியுள்ளது.

### SAMVAD – 2.0 (சாம்வாத்–2.0)

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மிகவும் ஆபத்துக்குள்ளான நிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் சாம்வாத் திட்டத்தின் இரண்டாம் பகுதியை துவங்கியுள்ளது.
- SAMVAD (Support, Advocacy & Mental health interventions for children in Vulnerable circumstances And Distress).
- 2020 ல் துவங்கப்பட்ட இந்த திட்டத்தின் ஓராண்டு முடிவில் இதன் இரண்டாம் பதிப்பை துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி துவங்கி வைத்தார்.

### TAPAS: சமூக பாதுகாப்பு தளம்

- மத்திய சமூக நீதி மற்றும் வலுப்படுத்தல் அமைச்சகம் சமூக பாதுகாப்பிற்கான 5 முக்கியமான பாடங்களைக் கொண்ட TAPAS (Training for Augmenting Productivity and Services) என்ற பாடத்திட்டங்கள் அடங்கிய தளத்தை துவங்கியுள்ளது.
- தேசிய சமூக பாதுகாப்பு நிறுவனம் (NISD) உருவாக்கியுள்ள இந்த தளத்தில் பெண்களுக்கு எதிரான செயல்கள், மூன்றாம் பாலினத்தவர் குறித்த விழிப்புணர்வு போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### நகர்ப்புற சுயஉதவி குழுக்களுக்கான "சோன் சிரையா" சின்னம்

- மத்திய நகர்ப்புற விவகாரங்கள் மற்றும் வீட்டு வசதி அமைச்சகம் நகர்ப்புற சுயஉதவி குழுக்களான ஒரு பிராண்ட் சின்னத்தை சோன்சிரையா என்ற பெயருடன் வெளியிட்டுள்ளது.
- சுய உதவி குழுக்கள் மூலம் உற்பத்தியாகும் 5000க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு இந்த முத்திரையிடப்பட்டு விற்பனை செய்யப்படும்.

### ஆபரேஷன் புளு பிரீடம்

- சமூக நீதி மற்றும் வலுப்படுத்தல் அமைச்சர் டாக்டர் விரேந்திர குமார் சர்வதேச அம்பேத்கர் மையத்தில் உலக சாதனைக்கான ஆபரேஷன் புளு பிரீடம் ஐ 7வது சுதந்திர தினத்தில் துவங்கி வைத்தார்.
- "Feam CLAW" என்ற நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்டு உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சின் பனிச்சிகரத்தை ஏறி அடைந்து உலக சாதனை படைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

### 12 லட்சம் டன் மரபணு மாற்ற சோயாமீல் இறக்குமதி செய்யும் இந்தியா

- 'மரபணு மாற்ற விவகாரத்தில் உள்ள குழப்பத்தை மத்திய அரசு தெளிவுப்படுத்தியவுடன், முதல் முறையாக 12 லட்சம் டன் மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயாமீல் இறக்குமதி செய்யப்பட உள்ளது' என்று கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை அமைச்சக மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.
- கால்நடைத் தீவனங்களின் விலை தொடந்து அதிகரித்து, விவசாயிகள் கடும் பாதிப்பை சந்தித்து வரும் நிலையில் அது குறித்து அண்மையில் ஆய்வுக்கூட்டம் நடத்திய மத்திய உணவுத் துறை அமைச்சகம், 'கால்நடைத் தீவன தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் 12 லட்சம் டன் சோயாமீல் இறக்குமதி செய் வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக செய்து தருமாறு வெளிநாட்டு வர்த்தக கட்டுப்பாட்டு இயக்குநரகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிற துறைகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- சோயாபீன் விதையிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் புரதச் சத்து நிறைந்த பொருள்தான் சோயாமீலாகும். இது கால்நடைத் தீவனத்தில் முக்கிய மூலப்பொருளாக சேர்க்கப்படும்.

### மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்க்க விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும்

- மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும் என குடியரசு துணைத் தலைவர் எம். வெங்கையா நாயுடு கேட்டுக்கொண்டார்.

- பெங்களூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சிமையத்தின் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டு மையத்துக்கு அடிக்கல் நாட்டிய பிறகுஅவர் பேசியதாவது:
- உயர்கல்வி, ஆராய்ச்சி கல்வி நிறுவனங்களில் பெண்கள் அதிக அளவில் பயில வேண்டும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு விஞ்ஞானியும் புதுமையாகவும், முனைப்போடும் செயல்பட வேண்டும். பருவ நிலைமாற்றம், வேளாண்மை, சுகாதாரம், மருந்து உள்பட பல்வேறு துறை தொடர்பாக மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும்.
- எந்தவொருஆராய்ச்சிநிறுவனத்தின்ஆராய்ச்சியாக இருந்தாலும், அது சமூகத்துக்கு உகந்ததாக இருக்க வேண்டும். இந்த நோக்கில் பார்க்கும்போது, ஆராய்ச்சிகள் மனித சமூகம் பயன்படுத்தக் கூடியதாக மாற வேண்டும். அந்த வகையில், ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையம் தனது கண்டுபிடிப்புகளுக்காக 300 காப்புரிமைகளைப் பெற்றுள்ளதோடு, தனது சொந்தக் கண்டுபிடிப்புகளை 'ஸ்டார்ட்–அப்'–கள் வாயிலாக மேம்படுத்தியும் இருக்கிறது.
- பாரதரத்னா விருது பெற்றுள்ள விஞ்ஞானி சி.என். ஆர்.ராவ், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் அதன் சேமிப்பில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டதற்காக 2020–ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு 'எனி' விருதுக்கு முன்மொழியப்பட்டுள்ளார். அவர், இந்தியாவில் மட்டுமல்லாது உலக அளவிலான இளம் விஞ்ஞானிகளை ஈர்த்து வருகிறார்.

## சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையம்

- கைத்தறிதுறைக்கு பெரியளவில் ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு புதிய நடவடிக்கைகளை ஜவுளி அமைச்சகம் எடுத்து வருகிறது. இதன்படி, சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் அமைக்கப்படவுள்ளன.
- கைத்தறி துறையில் வடிவமைப்பு சார்ந்த உயர்சிறப்பு நிலையை எட்டும் வகையிலும், நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு மாதிரி, பொருள் மேம்பாடு மற்றும் உருவாக்கத்துக்கான வடிவமைப்பு களஞ்சியங்களை வழங்கும் நோக்கத்திலும் சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கண்ணூர், இந்தூர், நாகபுரி, மீரட் பாகல்பூர் மற்றும் பானிப்பட் ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் மேலும் 10 கைத்தறி வடிவமைப்பு வள மையங்களை மத்திய தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம் (நிஃப்ட்) அமைக்கவுள்ளது. ஜவுளி அமைச்சகத்தின் அமைப்பாக நிஃப்ட் விளங்குவதாலும், நவீன நாகரிகம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்டவற்றில் நிஃப்ட்டின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கைத்தறி துறைக்கு பெரியளவில் சந்தை இணைப்புகளை வழங்க முடியுமென்பதாலும், இப்பணிக்காக நிஃப்ட்டை அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது.

## உலகின் இரண்டாவது பெரிய புதுப்பிக்கப்பட்ட மரபணு வங்கி

- மத்திய வேளாண் அமைச்சர் உலகின் இரண்டாவது பெரிய பாதுகாக்கப்பட்ட மரபணு வங்கியை புதுதில்லியில் புசாவில் உள்ள தேசிய தாவரவியல் மரபணு ஆராய்ச்சி நிறுவனத்தில் திறந்து வைத்துள்ளார்.
- இங்கு தாவரங்களின் உயிர் அணுக்கள் 20° டிகிரி அளவில் பாதுகாக்கப்படும்.

## தீயணைப்பு நிலையத்துடன் கூடிய இந்தியாவின் முதல் மருத்துவமனை

- புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இந்தியாவிலேயே முதல்முறையாக தீயணைப்பு வசதியைக் கொண்டுள்ளது.

## "கருக்கலைப்பு பெண்களின் உரிமை"

- 'வயிற்றில் வளரும் கருவைக் கலைப்பதும் கலைக்காமல் இருப்பதும் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமை; அந்த உரிமையைப் பறிக்க முடியாது' என்று கேரள உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- மரபணு குறைபாடு உடைய 22 வார சிசுவை கலைக்க அனுமதி கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் ஒரு தம்பதி மனு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் கூறியதாவது: மனுதாரரான கர்ப்பிணி சற்று மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி பார்வைத் திறன் கோளாறுடன் இடது கால் செயலிழந்து நடக்க முடியால் அவதிப்படுகிறார். அவருடைய வயிற்றில் வளரும் 22 வார சிசுவுக்கு 'கிளைன்ஃபெல்டர்' என்னும் மரபணு கோளாறு உள்ளதாக மருத்துவ ஆய்வறிக்கை கூறுகிறது.

- அந்த குறைபாடு உயிரைக் கொல்லும் அளவுக்கு அபாயகரமானது இல்லை; இருப்பினும் குறைபாடுகள் கொண்ட அந்த குழந்தை வளரும்போது அதன் தேவையைப் புரிந்துகொள்வதில் தாய்க்கு சிரமங்கள் ஏற்படலாம்.

## கரோனா பாதிப்பிலும் உணவுப் பொருள் உற்பத்தியில் இந்தியா முன்னணி

- கரோனா பாதிப்பிலும் நமது நாடு உணவுப் பொருள் உற்பத்தியில் முன்னணியில் உள்ளது என மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் ஷோபா கரந்தலஜே தெரிவித்தார்.

## அடல் கண்டுபிடிப்பு திட்டம்: நிதி ஆயோக்

- நிதி ஆயோக் துவங்கிய அடல் கண்டுபிடிப்புத் திட்டத்தின் மூன்றாம் பகுதி பிரான்ஸ் நாட்டின் தஸால்ட் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.
- நாடு முழுவதும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க இந்த திட்டம் 2017, 2019ல் செயல்படுத்தப்பட்டது.

## பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11,040 கோடியில் திட்டம்

- உள்நாட்டில் பாமாயில் சாகுபடி உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11040 கோடி மதிப்பிலான தேசிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்குர், நரேந்திர சிங் தோமர் ஆகியோர் செய்தியாளர்களிடம் விவரித்தனர். அப்போது அனுராக் தாக்குர் கூறியதாவது:
- அடுத்த 5 ஆண்டுகளில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து அதை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் தேசிய அளவிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.11040 கோடி செலவில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதில் மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.8,844 கோடியும், மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.2,196 கோடியும் செலவிடப்படும். மத்திய அரசின் தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டம்– பாமாயில் உற்பத்தி என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும் அவர்.
- மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது: நாடு முழுவதும் தற்சமயம், 3.70 லட்சம் ஹெக்டேரில் பாமாயில் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் மேலும் 6.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் பாமாயில் சாகுபடி பரப்பு 10 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும். இதன் மூலம், வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு பாமாயில் உற்பத்தி 11.20 லட்சம் டன்னாகவும், 2029–30–ஆம் ஆண்டுக்குள் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கரோனா தடுப்பூசி 'பூஸ்டர்' பரிந்துரைக்கப்படும்

- எதிர்காலத்தில் பொதுமக்கள் தடுப்பூசி பூஸ்டர் (இரண்டுக்கு மேல்) டோஸ்கள் செலுத்திக் கொள்ள பரிந்துரைக்கப்படும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐசிஎம்ஆர்) தேசிய நுண்கிருமி நிறுவன (என்ஐவி) இயக்குநர் பிரியா ஆப்ரஹாம் தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: வெளிநாடுகளில் கரோனா தொற்றுக்கு பூஸ்டர் டோஸ் வழங்குவது தொடர்பாக குறைந்தபட்சம் ஏழு வெவ்வேறு தடுப்பூசிகள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், அதிக வருவாய் மற்றும் குறைந்த வருவாய் பெறும் நாடுகளிடையே தடுப்பூசியில் அதிக அளவில் இடைவெளி ஏற்படும் காரணத்தால் உலக சுகாதார அமைப்பு இந்த முயற்சிகளைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் பூஸ்டர் டோஸ்களுக்கான பரிந்துரைகள் நிச்சயம் முன்வைக்கப்படும்.
- ஒரு கட்டத்தில், இரண்டு வெவ்வேறு தடுப்பூசிகள், இரண்டு டோஸ்களில் செலுத்தப்பட்டன.

## புதிய கல்விக் கொள்கை இந்தியாவை உலக அறிவு மையமாக மாற்றும்

- 'புதிய கல்விக் கொள்கை இந்தியாவை உலக அறிவு மையமாக மாற்றும். அதில் ஐஐடி கல்வி நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும்' என்றுமத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார்.
- காரக்பூர் ஐஐடி–யின் 71–ஆம் ஆண்டு நிறுவன தின விழா காணொலி வழியில் கொண்டாடப்பட்டது. இதில் பங்கேற்ற மத்திய

அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியதாவது:

- கல்வி அனைவருக்குமானதாகவும், வாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் புதிய கல்விக் கொள்கை–2020 அறிமுகப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது. ஏராளமான இளைஞர்கள் தொழில் நுட்பக்கல்வியில் சேர விரும்புகின்ற நிலையில், அவர்களுக்கு தரமானகல்வி கிடைப்பதில் ஆங்கிலப் புலமை ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது என்பது, புதிய கல்விக் கொள்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியும் திறமையும் உள்ள மாணவர்கள் தொழில்நுட்பக்கல்வி பெறுவதில் உள்ள தடைகளை புதிய கல்விக்கொள்கை உடைத்தெறியும்.

## 2020 உலகின் இரண்டாவது அதிக மாசடைந்த நகரம்: காஜியாபாத்

- உத்தரபிரதேசத்தின் காஜியாபாத் உலக அளவில் அதிக மாசடைந்த நகரங்களில் இரண்டாமிடம் பெற்றுள்ளது.
- பிரிட்டிஷ் கம்பெனி ஹவுஸ்பிரஷ் என்ற அமைப்பு இந்த காற்று தர குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலில் முதலிடத்தில் ஜுன் ஜியான் மாகானம் இடம் பெற்றுள்ளது.
- மிகவும் பாதிப்படைந்த நாடுகளில் வங்கதேசம் முதலிடத்திலும், பாகிஸ்தான் இந்தியா, மங்கோலியா அடுத்தடுத்த இடத்திலும் உள்ளது.

## பருவநிலை மாற்றத்தால் இந்திய சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல் யுனிசெஃப் அறிக்கையில் தகவல்

- பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக யுனிசெஃப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் சிறார்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து ஐ.நா. வின் யுனிசெஃப் அமைப்பு ஆய்வு மேற்கொண்டது. அதையடுத்து, சிறார்களுக்கான பருவநிலை அச்சுறுத்தல் குறியீட்டை அந்த அமைப்பு முதல் முறையாக வெளியிட்டது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல்கள், வெப்பக் காற்றுகள் உள்ளிட்டவற்றால் சிறார்களின் சுகாதாரம், கல்வி, பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது. சிறார்களுக்கு அதிக அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 26–ஆவது இடத்தில் உள்ளது.
- பாகிஸ்தான் 14–ஆவது இடத்திலும், வங்கதேசம் 15–ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 25–ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் (51), இலங்கை(61),பூடான் (111) ஆகியவை சிறார்களுக்குக் குறைந்த அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

## சைகோவ்–டி கரோனா தடுப்பூசி அடுத்த மாதத்திலிருந்து விநியோகம்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சைகோவ்–டி கரோனா தடுப்பூசியானது செப்டம்பர் இறுதியில் இருந்து விநியோகிக்கப்படும் என்று சைடஸ் கேடிலா நிறுவனம் தெரிவித்துள்ளது.
- சைகோவ்–டி தடுப்பூசியை 12 வயதைக் கடந்த அனைவருக்கும் செலுத்துவதற்கான அனுமதியை இந்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் வழங்கியது.

## நாட்டின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்திட்டம் தொடக்கம்

- நாட்டின் மிகப்பெரிய மிதவை சூரிய சக்தி ஒளிமின் திட்டத்தை ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம், சிம்ஹாத்ரி அனல்மின் நிலையத்தின் நீர்த்தேக்கத்தில் தேசிய அனல்மின் கழகம் உருவாக்கியுள்ளது. 25 மெகாவாட் திறன் கொண்ட இந்தத் திட்டத்தை கடந்த 2018–ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது.
- தேசிய அனல்மின் கழகத்தின் மண்டல நிர்வாக இயக்குநர் திருசஞ்சய் மதன் இந்தத் திட்டத்தை தொடக்கி வைத்தார்.
- நீர்த்தேக்கத்தில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான சூரியசக்தி ஒளி மின்னமுத்த தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன.
- சுமார் 7000 வீடுகளுக்கு ஒளியூட்டுவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 46,000 டன் கரியமில வாயுவின் பயன்பாட்டையும் இந்தத் திட்டம் குறைக்கும்.
- மேலும் இதன் மூலம் ஆண்டிற்கு 1,364 மில்லியன் லிட்டர் தண்ணீர் சேமிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு சிக்கல் நிறைந்ததாக மாறி வருகிறது

- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு, சிக்கல் நிறைந்ததாக மாறி வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.
- பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் "ஐடெக்ஸ்" அமைப்பின் சார்பில் பதுகாப்புத் துறை தொழில் முனைவுத்திட்டம் ஒன்றைத் தொடக்கி வைத்து அவர் பேசியது.
- ஒட்டுமொத்த உலகிலும் பாதுகாப்புச் சூழல் மிக வேகமாக மாறி வருகிறது. இதன் காரணமாக நமது தேசியப் பாதுகாப்புக்கான சவால்கள் அதிகரித்து வருவதுடன் சிக்கல் நிறைந்தவையாகவும் மாறி வருகின்றன. உலக அளவில் அரசியல் சூழலில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன.

## தீனதயாள் உபாத்யாய கிராமப்புறத் திறன் வளர்ச்சி திட்டப் பயிற்சிக்கு 75,660 இளைஞர்கள் பதிவு

- நாட்டின் 75–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தீனதயாள் உபாத்யாய கிராமப்புறத் திறன் வளர்ச்சித் திட்ட முகாம் நாடு முழுவதும் நடைபெற்றது. கிராமப்புறங்களில் படித்த, படிக்காத இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறும் நோக்கத்துக்கான இந்தப் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்க 75,660 இளைஞர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை தெரிவித்தது.
- கிராமப்புற பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18 வயது முதல் 35 வயது வரையிலான இளைஞர்களுக்கு தீனதயாள் உபாத்யாய கிராமப்புறத் திறன் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சியும் வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது. பணி வாய்ப்பு, தொழில் நிறுவனங்களை அறிந்து கொள்வதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் முகாம்கள் நடத்தப்படுகின்றன. பின்னர், திறன் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தும் முதல் மாநிலம் கர்நாடகம்

- புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தும் முதல் மாநிலம் கர்நாடகம் என்று முதல்வர் பசவராஜ் பொம்மை தெரிவித்தார்.
- பெங்களூரு, விதான சௌதாவில் நடந்த விழாவில் தேசிய கல்விக் கொள்கை–2020–ஐ மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் இணையவழியில் தொடக்கி வைத்து பேசினார். அப்போது தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதன் மூலம் பிற மாநிலங்களுக்கு கர்நாடகம் முன்மாதிரியாக விளங்குகிறது என்று அவர் தெரிவித்தார்.

## அம்ரித் மஹோத்சவ்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் my Gov அமைப்பும் ஐக்கிய நாடுகள் பெண்கள் கூட்டமைவும் இணைந்து பெண் சக்தி கண்டுபிடிப்புகளுக்கான சவால் 2021ஐ அம்ரித் மஹோத்சவ் என்ற பெயரில் துங்கியுள்ளது.

## துணைக் குடியரசு தலைவரின் ஹம்பி பயணம்

- கர்நாடக மாநிலம் விஜயநகர மாவட்டத்தில் அமைந்துள்ள உலக பாரம்பரிய பட்டியலில் இடம் பெற்றுள்ள ஹம்பி நகரத்திற்கு பயணம் செய்துள்ளார். அங்குள்ள இசைத் தூண்களை பார்வையிட்டார். இந்த கட்டிடக்கலை கிருஷ்ணதேவராயர் காலத்தியது.

## காஷ்மீர் விரிப்பு பொறித்த தபால் தலை

- காஷ்மீர் மாநிலத்தில் கையால் நெய்யப்படும் விரிப்பின் புகைப்படம் பொறித்த தபால்தலை அஞ்சல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த பாய் புவிசார் குறியீடு பெற்றது.

## இந்தியாவின் கரோனா தடுப்பூசி 'ஹக்கோ 19' முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி

- கரோனா நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுகின்ற, பாரம்பரிய முறையில் உருவான 'ஹக்கோ 19' (HGCO19) தடுப்பூசியின் முதல்கட்ட பரிசோதனையை மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு (டிசிஜிஐ) ஏற்றுக்கொண்டுள்ளது.
- 'ஹக்கோ19 பாதுகாப்பானது, செல்லத்தக்கது, தடுப்பூசி ஆய்வில் பங்கேற்றவர்கள் நோய் எதிர்ப்பாற்றலைக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்து டிசிஜிஐ நிபுணர் குழு அனுமதியை வழங்கியுள்ளது.
- மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை தன்னுடைய உயிரி தொழில்நுட்ப தொழிலக

ஆய்வு உதவி கவுன்சில் என்கிற லாப நோக்கமற்ற பொதுத் துறை நிறுவனத்தை அமைத்துள்ளது. இந்த நிறுவனம் கரோனா பாதுகாப்புக்கான இயக்கத்தில் புணேவை சேர்ந்த ஜென்னோவா பயோ ஃபார்ம சூட்டிகல்ஸ் என்கிற தனியார் மருந்து நிறுவனத்துடன் இணைந்து, தடுப்பூசி தயாரிப்பு ஆய்வுகளை மேற்கொண்டது. இதற்கு மத்திய உயிரி தொழில்நுட்பத் துறை நிதி உதவியும் அளித்தது.

- இந்த 'ஹக்கோ19" தடுப்பூசிமற்றதடுப்பூசிகளைவிட வேறுபட்டது. 'எம்ஆர்என்ஏ' அடிப்படையில் இந்திய பாரம்பரிய முறையில் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் தூண்டும் விதமான தடுப்பூசியை உருவாக்குவதற்கான ஆய்வை மேற்கொண்டு, முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி பெற்றுள்ளது.

## இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் முக்கியக் கூட்டங்கள்

- இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 3 முக்கியக் கூட்டங்கள் நடைபெற்றதாகவும், அக்கூட்டங்கள் வாயிலாக உறுப்பு நாடுகளின் கருத்துகள் முழுமையாகப் பெறப்பட்டதாகவும் ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் டி.எஸ்.திருமூர்த்தி தெரிவித்துள்ளார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்றபிறகு கடல்சார் பாதுகாப்பு, அமைதிப்படை பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் 3 முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது. இன்னும் 1 வாரத்தில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவடைய உள்ள சூழலில், ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர்டி. எஸ்.திருமூர்த்தி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:
- இந்தியாவின் தலைமையில் நடத்தப்பட்ட முக்கியக் கூட்டங்களின் வாயிலாக பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகள் தெரிவித்த முழுமையான கருத்துகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- 3 முக்கியக் கூட்டங்கள் வாயிலாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஐ.நா.வின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு முக்கியப் பங்கு வகிக்கும்.

## ரூ.11,500 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு

- நிகழாண்டில் ரூ.11,500 கோடிக்கு பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார். மேலும், கூட்டுறவு வங்கிகளின் வழியாக பயிர்க் கடன்கள் வழங்கும் அளவை 10 சதவீதத்தில் இருந்து அடுத்த 5 ஆண்டுகளில் 25 சதவீதமாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## கரும்புக்கான கொள்முதல் விலை ரூ.2900–ஆக உயர்வு

- அடுத்த சந்தைப் பருவத்துக்கு (2021–22) கரும்புக்கான நியாயமான மற்றும் லாபகரமான விலையை (கொள்முதல் விலை) குவிண்டாலுக்கு ரூ.5 உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் குவிண்டாலுக்கு ரூ.290 வழங்க வேண்டும்.
- மத்திய அமைச்சரவைக் கூட்டம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மத்திய உணவு, நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பியூஷ் கோயல், பின்னர் செய்தியாளர்களிடம் விவரித்தார். அவர் கூறியதாவது:
- நடப்பு சந்தைப் பருவத்தில் ஒரு குவிண்டால் கரும்புக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.285–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- வரும் அக்டோபர் மாதம் தொடங்கும் அடுத்த சந்தைப் பருவத்தில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.5 உயர்த்தமத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அதன்படி, வரும் அக்டோபர் மாதத்தில் இருந்து விவசாயிகள் அளிக்கும் ஒரு குவிண்டால் கரும்புக்கு குறைந்தபட்சமாக சர்க்கரை ஆலைகள் ரூ.290 வழங்க வேண்டும்.
- கணக்குத் தணிக்கைத் துறையில் இந்தியா, ரஷியா ஒப்பந்தம்: இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்துக்கும், ரஷியாவின் தொழில்முறை கணக்குப் பதிவாளர்கள் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தொழில்முறை கணக்கியல் பயிற்சி, தொழில் நெறிமுறைகள், கணக்கியல் சார்ந்த அறிவை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ஆராய்ச்சி,

தொழில்முறை மற்றும் அறிவுசார் வளர்ச்சி ஆகிய துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு ஏற்பட இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ரூ.15,000 கோடி அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி: அந்நிய நேரடி முதலீடாக, கனடாவைச் சேர்ந்த ஆங்கரேஜ் உள்கட்டமைப்பு முதலீட்டு நிறுவனம் ரூ.15,000 கோடி முதலீடு செய்தவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## புதிய கல்விகொள்கையின் சாதனை விளக்கம்

- மத்திய கல்வி அமைச்சகம் புதிய கல்வி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு சிறப்பு இதழ் வெளியிடப்பட்டுள்ளது.
- Priya the Accessibility warrior; virtual school of NIOS.
- NIPUN Bharat Mission, Vidya Parvesh என்ற இதழ்களில் புதிய கல்வி கெள்கையின் சிறப்புகள் மற்றும் அவற்றின் பயன்கள் விவரிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பான நகரங்கள் குறியீடு 2021

- பொருளாதார உளவு அமைப்பு 2021 பாதுகாப்பான நகரங்கள் குறியீட்டை வெளியிட்டுள்ளது. இந்த குறியீட்டில் உலகம் முழுவதிலும் 60 மாநகராட்சிகள் கணக்கில் கொள்ளப்பட்டது.
- டென்மார்க்கின் கோபன்ஹெகன் முதலிடத்திலும், புதுதில்லி 48வது இடத்திலும் 50வது இடத்திலும் உள்ளது.

2021 பாதுகாப்பான நகரங்கள் குறியீடு:

- 2015ம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது.
- 76 குறியீடுகளை கருத்தில் கொண்டு இந்த பட்டியல் வெளியிடப்படுகிறது.

## அமெரிக்கா: சராசரி வருவாயில் இந்திய வம்சாவளியினர் முதலிடம்

- அமெரிக்காவில் சராசரி குடும்ப வருவாய் மற்றும் கல்லூரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்த அமெரிக்கர்களை இந்திய வம்சாவளியினர் விஞ்சியுள்ளனர்.
- இதுகுறித்து அந்த நாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:
- அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள், அந்த நாட்டின் குடியுரிமை பெற்ற இந்தியர்கள் மற்றும் அங்கு பிறந்த இந்திய வம்சாவளியினரின் சராசரி குடும்ப வருவாய் 123,700 டாலராக (சுமார்ரூ.91.78லட்சம்) உள்ளது. கல்லூரி பட்டதாரிகளில் 79 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

## ஜம்மு–காஷ்மீர் செனாப் நதி நீர்மின் திட்டம்

- ஜம்மு–காஷ்மீரில் செனாப் நதியில் இந்தியா திட்டமிட்டுள்ள புதிய நீர்மின் திட்டத்துக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆனால், சிந்து நதிநீர்ப்பகிர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்த நீர்மின் திட்டம் அமைக்கப்படுவதாக இந்தியா கூறியுள்ளது.
- ஜம்மு–காஷ்மீரில் செனாப் நதிக்கு அருகில் 624 மெகாவாட் உற்பத்தித் திறனில் கிரு நீர்மின் திட்டம் அமைப்பதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஜம்மு–காஷ்மீர் மின்சார மேம்பாட்டு நிறுவனமும், தேசிய நீர் மின்சார நிறுவனமும் இணைந்து உருவாக்கிய கூட்டு நிறுவனமான 'செனாப் வேலி பவர் புராஜெக்ட் நிறுவனம்' இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது.

## இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் மின்பகுப்பான்

- இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் மின்பகுப்பான் கர்நாடக மாநிலம் பெங்களூரில் அமைக்கப்பட உள்ளது.

## ஜாலியன்வாலா பாக் நினைவிடத்தின் புதுப்பிக்கப்பட்ட வளாகம்

- ஜாலியன் வாலாபாக் நினைவிடத்தின் புதுப்பிக்கப்பட்ட வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி (ஆகஸ்ட் 28) காணொலி வழியில் திறந்து வைக்க உள்ளார்.
- பஞ்சாப் மாநிலம் அமிருதசரஸில் அமைந்துள்ள ஜாலியன்வாலா பாக் இடத்தில் கடந்த 1919–ஆம் ஆண்டு ஏப்ரல் 13–ஆம் தேதி பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி தலைமையிலான ராணுவத்தினர் நடத்திய துப்சூட்டில் பெண்கள், சிறுவர்கள் உள்பட 1000–க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அதனை நினைவுகூரும் வகையில் அங்கு நினைவிடம் அமைக்கப்பட்டது. அந்த நினைவிடத்தை புதுப்பிக்கும் பணிகளைமத்திய அரசு மேற்கொண்டது.

- பஞ்சாபின் கட்டடக் கலை அமைப்பின் அடிப்படையில் விரிவான பாரம்பரிய புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சாஹிதி கிணறு சீரமைக்கப்பட்டுள்ளது. நினைவு சின்னத்தின் மையப் பகுதி சீரமைக்கப்பட்டு, நீர்நிலை அல்லிக் குளமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களின் வசதியை கருத்தில் கொண்டு நடைபாதைகள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்தியா 2047–இல் பாகுபாடற்ற நாடாக உருவெடுக்கும்

- இந்தியா வரும் 2047–ஆம் ஆண்டில், தனது நூற்றாண்டு சுதந்திர தின விழாவின் போது பாகுபாடற்ற மற்றும் வளர்ந்த நாடாக உருவெடுக்கும் என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நம்பிக்கை தெரிவித்தார்.
- உத்தர பிரதேச மாநிலம் லக்னௌவில் உள்ள பாபாசாஹேப் பீம்ராவ் அம்பேத்கர் பல்கலைக்கழக (பிபிஏயு) 9–ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் ராம்நாத் கோவிந்த் பேசியதாவது:
- இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக அல்லாமல், வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும். நாட்டின் மக்கள்தொகையில் 50 சதவீதம் பேர் 25 வயதுக்கும் கீழான இளைஞர்கள். வரும் 2047–ஆம் ஆண்டு, இந்தியா நூற்றாண்டு சுதந்திர தினத்தை கொண்டாடும்போது, இன்றைய இளைஞர்கள்தான் நாட்டை வழிநடத்து வீர்கள்.

## விரைவில் ஏர் டாக்ஸிகள்

- ட்ரோன்களுக்கான புதிய விதிகள் தொடர்பாக, விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஏர் டாக்ஸிகள் தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய விதிகளின் அடிப்படையில் ஏர் டாக்ஸிகள் இயக்கப்படும் காலம் வெகுதொலைவில் இல்லை. ட்ரோன்களால் தற்போது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, ட்ரோன்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான தொழில்நுட்பத்தை பாதுகாப்பு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆகியவை இணைந்து தயாரித்து வருகின்றன" என்றார்.

## உணவு தானிய உற்பத்தியில் இந்தியா சாதனை

- உணவு தானிய உற்பத்தியில் இந்தியா சாதனை செய்துள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறினார்.
- விவசாயிகளுக்கான தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பிரசாரத்தை தொடக்கி வைத்த அமைச்சர் தோமர் பேசுகையில், வேளாண் மற்றும் அதைச் சார்ந்த பொருள்களின் உற்பத்தியில் உலகத்திலேயே முதல் அல்லது இரண்டாவது நாடாக இந்தியா திகழ்கிறது. நம்முடைய விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளிடம் மிகப்பெரிய சக்தி இருக்கிறது. நாம் போட்டியிட்டால் அனைத்து விஷயங்களிலும் முதல் இடத்தைப் பெறலாம் என்றார்.

## பெண் தொழில் முனைவோருக்கான WEP Nxt தளம்

- பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க நிதி ஆயோக் மற்றும் சிஸ்கோ (CISCO) நிறுவனங்கள் இணைந்து WEP Nxt என்ற தளத்தினை உருவாக்கியுள்ளனர்.
- WEP என்ற தளம் ஏற்கனவே 2017இல் துவங்கப்பட்டது.
- WEP என்ற தளம் ஏற்கனவே 2017ல் துவங்கப்பட்டது. இந்த தளம், பயிற்சி அளித்தல், வழிநடத்தல் போன்ற பயிற்சிகளை பெண்களுக்கு வழங்குகிறது.

## புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தும் இரண்டாவது மாநிலம்: மத்திய பிரதேசம்

- கர்நாடக மாநிலத்திற்கு பிறகு இரண்டாவதாக புதிய தேசிய கல்வி கொள்கையை அமல்படுத்த இருப்பதாக மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

## 'பிஹெச்' வரிசையில் வாகனங்களுக்கு பதிவெண் முறை அறிமுகம்

- பணி நிமித்தமாக வெவ்வேறு மாநிலங்களில் அடிக்கடி குடிபெயர்வோர் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' வரிசையில் அமைந்த பதிவெண் முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

- வாகனங்கள் பதிவு செய்யப்படும் மாநிலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான எண்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு அதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணியாற்றுவோர் பணி நிமித்தமாக அடிக்கடி வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலைமை உள்ளது.
- அவ்வாறான சூழலில், இடம்பெயரும் மாநிலத்துக்குச் சென்ற ஓராண்டுக்குள் சம்பந்தப்பட்ட மாநிலத்தில் வரிசெலுத்தி புதிய வாகனப் பதிவெண்ணைப் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. வாகனத்தை வேறு மாநிலத்தில் மறுபதிவு செய்வதற்கு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட மாநிலத்தில் இருந்து தடையில்லாச் சான்று பெற்று வழங்க வேண்டியுள்ளது.
- இந்த நடைமுறையை எளிதாக்கும் நோக்கில், 'பிஹெச்' என்ற பாரத் வரிசை அடிப்படையிலான வாகனப் பதிவெண்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றுக்கு இடையே அடிக்கடி குடிபெயர்வோர் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' வரிசை அடிப்படையிலான பதிவெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## உலகின் பாதுகாப்பான 50 நகரங்களில் டெல்லி, மும்பை

- உலகின் பாதுகாப்பான நகரங்களில் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகன் முதலிடம் பிடித்துள்ளது. டெல்லி, மும்பை முதல் 50 நகரங்களில் இடம் பிடித்தன.
- பிரிட்டன் தலைநர் லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் "தி எக்னாமிஸ்ட் குரூப்" ஊடக நிறுவனத்தின் புலனாய்வு பிரிவு சார்பில் ஆண்டுதோறும் உலகின் பாதுகாப்பான நகரங்கள் குறித்த பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. இதில் டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகன் முதலிடம் பிடித்தது. கனடாவின் டொராண்டோ, சிங்கப்பூர், சிட்னி, டோக்கியோ ஆகியவை அடுத்தடுத்த இடங்களை பிடித்தன. அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு 12–வது இடம் கிடைத்தது.
- பிரிட்டன் தலைநகர் லண்டன் 15–வது இடம், சீன தலைநகர் பெய்ஜிங் 36–வது இடம், ரஷ்ய தலைநகர் மாஸ்கோ 38–வது இடத்தைப் பெற்றன. இந்திய தலைநகர் டெல்லி 48–வது இடத்தையும், வர்த்தக நகரான மும்பை 50–வது இடத்திலும் உள்ளன.

## மக்கள் பிரதிநிதிகள் செயல்பாட்டு அறிக்கையை ஆண்டுதோறும் சமர்ப்பிக்க வேண்டும்

- மக்கள் பிரதிநிதிகள் தங்களின் செயல்பாட்டு அறிக்கையை ஆண்டுதோறும் மக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு வலியுறுத்தினார்.
- 'பிரதிபலித்தல், நினைவு கூர்தல், மீண்டும் தொடர்பு கொள்ளுதல் எனும் புத்தகத்தின் முதல் பிரதியை வெங்கையா நாயுடுவிடம் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் வழங்கினார்.

## கரூர், நாகப்பட்டினம், சிவகங்கையில் வேளாண்மை கல்லூரிகள்

- கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அத்துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்தார்.
- வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வெளியிட்ட அறிவிப்புகள்:
- வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி 2021–22–இல் கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்.
- அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, விருதுநகர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலன்களுக்காக தமிழக வரலாற்றில் முதல்முறையாக 2021–22–இல் நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களின் ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகள் அமைத்து மின்வசதியுடன் மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர் பாசன வசதிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும்.

## 34 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம்

- நாட்டில் உள்ள 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தகுதியான குடும்பங்களுக்கு நியாய விலைக் கடைகள் வாயிலாக மானிய விலையில் உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாநிலமும் குடும்ப அட்டைகளை விநியோகித்து வருகின்றன.
- அந்த அட்டைகளைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட மாநிலத்தில் மட்டுமே உணவு தானியங்களைப் பெறும் சூழல் நிலவி வந்தது. இந்நிலையில், குடும்ப அட்டைகளைப் பெற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் நாட்டில் உள்ள எந்த நியாய விலைக் கடையிலும் உணவு தானியங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- இத்திட்டத்தில் இதுவரை 34 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இணைந்துள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேற்கு வங்கம் ஆகஸ்டிலும், தில்லி கடந்த ஜூலையிலும் இத்திட்டத்தை அமல்படுத்தின.
- அஸ்ஸாம், சத்தீஸ்கர் மாநிலங்கள் மட்டும் இத்திட்டத்தை இன்னும் செயல்படுத்தவில்லை. விரைவில் அவ்விரு மாநிலங்களும் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தைச் செயல்படுத்தும் என்று மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் சராசரியாக 2.2 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பலனடைந்து வருகின்றனர். கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் இத்திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி முறை உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## இளைஞர்களின் தொழில்முனைவு ஆர்வம் அதிகரிப்பு

- நாட்டு இளைஞர்கள் மத்தியில் தொழில்முனைவு கலாசாரம் அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, சிறந்த எதிர்காலத்துக்கான அடையாளமாக இது விளங்குவதாகவும் கூறியுள்ளார்.
- வானொலி மூலமாகத் தனது 80–ஆவது 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:
- மேஜர் தயான்சந்தின் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. இந்த முறை ஒலிம்பிக் ஹாக்கியில் 4 தசாப்தங்களுக்குப் பிறகு பதக்கம் கிடைத்திருக்கிறது.
- தனது வாழ்க்கை முழுவதையும் விளையாட்டுக்கே அர்ப்பணம் செய்தவர் தயான்சந். நாட்டிலுள்ள இளைஞர்களிடம் விளையாட்டு மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது. இதுவே தயான்சந்துக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலியாக இருக்கும்.
- இளைஞர்கள் புதிய தொழிலைத் தொடங்குவதில் ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். சிறிய நகரங்களில் கூட தற்போது தொழில்முனைவு கலாசாரம் விரிவடைந்து வருகிறது.
- பெரும் தாக்கம்: நடந்து முடிந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும், தற்போது நடைபெற்று வரும் பாராலிம்பிக் போட்டிகளும் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கி இருக்கிறது. விளையாட்டின் வல்லமையை இளைஞர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.
- அனைவருடைய முயற்சிகளும் இணைந்தால்தான், விளையாட்டுத் துறையில் நாடு உச்சம் காண முடியும். கிராமங்கள் தோறும் விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற்கான ஆதரவையும் பங்களிப்பையும் நாட்டு மக்கள் அனைவரும் வழங்க வேண்டும்.

## தேசிய நிதி சேகரிப்பு திட்ட வெற்றிக்கு வரிச்சலுகை வழங்க நிதி ஆயோக் பரிந்துரை

- 6 இலட்சம் கோடி ரூபாய் நாட்டின் அரசு சொத்துக்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் வசூலிக்கும் மத்திய அரசின் திட்டத்தில் சிறு முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கும் பட்சத்தில் இந்த திட்டத்தின் மூலம் விரைவான இலக்கை அடைய இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி வஉசி துறைமுகம்: சரக்கு கையாளுவதில் புதிய சாதனை

- தூத்துக்குடி வஉசி துறைமுகம் சரக்கு கையாளுவதில் புதிய சாதனை படைத்துள்ளது. சிங்கப்பூர் நாட்டு கொடியுடன் எம்.வி. இன்ஸ்

அங்காரா என்ற கப்பல் வளைகுடா நாட்டில் உள்ள மினாசர்க் துறைமுகத்தில் இருந்து பொது சரக்குகளுடன் தூத்துக்குடி வஉசி துறைமுகத்தின் 9 ஆவது தளத்துக்கு கடந்த 25 ஆம் தேதி வந்தது. நாளொன்றுக்கு 50,000 டன் சரக்குகளை கையாளும் திறன் கொண்ட 3 நகரும் பளுதூக்கிகள் மூலம் அந்தக் கப்பலில் இருந்து 93 ஆயிரத்து 719 டன் சுண்ணாம்புக்கல் கையாளப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டது.

## தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைய வயது வரம்பு அதிகரிப்பு

- தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்பிஎஸ்) இணைவதற்கான உச்சவயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தேசிய ஓய்வூதியத் திட்டத்தை ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை வளர்ச்சி ஆணையம் (பிஎஃப்ஆர்டிஏ) செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்தில் இணைவது, திட்டத்தின் பலன்களைப் பெறுவது உள்ளிட்டவை தொடர்பான மாற்றப்பட்ட விதிமுறைகளை பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ளது.
- அதன்படி, தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதற்கான அதிகபட்ச வயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச வயது வரம்பு 18-ஆகவே நீடிக்கிறது.
- இந்தியர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ஆகியோர் 75 வயது வரை தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேமித்து வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது தொடர்பாக பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோரின் சேமிப்புத் தொகை எந்த வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொருத்து முதலீட்டு சதவீதம் மாறுபடும்.

## 58 "வந்தே பாரத்" ரயில்களுக்கான ஒப்பந்தபுள்ளிகள்: ரயில்வே வெளியீடு

- பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்பைத் தொடர்ந்து, 58 'வந்தே பாரத்' ரயில்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகளை ரயில்வே வரவேற்றுள்ளது.
- 'நாட்டின் 75-ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் வகையில் 75 வாரங்களில் 75 வந்தே 'பாரத் ரயில்கள்' அறிமுகம் செய்யப்படும் என்று தனது சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவிப்பு வெளியிட்டார். இந்த அறிவிப்பைப் பூர்த்தி செய்யும் வகையில், ரயில்வே ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்றுள்ளது.
- இதன் மூலம், வருகிற 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரயில்வேக்கு 102 விரைவு ரயில்கள் கிடைக்கும். இவற்றில் முதல் 75 ரயில்கள் வரும் 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதிக்குள் வந்து சேர்ந்துவிடும்.
- புதிதாக வடிவமைக்கப்படும் 'வந்தே பாரத்' ரயில்களில் சிறந்த இருக்கை வசதி, பாதுகாப்பு மற்றும் சிறந்த கண்காணிப்பு நடைமுறை, அவசரக் கால உதவிக்கான வசதிகள் ஆகியவை இடம்பெற்றிருக்கும். ஆபத்து நேரங்களில் எளிதாக வெளியேறும் வகையில் ஒவ்வொரு பெட்டியிலும் 4 அவசரக்கால ஜன்னல்கள், பேரிடர் எச்சரிக்கை விளக்குகள், தலா 4 அவசர உதவி பொத்தான்கள் ஆகியவை வசதிகளும் இந்த ரயில்களில் இடம்பெற்றிருக்கும்.

# 7. சர்வதேச நிகழ்வு



### மத உரிமைத் தூதராக இந்திய அமெரிக்கர்: ஜோ பைடன் நியமனம்

- சர்வதேச மதச் சுதந்திர விவகாரங்களுக்கான அமெரிக்கத்தூதராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரஷாத் ஹுசைனை அதிபர் ஜோ பைடன் நியமித்துள்ளார்.
- இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- அமெரிக்க வெளியுறவுத் துறையின் ஒரு பிரிவான சர்வதேச மதச் சுதந்திர விவகாரங்களுக்கான அலுவலகத்தின் தலைமைப் பொறுப்புக்கு வழக்குரைஞர் ரஷாத் ஹுசைனை ஜோ பைடன் பரிந்துரைத்துள்ளார். 41 வயதாகும் ஹுசைன், தற்போது தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் சர்வதேச கூட்டாண்மை அமைப்பின் இயக்குநராக உள்ளார்.

### இந்தியாவின் மிக இலகுவான ரயில்

- இந்தியாவின் மிக இலகுவான ரயில் புனே நகரில் இயக்கப்பட உள்ளது. இதற்காக 34 ரயில்கள் 3 பெட்டிகளை உடையதாக இத்தாலியின் தித்தாகர் வேகன் நிறுவனத்தால் உற்பத்தி செய்து அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த இரயிலின் முதல் பகுதி இந்தியாவிற்கான இத்தாலி தூதர் வின்செென் கோ டி லுகாவால் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.

### ஜம்மு–காஷ்மீர் இந்தியாவின் ஒன்றுபட்ட பகுதி: ஐ.நா. தூதர் திருமூர்த்தி

- ஜம்மு–காஷ்மீர் இந்தியாவின் ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத பகுதி என்று ஐ.நா.வுக்கான இந்திய தூதரும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைவருமான டி.எஸ்.திருமூர்த்தி கூறினார்.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமில்லா உறுப்பு நாடாக இருந்து வரும் இந்தியா, சுழற்சி முறையிலான ஒரு மாத கால கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்றது.
- ஜம்மு–காஷ்மீர் விவகாரம் மற்றும் அதற்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விவகாரங்கள் அனைத்தும் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள், ஜம்மு–காஷ்மீர் இந்தியாவின் ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத பகுதி என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

### நிறவெறிக்கு எதிராக ஐ.நா. தனிப்பிரிவு

- நிற வெறிக்கு எதிராக ஐ.நா.வில் தனிப்பிரிவை உருவாக்க ஐ.நா. பொதுக் குழு அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:
- நிறவெறிக்கு எதிரான புதிய பிரிவு ஒன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபை நிறைவேற்றியுள்ளது. ஆப்பிரிக்க வம்சாவளியினரின் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அந்த அமைப்பு பாடுபடும்.
- கடந்த 2015 முதல் 2024–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தை ஆப்பிரிக்க வம்சாவளியினருக்கான ஆண்டுகளாக ஐ.நா. அறிவித்துள்ளது.

### ஈரான் அதிபராக இப்ராஹிம் ரைசி

- ஈரானின் புதிய அதிபராக இப்ராஹிம் ரைசி பணிகளை துவங்கினார்.
- முன்னாள் அதிபர் ஹசன் ருவானி காலத்தில் 2015ம் ஆண்டில் வல்லரசு நாடுகளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

## பார்சூன் குளோபல் 500

- உலக அளவில் சிறப்பாக தொழில் புரியம் 500 நிறுவனங்களை பார்சூன் நிறுவனம் வரிசைப்படுத்தியுள்ளது.
- இந்த தரவரிசையில் வால்மார்ட் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவைச் சேர்ந்த 7 நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இந்திய நிறுவனங்களின் தரவரிசை:

- ரிலையன்ஸ் – 155
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா – 205
- இந்தியன் ஆயில் – 212,
- ONGC – 243
- ராஜேஷ் எக்ஸ்போர்ட் – 348
- டாடா மோட்டார்ஸ் – 351
- பாரத் பெட்ரோலியம் – 394

## சர்வதேச சூரிய சக்தி கூட்டமைவில் கையெழுத்திட்டுள்ள ஜெர்மனி

- சர்வதேச சூரிய சக்தி கூட்டமைவில் 5வது நாடாக ஜெர்மனி கையெழுத்திட்டுள்ளது.
- ஐ.நா. சபையில் ஜனவரி 8, 2021ல் இந்த வடிவமைப்பு திருத்தங்கள் செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு வீட்டோ அதிகாரமில்லாத புதிய உறுப்பினர்கள்

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் வீட்டோ அதிகாரமில்லாத நிரந்தர உறுப்பினர்களை இணைப்பதற்கு ஆதரவு தெரிவிப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.
- பாதுகாப்பு விவகாரத்தின் உலகின் சக்தி வாய்ந்த அமைப்பான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராவதற்கான முயற்சிகளை இந்தியா எடுத்து வரும் சூழலில் அமெரிக்கா இவ்வாறு கூறியுள்ளது.

## மின்னணுத் துறை மேம்பாட்டில் ஒத்துழைப்பு

- டிஜிட்டல் (மின்னணு பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் அரசு நிர்வாகத்தில் அதிக ஒத்துழைப்புடன் செயல்படுவதாக ஜி20 நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.
- ஜி20 நாடுகளின் மின்னணுத்துறை அமைச்சர்கள் கூட்டம் இத்தாலியின் ட்ரீஸ்டே நகரில் நடைபெற்றது. காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இந்திய குழுவுக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தலைமை தாங்கினார்.
- 'எழுச்சியுடன் கூடிய வலிமையான, நிலையான மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய மீட்புக்கான டிஜிட்டல் மயமாக்கல் பிரகடனம்' இந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் அரசில், அதிக ஒத்துழைப்புடன் செயல்படுவதாக கூட்டத்தில் அமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர். டிஜிட்டல் மயமாக்கத்தில் இந்தியா வெற்றிகரமாக செயல்படுவதை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பகிர்ந்து கொண்டார். டிஜிட்டல் இந்தியா திட்டம் மூலம், கடந்த 2015–ஆம் ஆண்டிலிருந்து சமூக மேம்பாட்டில் சாதித்த மாற்றங்களையும் அவர் பகிர்ந்தார்.
- 129 கோடி பேருக்கு ஆதார் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

## இந்தியாவுக்கான கரோனா அபாய அளவு குறைப்பு: உறுதி செய்தது பிரிட்டன்

- இந்தியா மீதான கரோனா அபாய அளவு குறைக்கப்பட்டுள்ளதை பிரிட்டன் சுகாதாரமற்றும் சமூகப் பராமரிப்புத் துறை (டிஹெச்எஸ்சி) உறுதி செய்துள்ளது.
- அந்த குறித்து டிஹெச்எஸ்சி அதிகாரிகள் கூறியதாவது: கரோனா அபாயத்துக்கான சிவப்புப்பட்டியலில் இருந்து மஞ்சள் பட்டியலுக்கு இந்தியா மாற்றப்பட்டுள்ள நடைமுறை அமலுக்கு வருகிறது. உலகம் முழுவதும் பல்வேறு நிறுவனங்களின் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. எனவே, பிரிட்டனில் உருவாக்கப்படாத எந்தெந்த தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது என்பதைத் தீர்மானிப்பதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்து வருகிறோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புவி வெப்பமயமாதல் வேகமாகி உள்ளது: ஐ.நா. அறிக்கை

- புவி வெப்பமயமாதல் எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாகி வருவதாக வெளியான ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: புவி வெப்பமயமாதல் நடவடிக்கை எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாக நிகழ்ந்து வருகிறது. இதனை கருத்தில் கொள்ளும்போது, உலக நாடுகளின் தலைவர்கள்

பத்தாண்டுகளில் நிர்ணயித்துள்ள வரம் பைக் காட்டிலும் புவி அதிக வெப்பமடைந்துவிடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது மனித குலத்துக்கு மிகவும் பேரழிவை ஏற்படுத்தும்.

- புவி வெப்பமயமாதலிலிருந்து தப்பித்துவிடுவோம் என எண்ணும் வகையில், உலகின் எந்தப் பகுதியும் பாதுகாப்பானதாக இல்லை. எனவே, எங்கும் ஓடவும் முடியாது; ஒளியவும் முடியாது.

## சர்வதேச இராணுவ விளையாட்டு போட்டிகள் 2021

- 7வது சர்வதேச இராணுவ விளையாட்டு போட்டிகள்–2021 ரஷியாவில் நடைபெற்றது. இதில் 11 நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்கள் பங்கேற்றனர்.
- இந்தியாவிலிருந்து 101 இராணுவ வீரர்கள் பங்கேற்றனர்.
- "வார் ஒலிம்பிக்ஸ்" என்று இந்த விளையாட்டு போட்டிகள் அழைக்கப்படுகின்றன. உறுப்பு நாடுகளின் இராணுவ கூட்டமைப்பில் இது நடத்தப்படுகிறது.

## ஆசியான் நாடுகளுடன் டிஜிட்டல் இணைப்பு: இந்தியாவிடம் சிங்கப்பூர் வலியுறுத்தல்

- ஆசியான் அமைப்பு நாடுகளுடன் டிஜிட்டல் முறையிலான இணைப்பை இந்தியா மேம்படுத்த வேண்டும் என்று சிங்கப்பூர் துணைப் பிரதமர் ஹேங்ஸ்வீ கீட் வலியுறுத்தியுள்ளார்.
- இதுகுறித்து, காணொலி முறையில் நடைபெற்ற 2021–ஆம் ஆண்டுக்கான இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் (சிஐஐ கூட்டத்தில் அவர் பேசியதாவது:
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நுகர்வோர் சந்தையாகத் திகழ்கிறது. அதன் உறுப்பு நாடுகளில் நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. மேலும், அந்த நாடுகளின் மக்கள் சந்தையுடன் டிஜிட்டல் முறையில் இணைவது அதிகரித்து வருகிறது.
- தென்கிழக்கு ஆசியப் பகுதியில் இந்தியாவுக்கென்று சில அனுகூலங்கள் உள்ளன. அதனைப் பயன்படுத்தி, கரோனா நெருக்கடிக்குப் பின்னர் சர்வதேச விநியோகக்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் நாடுகளுக்கிடையிலான வர்த்தக இணைப்பை அதிகரிப்பதிலும் இந்தியா சிறந்த பங்களிப்பை வழங்க முடியும் என்றார் அவர்.
- ஆசியான் கூட்டமைப்பில் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, புருனே, கம்போடியா உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

## திபெத் லாஸா விமான நிலையத்தில் சீனாவின் புதிய முனையம் திறப்பு

- திபெத்தின் லாஸா கொங்கர் விமானநிலையத்தில் சீனா சார்பில் கட்டப்பட்ட புதிய விரிவுபடுத்தப்பட்ட முனையம் பயன்பாட்டுக்கு வந்தது.
- திபெத்தில் உள்ள விமான முனையங்களில் இது மிகப் பெரிய முனையம் எனவும், தெற்காசியாவுக்கான சரக்கு முனையமாக திபெத் உருவெடுக்க இது உதவும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மலபார் பயிற்சி–2021

- இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகள் கூட்டமைவின் மலபார் பயிற்சி, குவாட் கடற்கரையில் இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் ஆகஸ்ட் 25 முதல் 29 வரை கடற்கரை பகுதியில் நடைபெற உள்ளது.

## மகாத்மா காந்திக்கு அமெரிக்க நாடாளுமன்ற தங்கப் பதக்கம்: மீண்டும் தீர்மானம் அறிமுகம்

- மகாத்மா காந்திக்கு அமெரிக்காவின் உயரிய விருதான நாடாளுமன்ற தங்கப் பதக்கத்தை வழங்க வலியுறுத்தி அந் நாட்டு நாடாளுமன்றத்தில் அண்மையில் மீண்டும் தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியாவின் 75–ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படும் நிலையில், மகாத்மா காந்திக்கு அமெரிக்காவின் உயரிய விருதான நாடாளுமன்ற தங்கப் பதக்கம் வழங்க வேண்டும் என்று அங்குள்ள இந்திய அமைப்புகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.
- அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அமெரிக்க வாழ் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரோலின் மலோனி, ஆமி போரா, ராஜா கிருஷ்ணமூர்த்தி, ரா கண்ணா, பிரமீளா ஜெயபால், துளசி கப்பார்டு ஆகியோர் இதுதொடர்பான தீர்மானத்தையும் அண்மையில் கொண்டுவந்தனர். இப்போது மீண்டும் அவர்கள் இதே தீர்மானத்தை அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் அறிமுகம் செய்தனர்.

- அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மகாத்மா காந்திக்கு தங்கப் பதக்கம் அறிவிக்கப்படுமானால், ஜார்ஜ் வாஷிங்டன், நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங், அன்னை தெரசா, ரோசா பார்க்ஸ் ஆகியோர் வரிசையில் இந்த உயரிய கௌரவத்தைப் பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையும் மகாத்மா காந்திக்கு கிடைக்கும்.

## ஐ.நா.பொதுச் செயலருடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு

- ஐ.நா.பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்தார்.
- ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் சூழல் குறித்து விவாதிக்க ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்றது.

## ஐ.நா. அமைதிப் படைக்கு நவீன தொழில்நுட்பம்: இந்திய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தல்

- ஐ.நா. அமைதிப் படை வீரர்களைப் பாதுகாக்க தொழில்நுட்பத் திறன்களில் முன்னேற்றம் காண வேண்டியது அவசியம் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் அவர் பேசியதாவது
- கடந்த 1948–ஆம் ஆண்டு முதல் பணியில் ஈடுபட்டு வரும் ஐ.நா. அமைதிப்படை தொடர்ந்து சவாலான சூழல்களில் பணிபுரிந்து வருகிறது. அந்தப் படை மேற்கொண்டு வரும் பணியின் தன்மை, எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மேலும் சிக்கலாகியுள்ளன. அந்தப் படை வீரர்களை பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப திறன்களில் முன்னேற்றம் காண வேண்டியது அவசியம். அந்தப் படை வீரர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் உயர்ந்த தரத்தில் இருப்பதை உறுதி செய்யும் கடமை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு உள்ளது என்று தெரிவித்தார்.
- இந்த மாதம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது.
- இந்திய தலைமையின் கீழ் முதல்முறையாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## மியான்மர் விவகாரத்துக்கு ஆசியானின் 5 அம்சத் தீர்வு

- ராணுவ ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளதால் பதற்றம் நிலவிவரும் மியான்மரில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் முன்வைத்துள்ள 5 அம்ச செயல்திட்டங்களை இந்தியா வரவேற்றுள்ளது.
- இதுதொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், கவுன்சிலுக்கு இந்தமாதம் தலைமை வகிக்கும் இந்தியா, ஆசியான் அமைப்புக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்தது.
- இதுகுறித்து ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ். திருமூர்த்தி வெளியிட்டுள்ள சுட்டுரை (ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:
- மியான்மர் விவகாரம் தொடர்பாக நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ரகசியக் கூட்டத்துக்கு இந்தியா தலைமை வகித்தது. அப்போது, மியான்மர் விவகாரங்களுக்கான ஆசியான் அமைப்பின் சிறப்புத் தூதரும் புருணே வெளியுறவுத் துறை இணையமைச்சருமான டத்தோ எரிவான் யூசுஃப் தெரிவித்த கருத்துகளுக்கு இந்தியா தரப்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டன் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அலோக் சர்மா இந்தியா வருகை

- பிரிட்டன் சுற்றுச்சூழல் துறை அமைச்சரும், பிரிட்டிஷ்–இந்தியருமான அலோக் சர்மா 3 நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்தார்.
- ஐ.நா. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு 2021, வரும் நவம்பர் 1 முதல் 12–ஆம் தேதி வரை பிரிட்டனின் ஸ்காட்லாந்தில் நடைபெறவுள்ளது.
- இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் விவாதிப்பதற்காக அலோக்சர்மா பயணம் மேற்கொண்டுள்ளார்.
- இது தொடர்பாக அவர் கூறுகையில், 'பாரீஸ் பருவநிலை மாறுபாடு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இந்தியா முக்கியப் பங்கு வகித்தது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தில் உலக நாடுகளை ஒருங்கிணைப்பதில் இந்தியா முக்கியமான நாடு.

## இந்திய – சீன எல்லையில் 11,000 அடி உயரத்தில் மூலிகைப் பூங்கா

- உத்தரகண்டில் இந்தியா–சீனா எல்லைப் பகுதிக்கு அருகே 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா திறந்துவைக்கப்பட்டது.
- சமோலி மாவட்டத்தின் மனா கிராமமானது இந்திய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கடைசி கிராமமாகும். புகழ்பெற்ற பத்ரிநாத் கோயிலுக்கு அருகே இந்த கிராமம் அமைந்துள்ளது. கடல்மட்டத்திலிருந்து சுமார் 11,000 அடி உயரத்தில் உள்ள அந்த கிராமத்தில் மூலிகைப் பூங்கா அமைக்கப்பட்டது.
- மத்திய அரசின் காடு வளர்த்தல் நிதித் திட்டத்தின் கீழ் உத்தரகண்ட் வனத் துறையால் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. நாட்டில் மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா இதுவாகும். அந்தப் பூங்காவானது திறந்து வைக்கப்பட்டது.

## ஆப்கன் விவகாரம்: ஜி–7 மாநாடு

- ஆப்கன் விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக ஜி–7 நாடுகளின் மாநாட்டை (ஆகஸ்ட் 24) கூட்டவிருப்பதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.
- இதுகுறித்து பிரதமர் போரிஸ் ஜான்ஸன் கூறுகையில், 'ஆப்கனில் சிக்கியுள்ளவர்களை பாதுகாப்பாக மீட்பது, அந்த நாட்டு மக்களுக்கு உதவுவது, கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கன் போரில் பெற்ற அனுகூலங்களைத் தக்கவைப்பது முதலியவற்றை சர்வதேச சமுதாயம் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதற்காக, ஜி–7 நாடுகளின் ஆலோசனைக் கூட்டம் பிரிட்டன் தலைமையில் நடைபெறும்' என்றார்.

## ஹிசார் விமான நிலையம்

- ஹரியானா மாநிலத்தில் உள்ள ஹிஸார் விமான நிலையம் மகாராஜா அக்ராசென் சர்வதேச விமான நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஆப்கானிலிருந்து 800 பேர் மீட்பு "ஆபரேஷன் தேவி சக்தி" மூலம் இந்தியா நடவடிக்கை

- ஆப்கானிஸ்தானில் இருந்து மீட்கப்பட்ட இந்தியர்கள், ஆப்கன் சீக்கியர்கள், ஹிந்துக்கள் உள்ளிட்ட 78 பேர் துஷான்பே வழியாக தில்லி வந்தடைந்தனர். இதன்மூலம் கடந்த ஆக. 16–ஆம் தேதியிலிருந்து இது வரை மீட்கப்பட்டு இந்தியா வந்தடைந்தவர்களின் எண்ணிக்கை 800–ஆக உயர்ந்துள்ளது.
- 'ஆபரேஷன் தேவி சக்தி' என்ற நடவடிக்கை மூலம் இந்த மீட்புப்பணியை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

## காபூலில் இருந்து வந்த சீக்கியர்களின் புனித நூல்

- ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருந்து மீட்கப்பட்டு இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்ட 78 பேருடன், சீக்கியர்களின் புனித நூலான குரு கிரந்த சாகிப்பின் மூன்று பிரதிகளும் கொண்டுவரப்பட்டன.
- புனித நூல் பிரதிகளை மத்திய அமைச்சர்கள் ஹர்தீப் சிங் புரி, வி.முரளீதரன் ஆகியோர் தில்லி விமான நிலையத்தில் பெற்றுக் கொண்டனர். அந்த நூல் பிரதிகள் தில்லி நியூ மகாவீர் நகரில் உள்ள குரு அர்ஜுன் தேவ் குருத்வாராவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

- ஆப்கன் விவகாரம் தொடர்பாக பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் டோம்னிக் ராப்புடன் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

## உலக உற்பத்தி குறியீடு 2021

- குஷ்மேன் மற்றும் வேக் பீல்டு குறியீட்டில் உலக அளவிலான உற்பத்தி குறியீட்டில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளது. மூன்றாவது இடத்தில் அமெரிக்கா, அடுத்தடுத்த இடங்களில் கனடா, செக் குடியரசு, இந்தோனேசியா, லூதியானா, தாய்லாந்து, மலேசியா மற்றும் போலாந்து ஆகியவை இடம் பெற்றுள்ளது.

## மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி நிலையம்: நேபாளத்துக்கு இந்தியா வழங்கியது

- நேபாளத்துக்கு மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தை இந்தியா நன்கொடையாக வழங்கியுள்ளது.
- நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய தூதர் வினய் மோகன் க்வாத்ரா, மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தை அந்நாட்டின் சுகாதாரத் துறை இணை அமைச்சர் உமேஷ் சிரேஷ்டாவிடம் ஒப்படைத்தார்.

## உலகின் மிக உயரமான கண்காணிப்பு சக்கரம்

- ஐக்கிய அரபு அமீரகத்தில் துபாய் நகரத்தில் 2021 அக்டோபரில் உலகின் மிகப்பெரிய மற்றும் உயரமான கண்காணிப்பு பதிவு சக்கரம் அமைக்கப்படுகிறது.

## இந்தியா–மாலத்தீவு இடையே ஒப்பந்தம்

- இந்தியா மாலத்தீவு இடையே மாபெறும் மாலே திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்திற்கு இந்தியா 400 மில்லியன் கடனாகவும் 100 பில்லியன் டாலர் உதவியாகவும் வழங்கவும் தீர்மானித்துள்ளது.
- மகாராஷ்டிராவின் AFCONS நிறுவனம் இந்த கட்டமைப்பை செய்து கொடுக்கவும் திட்டமிட்டுள்ளது.

## தென்சீனக் கடல் பகுதியில் பயணிக்கும் கப்பல்கள் பதிவு செய்வது அவசியம்

- சீனாவிற்கு உரியதாய் கருதப்படும் தென்சீனக் கடல்பகுதியில் பயணிக்கும் கப்பல்கள் சீனாவிடம் பதிவு செய்வது அல்லது தகவல் தெரிவிப்பது அவசியம் என சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

Nine dash line:

- 9வது டிகிரி லைன் என்ற பகுதியில் நுழையும் அனைத்து சரக்கு கப்பல்களும் ஐக்கிய நாடுகள் கடல் சட்ட ஒப்பந்தம் என்ற அடிப்படையில் 12 கடல் மைல் தூரத்திற்குள் நுழையும் கப்பல்கள் சீன அரசுக்கு தெரிவிப்பது கட்டாயமாகிறது.

## ஹரிகேன் இடா

- அமெரிக்காவின் லூதியானா மற்றும் நியு ஒர்லண்டே பகுதிகளில் இடா ஹரிகேன் தாக்கியுள்ளது.

வாய்மையே வெல்லும்

# 8. தமிழ்நாடு



### சமூக தீமைகளை ஒழித்த சட்டப் பேரவை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் புகழாரம்

- சமூக தீமைகளை ஒழித்து ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை உயர்த்த தமிழக சட்டப் பேரவை பயன்பட்டதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பேசினார்.
- தமிழக சட்டப் பேரவை நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் முழு உருவப்படம் திறப்பு விழா, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்றார்.

மகாகவி பாரதியின் பாடலை நினைவுகூர்ந்த குடியரசுத் தலைவர்

- சட்டப்பேரவை நூற்றாண்டு விழா, முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி உருவப்படம் திறப்பு விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், தமிழில் பேசி தனது உரையைத் தொடங்கினார்.
- மகாகவி பாரதியார் கவிதையின் வரிகளை நினைவு கூர்ந்தார்.

  "மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்

  வானையளப்போம் கடல் மீனையளப்போம்

  சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்

  சந்தி தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்"

- என்ற மகாகவி பாரதியின் வரிகளை தமிழிலேயே குறிப்பிட்டார்.

### ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க் கல்வி, ஆய்வுகளுக்கு ஒப்பந்தம்

- ஐரோப்பிய நாடுகளில் தமிழ்க் கல்வி – ஆய்வுகளில் இணைந்து செயல்பட தமிழ்ப் பல்கலைக்கழகமும் – நார்டிக் அறிவியல், தொழில்நுட்பக் கழகமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன.
- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் கோ.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நார்டிக் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் சார்பில் சுவீடனின் சால்மர்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர் மற்றும் கல்வியாளர் விஜய் அசோகன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) மோ.கோ. கோவைமணி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

### நமீபியா நாட்டிற்கான வர்த்தக குழு

- இந்தியா, ஆப்பிரிக்கா வர்த்தக கவுன்சிலும் இந்தியா நமீபியா வர்த்தக மன்றமும் இணைந்து ஆப்பிரிக்க நாடுகளுடன் வரத்தக மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான குழுவை அமைக்க திட்டமிட்டுள்ளது.
- இதற்காக 50 பேர் கொண்ட குழுவை அமைத்து நமீபியாவிற்கு செல்ல திட்டமிட்டுள்ளனர். இந்த குழுவில் தமிழகத்திலிருந்து மட்டும் 30 பேர் இடம் பெறுவர்.

### '12பி" அந்தஸ்து பட்டியலில் இடம் பெற்றது தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம்

- சென்னை காரப்பாக்கத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துக்கு பல்லைக்கழக மானியக்குழு (யுஜிசி) "12பி" அந்தஸ்து வழங்கியுள்ளது.
- இது குறித்து அந்தப் பல்லைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் வி.பாலகிருஷ்ணன் வெளியிட்ட செய்தி: ஆசிரியர் கல்வியை மேம்படுத்தி சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்லைக்கழகம் கடந்த 2008–ஆம் ஆண்டு ஜுலை மாதம் தமிழக

அரசின் சார்பில் தொடக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைப்படி, 12பி அந்தஸ்து பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே மத்திய அரசின் நிதியுதவி, கல்வி சார்ந்த புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கான அனுமதி ஆகியவை வழங்கப்படும்.

## பொறியியல் உள்ளிட்ட தொழிற் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு

- அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு பொறியியல் உள்ளிட்ட தொழிற் படிப்புகளில் 7.5 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்ட மசோதா பேரவைக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளது.
- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான முடிவு எட்டப்பட்டது. இது குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:
- பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கின்றன. அரசுப் பள்ளி மாணவர்கள் தொழிற்கல்வி கற்பதற்கு தடையாக உள்ள காரணிகள் என்னவென்று ஆய்வு செய்வதற்கும், அவர்களின் சேர்க்கை விகிதத்தை உயர்த்தவும் அரசு நடவடிக்கைகளைத் தொடங்கியது. அதன்படி, தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க தில்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி த.முருகேசன் தலைமையில் கடந்த ஜுன் 15-ஆம் தேதியன்று ஆணையம் அமைக்கப்பட்டது.

## மக்களைத் தேடி மருத்துவம்"

- "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற தமிழக அரசின் திட்டம் மூலமாக, தமிழகத்தில் ஒரு கோடி மக்கள் பயனடைவார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.
- "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற தமிழக அரசின் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகே சாமனப்பள்ளியில் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:
- இந்தியாவுக்கே முன்னோடியாக அமையக் கூடிய ஒரு திட்டம்தான் "மக்களைத் தேடி மருத்துவம்". இந்த ஆண்டு இறுதிக்கும் 34 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடி பேர் இதனால் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.
- கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் மிகுந்த அர்ப்பணியோடு இருந்தன. கரோனா இரண்டாவது அலையின் போதும் இந்தத் துறையினர் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டதும், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாத மருத்துவர்களின் தன்னலமற்ற சேவையும் நாட்டில் அனைவரும் அறிந்தது.
- அதன் தொட்ச்சியாகத்தான் "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை தமிழக அரசு சார்பில் தொடங்கி உள்ளோம். மக்கள் மருத்துவமனைகளைத் தேடி வரும் நிலையை மாற்ற, மருத்துவம் மக்களைத் தேடிச் செல்வதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## 75-ஆவது சுதந்திர தினம்: 49 ஆண்டுகளுக்குப் பிறகு பேரவையில் நள்ளிரவு கூட்டம் நடத்த ஆலோசனை

- நாட்டின் 75-ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி, சட்டப் பேரவையில் நள்ளிரவு விழா நடத்திட ஆலோசிக்கப்பட்டு வருகிறது. கடந்த 1972-ஆம் ஆண்டு நாட்டின் 25-ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. அப்போது, பேரவையில் ஆகஸ்ட் 14-ஆம் தேதி நள்ளிரவில் விழா நடத்தப்பட்டது.
- இந்த விழாவில், ஆளுநர், முதல்வர், பேரவைத் தலைவர், அவை முன்னவர், பேரவையில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் பேசினர். இதே போன்றதொரு விழா, 1987-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் நடந்தது. நாட்டின் 40-ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி, 1987-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதி பேரவையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. காலை 10 மணிக்கு நடந்த நிகழ்ச்சியில், ஆளுநர், அப்போதைய நிதியமைச்சரும், அவை முன்னவருமான வி.ஆர். நெடுஞ்செழியன், உயர் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். சுதந்திரத்துக்காக பாடுபட்ட தலைவர்களின் தியாகங்களை நினைவு கூரும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, தமிழகத்தில் விடுதலைப் போராட்டம் வீரம் செறிந்த முறையில் நடைபெற்ற இடங்களில்

5 முக்கிய இடங்களான தூத்துக்குடி துறைமுகம், வேதராண்யம், மணியாச்சி ரயில் நிலையம், திருப்பூர் நகரம், திலகர் திடல் ஆகியவற்றில் இருந்த புனித மண் எடுக்கப்பட்டது.

## தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் முதல் முறையாக மின்சார கார்கள் இயக்கம்

- தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் முதல் முறையாக மின்சார கார்கள் துறைமுகப் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.
- இத்துறைமுகத்தில் மின்சார கார்களை இயக்கும் பணியை அத்துறைமுகத்தின் பொறுப்புக் கழகத் தலைவர் தா.கி.ராமச்சந்திரன் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.
- கழக துணைத் தலைவர் பிமல்குமார் ஜா, தலைமை இயந்திரப் பொறியாளர் வி.சுரேஷ்பாபு, எனர்ஜி எபிஜென்சி சர்வீசஸ் நிறுவன நிர்வாக துணைத் தலைவர் சௌரப் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 2021–22ம் ஆண்டில் தமிழ்நாட்டின் நீர்மின் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு

- மத்திய மின்சார ஆணையம் தமிழ்நாட்டில் 2021–22ல் 3853 மில்லியன் யூனிட் மின்சாரம் நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது.
- இது 2020–21ம் ஆண்டில் 4040 மில்லியன் யுனிட்டுகளாக இருந்தது. இது தமிழ்நாட்டின் மின்தேவையில் 5 சதவீதம் ஆகும்.
- இந்த நாட்களில் தமிழ்நாட்டின் 350 மில்லியன் யுனிட் மின் தேவையின் காற்று மற்றும் சூரிய மின்னுற்பத்தி நிலையங்கள் 108 மில்லியன் பெறப்படுகிறது.

## கரோனா மூன்றாம் அலையை எதிர்கொள்ள செயல் திட்டக் குழு அமைப்பு

- கரோனா மூன்றாவது அலையை எதிர்கொள்ளவும், அனைத்து மருத்துவமனைகளிலும் குழந்தைகள் வார்டுகளை அமைக்கவும் செயல்திட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையிலான அக்குழுவில் பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம், மருத்துவ சேவைகள் துறை இயக்குநர் டாக்டர் குருநாதன் உள்பட 13 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- கரோனா மூன்றாம் அலையின்போது 18 வயதுக்குட்பட்டவர்கள், குழந்தைகளுக்கு அதிக பாதிப்புகள்ஏற்படலாம்என்றுமருத்துவவல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். மூன்றாவது அலையின்போது குழந்தைகள் தீவிரமாக நோய்த் தொற்றுக்குள்ளாக இரண்டு முக்கியமான காரணங்கள் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஒன்று கரோனா தீநுண்மி வீரியமிக்கதாக மாறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொன்று 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கரோனா தடுப்பூசி இன்னமும் செலுத்தப்படாமல் உள்ளது.

## கோயில்களில் 1 லட்சம் தல மரக்கன்றுகள் திட்டம்

- கோயில்களில் ஒரு லட்சம் தல மலக்கன்றுகள் நடும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- தல மரம்: கோயில்கள் உருவாவதற்கு முன்பாகவே, அந்த மரங்கள் இருப்பதால் அவை தல மரம் எனப் போற்றப்படுகிறது.
- கோயில்களில் மாமரம், புன்னை, வில்வம், செண்பகம், மருதம் போன்ற மரங்கள் தல மரங்களாகக் கருதப்பட்டு அவை நடப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த தல மரங்களைப் போற்றிப் பாதுகாக்கும் வகையில், கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் ஒரு லட்சம் தல மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூன்று மாதங்களில் முடிக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்த பயிற்சித் திட்டம்

- மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் வகையிலான பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை ஆணையர் நந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.
- அதன் விவரம்: 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு படைப்பாற்றலை ஊக்கப்படுத்தும் வகையில், வாழ்த்து அட்டை தயாரித்தல், படம் வரைதல் போன்றவையும், 6 முதல் 8–ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு கட்டுரை எழுதுதல், சுயவிவரக்குறிப்பு வரைதல் போன்றவையும், 9, 10–ஆம் வகுப்பினருக்கு புத்தக விமர்சனம் போன்றவையும் அசைன்மென்டாக தரப்படவேண்டும்.

- கற்றல்–கற்பித்தல் இடைவெளி இருப்பதாகத் தெரிய வந்துள்ளதால், அதை நிவர்த்தி செய்யவே இவ்வாறான திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## குடிமக்களின் குறைகளைத் தீர்க்க கண்டுபிடிப்பு மையம்

- சென்னை மாநகராட்சி குடிமக்களின் குறைகளை எளிதில் அறிந்து கொள்ள சென்னை கார்பரேஷன் கண்டுபிடிப்பு மையம் (Chennai Corporation Innovation Hub (CHUB)) என்ற புதிய இணையதள மையத்தை துவங்க உள்ளது.
- அடிப்படைத் தேவை, கல்வி, ஆராய்ச்சி, தொழிற்சாலை அரசு சேவைகள், போன்றவற்றில் மக்களுக்கு அரசுடனான இனக்கத்தை ஏற்படுத்த இந்த மையம் அமைக்கப்பட உள்ளது.

## தமிழக கடன் சுமை ரூ.5.70 லட்சம் கோடி நிதிநிலை வெள்ளை அறிக்கையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்

- அதிமுக ஆட்சிக் காலத்தில் வரி வருவாயில் மிகப்பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் சுமை வரும் மார்ச் மாதத்தில் ரூ.5.70 லட்சம் கோடியாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.
- நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்டோர் தலைமைச் செயலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது வெளியிட்டனர். இதைத் தொடர்ந்து, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அளித்த பேட்டி:
- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், சொந்த வரி வருவாய் விகிதத்தில் அனைத்து மாநிலங்களின் சராசரி வீழ்ச்சியைவிட தமிழ்நாட்டில் பெருமளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2018–19 நிதியாண்டில் முதல் முறையாக தேசிய சராசரி அளவை விட தமிழகத்தின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வரி வருவாயின் விகிதம் குறைந்துள்ளது. கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் வருவாய் பற்றாக்குறை ரூ.61,320 கோடியாக உள்ளது. இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.16 சதவீதமாகும்.
- குடும்பத்துக்கு ரூ.2.64 லட்சம் கடன்: தமிழகத்தின் ஒட்டுமொத்த கடன் சுமையை ஒரு தனி நபருக்கு பிரித்து அளித்தால், அது ஒரு நபருக்கு ரூ.1.10 லட்சமாக இருக்கும். அதன்படி, ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூ.2 லட்சத்து 63976 கடன் உள்ளது. மாநிலத்தின் வரி வருவாய், வரியல்லாத வருமானம், மத்திய அரசிடம் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய பங்கு, மானியங்கள் திட்டங்கள் மூலமாக வர வேண்டியது என நான்கு அம்சங்களின் வழியாக வருவாய் கிடைக்கிறது.

## ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி துணைத்தலைவர்

- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் துணைத்தலைவர் டி.ஜே. பாண்டியன் ஆய்வு செய்தார்.

## ராஜேந்திர சோழன் பிறந்த தினம்: அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

- மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- அவரது அறிவிப்பு விவரம்: அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழனால் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டது. உலகப்புகழ் வாய்ந்த இந்த ஆலயமானது, ராஜேந்திர சோழனின் காலம் முதல் சோழர்களின் கலை மற்றும் கட்டடக்கலைகளின் அழகிய தொகுப்பாகவும், வாழும் வரலாறாகவும் விளங்குகிறது.
- ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ அமைப்பானது, பிரகதீஸ்வரர் ஆலயத்தை உலகப் புராதன பாரம்பரியச் சின்னமாக அண்மையில் அறிவித்தது. இந்த ஆலயத்தின் சிறப்பினை நேரில் அறிந்திட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

## நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு விருது: சிறந்த மாநகராட்சியாக தஞ்சை தேர்வு

- சுதந்திர தினத்தின் போது விருது பெறவுள்ள சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி சிறந்த மாநகராட்சியாக தஞ்சாவூரும், சிறந்த நகராட்சிகளாக முதல் மூன்று இடங்களுக்கு உதகமண்டலம், திருச்செங்கோடு, சின்னமனூர் ஆகியனவும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- இதற்கான உத்தரவை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா பிறப்பித்தார். அந்த உத்தரவு விவரம்:–
- சிறந்த மாநகராட்சியாக தஞ்சாவூர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநகராட்சிக்கு ரூ.25 லட்சம் பரிசுடன், கேடயம் ஆகியவை வரும் சுதந்திர தின விழாவில் அளிக்கப்படும்.
- உதகமண்டலம், திருச்செங்கோடு, சின்னமனூர் ஆகியவை சிறந்த நகராட்சிகளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு முறையே ரூ.15 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.5 லட்சம் பரிசுடன் பாராட்டுக் கேடயம் வழங்கப்படும்.
- பேரூராட்சிகள் வரிசையில், கல்லக்குடி கல்லக்குடி (திருச்சி), மேல் பட்டணம்பாக்கம் (கடலூர்), கோட்டையூர் (சிவகங்கை) ஆகியன முறையே முதல் மூன்று பரிசுகளைப் பெறுகின்றன. அவற்றுக்கு ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் பரிசுடன் பாராட்டுக் கேடயங்கள் அளிக்கப்படும்.

## தமிழக நிதிநிலை அறிக்கை

மகளிர் சுய உதவி கடன் ரூ.2,756 கோடி தள்ளுபடி

- பெட்ரோல் மீது விதிக்கப்படும் மாநில அரசின் வரி லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரி குறைப்பு நடவடிக்கை முதல் நடைமுறைக்கு வந்தது.
- மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. அதிமுக ஆட்சியில் இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், திருத்திய நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார். காகிதமில்லாத தனது முதல் நிதிநிலை அறிக்கையை அவர் பேரவைக்கு அளித்தார்.
- நான்கு முக்கிய அம்சங்கள்: அனைத்து மக்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான பொருளாதார நிலையை நன்கு அறிய, அனைத்துத் துறைகளிலுள்ள தரவுகளை ஒருங்கிணைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும். இதன்படி, பல கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவது மேம்படுத்தப்படும்.
- மாநிலத்திலுள்ள அனைத்து பொது சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படும் எனவும், கொள்முதல் செய்யும் அனைத்து துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை பின்பற்றப்படும் எனவும் நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் தியாகராஜன் தெரிவித்தார். ஒப்பந்தப்புள்ளிகள், பணிகளுக்கு பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்தும் கணினிமயமாக்கப்படும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாகச் சீர்திருத்தநடைமுறைகள் இருந்தாலும், தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.
- பெட்ரோல் விலை குறைப்பு: பெட்ரோல் மீதான வரி ரூ.3 அளவுக்குக் குறைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற அறிவிப்புகள் விவரம்:
- மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் அனைத்தும் தகுதியான குழுக்களுக்கே சென்றடைந்துள்ளன. எனவே, கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்படும். கூட்டுறவு சங்கங்கள் கடன் வழங்குவதற்கு ஏதுவாக, அந்தச் சங்கங்களுக்கு பல்வேறு கட்டங்களில் நிதி வழங்குவதற்கான நடைமுறையை அரசு வகுக்கும். இதற்காக ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ், தகுதிவாய்ந்த குடும்பங்கள் கண்டறியப்பட்டு இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். விவசாய நகைக் கடன்களில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளின் தரம் மற்றும்தூய்மை சரியாகக் கணக்கிடப்படவில்லை. எனவே, இந்த முறைகேடுகள் குறித்து தீர ஆராய்ந்து திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தார்.

வருவாய் பற்றாக்குறை ரூ.58,692.68 கோடி

- வருவாய்ப் பற்றாக்குறை: இடைக்கால நிதிநிலை அறிக்கையில்எதிர்பார்க்கப்பட்டபடி வருவாய்களும், செலவினங்களும் அமையவில்லை என்பதை தனது நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் அமைச்சர் தியாகராஜன். நிகழ் நிதியாண்டில் அரசுக்கான வருவாய் ரூ.2 லட்சத்து 2 ஆயிரத்து 495.89 கோடியாகவும் வருவாய் செலவுகள் ரூ.2 லட்சத்து 61 ஆயிரத்து 188.57 கோடியாகவும் இருக்கும் என அவர் மதிப்பிட்டுள்ளார். இதனால், வருவாய் ரூ.58 ஆயிரத்து 692.68 கோடி பற்றாக்குறை அளவுடன் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

- வருவாயில் ஏற்பட்ட சரிவை நிறுத்தி, நிதி நிலைமையைச் சீர்படுத்துவது மக்களுக்கு அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும் எனக் கூறியுள்ள அவர், ஒரே நேரத்திலோ அல்லது ஒரே ஆண்டிலோ அதனை செய்ய முடியாத அளவுக்கு அந்தப் பணி கடினமாக உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு, குறைந்தபட்சம் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையில் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.
- பெட்ரோல் மீதான வரி மட்டும் ரூ.3 குறைக்கப்பட்டது ஏன் என்பதற்கு நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து, அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:
- டீசல் மீது வரி குறைப்பு செய்யாததற்கு காரணம், அதன் பயன்பாட்டுத் தன்மை மாறிவிட்டது. பெரும்பாலும் பேருந்துகளுக்காக டீசல் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. கரோனா காரணமாக பேருந்து போக்குவரத்து அதிகம் இல்லை. பொது போக்குவரத்தை மக்கள் பயன்படுத்துவது குறைந்து விட்டது.
- எனவே, டீசல் பயன்பாடு என்பது சொகுசு வாகனங்களுக்கே அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. ஓராண்டில் மட்டும் பெட்ரோல், டீசல் மூலமாக மாநில அரசுக்கு ரூ.23 ஆயிரம் கோடி வருவாய் கிடைக்கிறது. ஒரு லிட்டர் பெட்ரோல் அல்லது டீசல் மூலமாக தமிழக அரசுக்கு ரூ.12–13–ம், மத்திய அரசுக்கு ரூ.32 முதல் ரூ.34 வரையிலும் வருவாய் கிடைக்கும் என்று எஸ். கிருஷ்ணன் தெரிவித்தார்.

முக்கிய அம்சங்கள்

- 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு.
- இல்லத்தரசிகளுக்கு ஊதியம்: தகுதியானவர்களுக்கு மட்டும்.
- நடப்பாண்டில் புதிதாக 10 அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.
- சித்த மருத்துவத்துக்கு தனிப் பல்கலைக்கழகம்
- கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம்
- புதிதாக 6 இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள்
- ரூ.1,000 கோடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்.
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு ரூ.4,807.56 கோடி ஒதுக்கப்படும்.
- 10 ஆண்டுகளில் ஆயிரம் தடுப்பணைகள் கதவணைகள் கட்டப்படும்.
- காசிமேடு மீன்பிடி தளம் மேம்படுத்தப்படும்.
- உள்ளாட்சி அமைப்புகள் துணையுடன் 10 கடற்கரைகள் மேம்படுத்தப்படும்.
- ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் உருவாக்கப்படும்.
- 1,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.
- மாநில கல்விக் கொள்கை வகுக்க உயர்நிலைக் குழு உருவாக்கப்படும்.
- அடிப்படை கல்வி, கணித அறிவை உறுதி செய்ய தனி இயக்கம் ஏற்படுத்தப்படும்.
- மாதிரிப் பள்ளிகள் அமைக்க சிறப்புத் திட்டம்.
- 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கரில் நிலவங்கித் தொகுப்புகள் உருவாக்கப்படும்.
- நந்தம்பாக்கம், காவனூரில் நிதிநுட்ப நகரங்கள்.
- துணிநூல் துறையில் கவனம் செலுத்த தனி இயக்குநரகம்.

## புவிசார் குறியீடு வழங்கப்பட்ட 3 பொருள்களுக்கு சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியீடு

- புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ள நாச்சியார்கோவில் குத்துவிளக்கு, மதுரை சுங்குடி சேலைகள் மற்றும் நாகர்கோவிலில் தயாரிக்கும் கோயில் நகைகள் ஆகியவற்றுக்கு இந்திய அஞ்சல்துறை சார்பில் சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியிடப்பட்டன.

## தூத்துக்குடியில் ரூ.1,000 கோடியில் அறைகலன்களுக்கு சர்வதேச பூங்கா

- தூத்துக்குடி மாவட்டத்தில் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1,000 கோடியில் அறைகலன்களுக்கு சர்வதேச பூங்கா (International Furniture Park) அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, ரூ.4,500 கோடி முதலீட்டை ஈர்க்க முடியும். இதுதவிர, 3.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- விரைவில் புதிய தொழில் கொள்கை: வளர்ந்து வரும் துறைகளில் தமிழகத்தின் பங்கை வலுப்படுத்துவதற்காக, புதிய தொழில் கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும்.
- டைடல் பூங்கா: தமிழகத்தில் உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் டைடல் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முதல் கட்டமாக, விழுப்புரம் மாவட்டத்தின் திருச்சிற்றம்பலம், வேலூர், திருப்பூர் மற்றும்

தூத்துக்குடி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

- பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்கா: கோயம்புத்தூரில், 500 ஏக்கர் பரப்பளவில், ரூ.225 கோடி மதிப்பில், பாதுகாப்புக் கருவிகள் உற்பத்தி பூங்காவை மாநில அரசு அமைத்து செயல்படுத்தும்.

## மகப்பேறு கால விடுப்பு 12 மாதங்களாக அதிகரிப்பு

- மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டுக்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு காலம் 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன்படி 2021 ஜூலை 1 முதல் மகப்பேறு விடுப்பு காலம் 12 மாதங்களாக உயர்த்தி செயல்படுத்தப்படும்.

## தமிழகத்துக்குத் தனியாக மாநில கல்விக் கொள்கை

- தமிழகத்தின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றை அரசு நியமிக்கும்.

## அங்கன்வாடி மையங்களின் தரத்தை உயர்த்த சிறப்பு நிதி ஒதுக்கீடு

- முன்னாள் முதல்வர் கருணாநிதியால் தொடங்கப்பட்ட திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு புத்துயிர் அளித்து, மகளிர் கல்வி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு ரூ.762.23 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## மதுரை, கோவை, திருப்பூர், ஓசூரில் பெருநகர வளர்ச்சிக் குழுமங்கள்

- கரோனா காரணமாக நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, நகர்ப்புறங்களில் ஊதிய உத்தரவாதம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதற்காக சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட உள்ளது.

## பழனி தண்டாயுதபாணி கோயில் மூலம் புதிய சித்த மருத்துவக் கல்லூரி

- திமுக அரசு பொறுப்பேற்ற 100 நாள்களுக்குள் சொந்தமான 187.91 ஏக்கர் நிலங்கள், 161,702 கிரவுண்டு காலிமனைகள், 1887.13 சதுர அடி பரப்புள்ள கட்டடங்கள், 15.60 கிரவுண்டு பரப்புள்ள கோயில் குளக்கரை நிலங்கள் மீட்கப்பட்டு கோயில்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## புதிதாக 6 இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள்: காசிமேடு துறைமுகத்தை மேம்படுத்த ரூ.150 கோடி

- மீனபிடித் தடைக்கால நிவாரண நிதிக்காகவும், சிறப்பு நிதிக்காகவும் கடல்சார் மீனவருக்கான சேமிப்புடன் கூடிய நிவாரணத் திட்டத்துக்காகவும் மொத்த தொகையாக ரூ.303.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆறுமுகசாமி ஆணையம் 90 சதவீத விசாரணையை முடித்து விட்டது

- முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மர்ம மரணம் குறித்து 90 சதவீத விசாரணையை நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் முடித்து விட்டதாக உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல் தெரிவித்துள்ளது.

## கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம்

- கீழடியில் பொதுமக்களும், எதிர்காலத் தலைமுறையினரும் நேரடியாக கண்டு உணரும் வகையில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வுகள் தமிழகத்தில் மட்டுமின்றி உலகத் தமிழர் இடையேயும் தமிழரின் தொன்மை மற்றும் பண்பாடு குறித்து விழிப்புணர்வையும் ஊட்டியுள்ளன.

## அழகன்குளத்தில் ஆழ்கடல் அகழாய்வுக்கு இடங்களை கண்டறியும் பணி தொடக்கம்

- அழகன்குளத்தில் ஆழ்கடல் அகழாய்வுக்கான இடங்களை கண்டறியும் பணிகளை, அதிகாரிகள் தொடங்கினர்.
- ராமநாதபுரத்திலிருந்து ராமேசுவரம் செல்லும் பிரதான தேசிய நெடுஞ்சாலையிலிருந்து இடதுபுறம் சுமார் 4 கி.மீட்டர் தொலைவில் உள்ளது அழகன்குளம் மீன்பிடித் துறைமுகம். இப்பகுதியில், கடந்த 1984 முதல் 2014 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு தொல்லியல் துறையால் 7 முறை அகழாய்வு நடத்தப்பட்டுள்ளது. அதில், சுடுமண் பாத்திரம் மற்றும் அதில் கெட்டுப் போகாமலிருந்த தானியம், வாள், சுடு சங்குகள், எழுத்துகள் பொறித்த மண் ஓடுகள், ரோமானிய, சீன முத்திரை பதித்த நாணயங்கள், இலட்சினைகள் என, தமிழகத்தில் இதுவரை எங்கும் கண்டெடுக்கப்படாத 2,300 ஆண்டுகளுக்கு முந்தைய 13 ஆயிரம் பொருள்கள் கிடைத்துள்ளன.

## நெல்–கரும்புக்கான ஊக்கத்தொகை உயர்வு

- தமிழக வரலாற்றில் முதல் முறையாக, சட்டப் பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கையை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். அதன் விவரம்:
- தமிழ்நாட்டில் நெல்லுக்கு நிகழாண்டில் குறைந்தபட்ச ஆதார விலையாக சன்னரகத்துக்கு குவிண்டால் ரூ.1,960, சாதாரணரகத்துக்கு ரூ.1,940 என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு நடப்பாண்டில் கொள்முதல் விலையை உயர்த்தி, சன்ன ரகத்துக்கு ரூ.70–லிருந்து ரூ.100 ஆகவும், சாதாரணரகத்துக்கு ரூ.50–லிருந்து ரூ.75 ஆகவும் ஊக்கத்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இதனால், ஒரு குவிண்டால் நெல் சன்னரகம் ரூ.2,060–ஆகவும், சாதாரண ரகம் ரூ.2,015–ஆகவும் கொள்முதல் செய்யப்படும். இதன் மூலம் சுமார் 6 லட்சம் விவசாயிகள் பயன் அடைவர்.

## வேளாண் நிதிநிலை அறிக்கை முக்கிய அம்சங்கள்

- வேளாண்மை சார்பு துறைகளுக்கு ரூ.34,220.65 கோடிநிதி ஒதுக்கீடு.
- அரசு இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையத்துக்கு நம்மாழ்வார் பெயர்.
- கிராமங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உருவாக்க, கலைஞரின் வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.
- மாநிலத்தின் சாகுபடி பரப்பு 75 சதவீதமாக உயர்த்தப்படும்.
- இருபோக சாகுபடி பரப்பு 20 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும்.
- விவசாய பம்ப் செட்களுக்கு இலவச மின்சாரத்துக்கு ரூ.4,508.23 கோடி நிதி.
- ரூ.140 கோடியில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்படும்.
- இயற்கை வேளாண்மைத்கென தனிப்பிரிவு உருவாக்கம்.
- பனை மேம்பாட்டு இயக்கம் உருவாக்கப்படும்.
- கடலூரில் பலாவுக்கான சிறப்பு மையம் உருவாக்கப்படும்.
- தமிழ் வழியில் வேளாண் தோட்டக்கலை கல்வி.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிதாக தோட்டக் கலைக் கல்லூரி உருவாக்கப்படும்.
- நாமக்கல் மாவட்டத்தில் மிளகுக்கான பதப்படுத்தும் மையம் ஏற்படுத்தப்படும்.
- வேளாண்மைக்கென சென்னையில் தனி அருங்காட்சியகம்.
- சிறு தானியங்களுக்கு தனி இயக்கம் உருவாக்கப்படும்.
- 50 உழவர் சந்தைகள் புதுப்பிக்கப்படும்.
- நடப்பாண்டில் 10 உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்படும்.
- ஒட்டன்சத்திரம், பண்ருட்டியில் நவீன குளிர்பதனக் கிடங்குகள்.
- முருங்கை ஏற்றுமதி மண்டலம் உருவாக்கப்படும்.
- ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம்.

## சென்னையில் வேளாண்மைக்கான தனி அருங்காட்சியகம்

- 1.10 லட்சம் விவசாயிகள்: விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் 1.10 லட்சம் விவசாயிகளை ஒருங்கிணைத்து, ஆயிரத்து 100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு குழுவுக்கும் தலா ரூ.5 லட்சம் மூலதன நிதி அளிக்கப்படும்.

- மரபுசார் அருங்காட்சியகம்: வேளாண்மையின் பெருமையை இளம் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக, வேளாண்மைக்கென தனியாக ஒரு அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும். இதில், பாரம்பரிய நெல் வகைகள், மண் சார்ந்த வேளாண் கருவிகள், பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உரல், உலக்கை, அரவை இயந்திரம் போன்ற சாதனங்கள், பாரம்பரிய கால்நடைகளான ஆடுகள், செம்மறிகள், கோழிகள், நாய்கள் போன்றவற்றின் புகைப்படங்கள், வேளாண்மை குறித்து காட்சி ஓவியங்கள், ஐவகை நில அமைப்புகள், உள்ளூர் பயிர் ரகங்கள் காட்சிப்படுத்தப்படும்.
- விவசாயிகளுக்கு பரிசு: இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதி, புதிய உள்ளூர் கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு பரிசுகள் அளிக்கப்படும்.

## கிருஷ்ணகிரியில் புதிதாக தோட்டக்கலைக் கல்லூரி

- விவசாயத்தில் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு இணைப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் கற்பிக்கவும், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கும் வேளாண் பல்கலைக் கழகத்துக்கென நடப்பாண்டில் ரூ.573.24 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## நுண்ணீர் பாசனத் திட்டத்துக்கு ரூ.982 கோடி

- நுண்ணீர் பாசனத் திட்டம் ரூ.982 கோடியில் செயல்படுத்தப்படும் என்று வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழக பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது:
- பாசன வசதி உள்ள சிறு குறு விவசாயிகளைக் கண்டறிந்து, தொகுப்பு அணுகுமுறைக்கு, முக்கியத்துவம் கொடுத்து, சொட்டு நீர் பாசன முறையைப் பிரபலப்படுத்தி, குறைந்த நீர் ஆதாரத்தைக் கொண்டு, அதிக பரப்பில் சாகுபடி செய்து உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும். இதற்கென, 1.50 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத்திட்டம் ரூ. 982.48 கோடி செலவில் மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

## நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்

- தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில், ஏற்கெனவே கோயம்புத்தூரில் இயங்கி வரும் வளங்குன்றா வேளாண்மைக்கான துறை மேம்படுத்தப்பட்டு, 'நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' என பெயர் மாற்றம் செய்யப்படும். இதற்கென, முதல்கட்டமாக ரூ.3 கோடி மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## இயற்கை வேளாண்மைக்கு தனிப் பிரிவு

- வே|ளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக்கென தனிப்பிரிவு உருவாக்கப்படும். இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படும். இதற்காக இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

## கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

- தமிழ்நாட்டில் தரிசாக உள்ள நிலங்களில் 11.75 லட்சம் ஹெக்டேர் பரப்பில் குறைந்த நீர் செலவாகும். பயிர்கள் பயிரிடப்படும். இதன்மூலம் நிகர சாகுபடி பரப்பானது 60 சதவீதத்தில் இருந்து 75 சதவீதமாக உயர்த்தப்படும்.
- இந்தத்திட்டத்தைசெயல்படுத்த36மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்போது தரிசு நிலங்கள் 19.31 லட்சம் ஹெக்டேர் உள்ளன. இந்த தரிசு நிலங்களை மேம்படுத்தி சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்.

## இயல், இசை, நாடக மன்றத் தலைவராக வாகை சந்திரசேகர் நியமனம்

- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வாகை சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: மத்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் செயல்படுத்துவதற்காகவும், தொன்மை வாய்ந்த

தமிழகக் கலைகளைப் போற்றி, பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்காகவும் பல்வேறு கலைப் பணித்திட்டங்களை தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் செயல்படுத்தி வருகிறது.

- அதேபோன்று, நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு பரிமாணங்களை உணரும் வகையிலும், அக்கலைகளை அழியாமல் பாதுகாப்பதற்கும், அவற்றில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் பல்வேறு கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் பல்வேறு நலத் திட்டம் உதவிகளை அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் முன்னாள் முதல்வர் கருணாநிதியால் தோற்றுவிக்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## சுதந்திர தின விழாவில் முதல்வரிடம் விருது பெற்றோர்

- அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இயற்பியல் பள்ளியில் நேரற்ற இயக்கவியல் (Non Linear Dynamics) துறை பேராசிரியர் மு.லட்சுமணனுக்கு அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. இந்த விருதானது ரூ.5 லட்சம் காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.
- முதல்வரின் நல் ஆளுமை விருது: சென்னை கிண்டி அரசு கரோனா மருத்துவமனை இயக்குநர் நாராயணசாமிக்கும், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்ததற்காக மாநிலக் கல்லூரிக்கும், நில எடுப்பு நடைமுறைகள் மின் தொகுப்பினால் எளிமையாக்கப்பட்டு வெளிப்படைத் தன்மை கொண்டு வந்ததற்காக, வேலூர் மாவட்ட வருவாய் அலுவலராக இருந்து இப்போது நிலநிர்வாக இணை இயக்குநராக உள்ள ஜெ.பார்த்திபனுக்கும் நல் ஆளுமை விருது அளிக்கப்பட்டது.
- மாற்றுத் திறனாளிகள் நலன்: மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாக, திருச்சி ஹோலி கிராஸ் சர்வீஸ் சொசைட்டி, மாற்றுத் திறனாளிகளுக்காக பணியாற்றி வரும் சிறந்த மருத்துவராக சேலம் அழகாபுரம் பூ.பத்மப்ரியா, சிறந்த சமூகப் பணியாளராக திருநெல்வேலி மரிய அலாசியஸ் நவமணி, அதிகளவில் வேலைவாய்ப்பு அளித்ததற்காக சென்னை அய்யப்பன்தாங்கலைச் சேர்ந்த வீ ஆர் யுவர் வாய்ஸ் நிறுவனமும் விருதுக்காக தேர்வு செய்யப்பட்டன.
- சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருது: சிறந்த மாநகராட்சியான தஞ்சாவூருக்கு ரூ.25 லட்சம், சிறந்த நகராட்சிகளான உதகை, திருச்செங்கோடு, சின்னமனூருக்கு முறையே ரூ.15 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.5லட்சம், சிறந்த பேரூராட்சிகளான கல்லக்குடி மேல்பட்டம் பாக்கம், கோட்டையூருக்கு முறையே ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் அளிக்கப்பட்டன.
- சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அரவிந்த் ஜெயபால் குழந்தைகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தியதுடன், பின்தங்கிய மாணவர்களுக்கு விமானப் பயண அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார், கரோனா காலத்தில் உதவிகளைச் செய்த திருவாரூர் மாவட்டம் நெ.பசுருதீன், நீலகிரி மாவட்டம் ச.ரஞ்சித்குமார் ஆகியோர் மாநில இளைஞர் விருதுக்கான ஆண்கள் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டனர். ரத்ததானத்தை வலியுறுத்தி செயல்பட்டு வரும் திண்டுக்கல் மாவட்டம் க.மகேஸ்வரி, முதியோர் நலன் காக்கப் பாடுபடும் கடலூர் மாவட்டம் அமலா ஜெனிபர், கரோனா காலத்தில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய உதவிய சென்னையைச் சேர்ந்த எஸ்.மீனா ஆகியோர் மாநில இளைஞர் பெண்கள் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.
- சக்தி மசாலா நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் சாந்தி துரைசாமிக்கு அவ்வையார் விருது வழங்கப்பட்டது. மசாலா நிறுவனம் மட்டுமின்றி, சக்தி தேவி தொண்டு அறக்கட்டளை மூலம் உடல், மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை, அறிவுசார் ஊனமுற்றோருக்காக சக்தி பள்ளி, சக்தி ஆட்டிசம் சிறப்புப்பள்ளி, சக்தி மருத்துவமனை மூலம் 15–க்கும் மேற்பட்ட கிராமங்களில் சேவை, 41 அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறார். இந்த விருதானது ரூ.1 லட்சத்துக்கான காசோலை, 8 கிராம் பதக்கம், சான்றிதழ், பொன்னாடை ஆகியன அடங்கியது.
- சிறந்த மூன்றாம் பாலினர் விருது: தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கிரேஸ் பானு, சிறந்த மூன்றாம் பாலினர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## சமையல் எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டம் தொடக்கம்

- சென்னையில் ஒரு முறை பயன்படுத்திய சமையல் எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டம் தொடக்கப்பட்டது.
- சென்னையில் ஒருமுறை பயன்படுத்தும் சமையல் எண்ணெயை மறு உபயோகம் செய்வதைத் தடுக்கும் வகையில் அதை பயோ டீசலாக மாற்றும் திட்டத்தை ஆட்சியர் ஜெ.விஜயாராணி தொடக்கிவைத்தார்.
- இதுகுறித்து உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில், ஒருமுறை உபயோகப்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்தும் போது அதில் உள்ள ஊட்டச்சத்து உள்ளிட்ட பண்புகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் புற்றுநோய், இதய பாதிப்பு, நெஞ்சு எரிச்சல், உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், ஞாபகம் மறதி, கொழுப்பு மற்றும் கல்லீரல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டு இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம், பெட்ரோலியத் துறை இணைந்து ஒருமுறை உபயோகப்படுத்திய எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

## நரிக்குறவர் மொழி உள்பட பத்து மொழிகளில் வெளியாகிறது திருக்குறள்

- நரிக்குறவர் இன மக்கள் பேசும் வாக்ரிபோலி மொழி உள்பட பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திர சேகரன் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மத்திய கல்வி அமைச்சகம், திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. இந்தநிறுவனம், ஏற்கெனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளையும் மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக வரும் அக்டோபர் மாதம் மலையாளம், மராத்தி, ஒடியா, ஹிந்தி, நேபாளி, உருது, அரபி, பாரசீகம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி, படுகு ஆகிய பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன. இது தவிர மொழிபெயர்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், குறுந்திட்ட ஆய்வுகள் மூலமாகவும் வரப் பெற்றுள்ள ஆய்வுகள் செம்மொழித் தமிழாய்வுமத்திய நிறுவனத்தின் மூலம் நூலாக்கம் பெற்று வருகின்றன.
- அந்தவகையில் உவே.சாமிநாதையர் நாட்குறிப்பு, உவே.சாமிநாதையர் அருஞ்சொல் அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், நற்றிணை (கன்னட மொழிபெயர்ப்பு), தொல்காப்பியம் (ஹிந்தி மொழிபெயர்ப்பு), பதிற்றுப்பத்து (கன்னட மொழிபெயர்ப்பு) ஆகியவை உள்ளிட்ட 20 நூல்கள் செப்டம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளன என அதில் தெரிவித்துள்ளார்.

## நிலக்கரி கையாளுவதில் தூத்துக்குடி வஉசி துறைமுகம் புதிய சாதனை

- நிலக்கரி கையாளுவதில் தூத்துக்குடி வஉசி துறைமுகம் புதிய சாதனை படைத்துள்ளது.
- இதுகுறித்து துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் தா.கி. ராமச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் 9ஆவது கப்பல் சரக்குத் தளத்தில் எம்.வி. ஸ்டார் லாரா என்ற கப்பலிலிருந்து 57,090டன் நிலக்கரி 24 மணி நேரத்தில் கையாளப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு அக்டோபர் 27ஆம் தேதி 24 மணி நேரத்தில் 56,785 டன் நிலக்கரி கையாளப்பட்டதே சாதனையாக இருந்து வந்தது.

## 75–ஆவது சுதந்திரத்தைப் போற்றும் நினைவுத் தூண்

- நாட்டின் 75–ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி, சென்னை காமராஜர் சாலை–சிவானந்தா சாலை சந்திப்பில் எழுப்பப்பட்ட நினைவுத் தூணை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தில் பாவேந்தர் நூலகம்

- செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் பாவோந்தர் நூலகம் அமைக்கப்படும் என்று தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

- சென்னை தரமணியில் உள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், கர்நாடக மாநிலம் மைசூரில் உள்ள மத்திய அரசு நிறுவனத்துடன் இணைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென பேரவையில் நிதிநிலை அறிக்கை மீது பேசிய திமுக உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார். இதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதில்:
- செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், மைசூரில் உள்ள மத்திய அரசு நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட இருப்பதாக தகவல்கள் அறிந்தவுடன் அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையாக எதிர்த்தார்.

## ஹைட்ரோகார்பன் திட்டம் குறித்து ஆராய குழு

- மாநில வளர்ச்சி குழு உறுப்பினர் சுல்தான் அகமது இஸ்மாயில் தலைமையில் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்கள் தவிர்த்த பிற பகுதிகளில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கான சாத்திய கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்க 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த பணியின் மூலம் காவிரி டெல்டா பகுதியில் நிகழும் குடிநீர் பிரச்சனை, நிலத்தடி நீர் பிரச்சனை, சுற்றுச்சூழல் பிரச்சனை குறித்தும் ஆராய உள்ளனர்.

## மின்னனு முறையில் சாலை விதிமீறல் கண்காணிப்பு

- சாலைப் போக்குவரத்தில் விதிமீறல்களை மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தி கண்காணிக்க மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
- "தேசிய துய்மைக் காற்று திட்டம்" மேற்கொள்ளப்படும் 132 நகரங்களில் இந்த மின்னணு கண்காணிப்பை உறுதியாக மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி, துத்துக்குடி ஆகிய நகரங்கள் தூய்மைக் காற்று திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த நகரங்களில் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணிப்பதற்கு மின்னணு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு அதை உறுதி செய்யவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மதுரை 293–ஆவது ஆதீனம் ஆகஸ்ட் 23இல் பட்டம் ஏற்பு

- மதுரை ஆதீனத்தின் 293–ஆவது சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் பட்டம் ஏற்கும் ஞானபீடாரோஹன விழா ஆகஸ்ட் 23 நடைபெறுகிறது.
- மதுரை ஆதீனத்தின் 293–ஆவது ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள், திருநெல்வேலியில் 954 மார்ச் 25–இல் காந்திமதிநாதன் பிள்ளை–ஜானகி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவரது இயற்பெயர் பகவதி லட்சுமணன்.

## பொருளாதாரப் பாதையைத் தீர்மானிக்க இனி ஆண்டுதோறும் ஆய்வறிக்கை வெளியாகும்

- மாநிலத்தின் பொருளாதாரப் பாதையை தீர்மானிக்கும் வகையில், இனி ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக பொருளாதாரப் ஆய்வறிக்கை வெளியிடப்படும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளாக இந்த ஆய்வறிக்கை வெளியிடப்படவில்லை.

## "ஒரு நாள் சிறைக் கைதி" திட்டம் கர்நாடகத்தில் விரைவில் அறிமுகம்

- சிறை வாழ்வு குறித்து அறிந்துகொள்ள விரும்புவர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தை அளிக்கும் வகையில், ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாகத் தங்கும் வகையிலான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த கர்நாடக மாநில சிறைத் துறை அதிகாரிகள் முடிவுசெய்துள்ளனர்.
- கர்நாடக மாநிலம் பெலகாவியில் உள்ள ஹிண்டல்கா மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் இந்த திட்டத்ததை அறிமுகம் செய்ய உள்ளனர். இந்த திட்டத்துக்கு ரூ. 500 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறை வாழ்வை பொதுக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த திட்டம் அறிமுகப்படுத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இதுகுறித்து ஹிண்டல்கா மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் கூறியதாவது
- சிறை வாழ்வு பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்காக ரூ.500 கட்டணம் செலுத்தி ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாகத் தங்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த

திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

**நுல் வெளியீடு**

- ஆழ்வார்பேட்டையில் உள்ள சி.பி.அய்யர் அறக்கட்டளையின் சார்பில் சென்னையின் புராதன கட்டடக் கலை பதிவுகள் குறித்த நுலை வெளியிட்ட ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உடன் (இடமிருந்து) சென்னை வெலிங்டன் கார்ப்பரேட் அறக்கட்டளை இயக்குநர் வி. ஸ்ரீராம், சி.பி. ராமசாமி அய்யர் அறக்கட்டளை தலைவர் நந்திதா கிருஷ்ணா, ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, நுலாசிரியர்களும் கட்டடக் கலைஞர்களுமான சுஜாதா சங்கர், மனோகர் தேவதாஸ், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன்.

## ஆரோக்கிய தாரா.2.0

- ஆயுஷ்மான் பாரத் – பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் 2 கோடிக்கும் அதிகமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டதன் நிறைவாக ஆரோக்கிய தாரா 2.0 என்ற நிகழ்வை மத்திய குடும்பநலம் மற்றும் சுகாதார அமைச்சகம் நடத்தியுள்ளது.
- சுகாதார அமைச்சர் மண்டாவியா இந்த விழாவிற்கு தலைமை தாங்கினார்.

**பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா.**

- துவக்கம் – செப்டம்பர் 2018
- இதுவரை 25000 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான சிகிச்சைகள் இதுவரை அளிக்கப்பட்டுள்ளது.

## JAZBAA–E–TIRNGA மாரத்தான்

- இந்திய இராணுவ மேஜர் ராஜீவ்புரி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் JAZBAA–E–TIRANGA – என்ற மரத்தான் போட்டியை துவங்கி வைத்தார்.

## ஷாங்காய் கூட்டமைவின் கலாச்சார கூட்டம்

- ஷாங்காய் கூட்டமைவு ஒத்துழைப்பு நாடுகளின் கலாச்சார அமைச்சர்கள் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் கலாச்சார இணையமைச்சர் அர்ஜீன் ராம் மேச்வால் கலந்துகொண்டார் இந்த கூட்டம் தஜகிஸ்தான் நாட்டினால் நடத்தப்படுகிறது.

## 100 நாள்கள் சாதனை தமிழக சிறப்பு வெளியீடு

- அரசின் நூறு நாள்கள் சாதனையை ஒட்டி தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதனை தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு பெற்றுக் கொண்டார்.
- "தலைநிமிரும் தமிழகம் – நுற்றாண்டின் திசையில் நுறு நாள்கள்" என்ற தலைப்பில் புத்தகம் வெளியிடப்பட்டது.
- இந்த மலரில் நுற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், மாவட்டங்களுக்கு முதல்வர் நேரடியாகச் சென்று மேற்கொண்ட களப்பணிகள், ஆய்வுப் பணிகள், துறை வாரியான ஆய்வுகள், முக்கிய நிகழ்வுகளில் உரைகளின் தொகுப்புகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

## ஸ்மார்ட் சுகாதார அட்டைகள்

- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஒடிசா மாநிலம் ஸ்மார்ட் சுகாதார அட்டைகளை வழங்க ஏற்பாடுகளை செய்துள்ளது.
- மாநிலத்தில் உள்ள 96 லட்சம் குடும்பங்களுக்கு ஸ்மார்ட் சுகாதார அட்டைகள் வழங்கப்பட உள்ளது.
- சுவஸ்திய கல்யான் யோஜனா திட்டத்தின் கீழ் அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

## "ஆபரேஷன் குக்ரி"

- மேஜர் ஜெனரல் ராஜ்பால் புனியா ஆபரேஷன் குக்ரி என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைதிப் படையின் வெற்றிகள் குறித்து விவரிக்கப்படும் இந்த புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

## தாம்பரம், காஞ்சிபுரம் உள்பட 6 புதிய மாநகராட்சிகள்

- தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒருங்கிணைத்து மேலும் 6 புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என்று பேரவை யில் நகராட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவித்தார்.
- தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளையும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என அறிவித்தார்.
- நகராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் கே.என். நேரு வெளியிட்ட அறிவிப்புகள்: 2011–ஆம் ஆண்டு

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புற மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021-ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளது எனக் கருதப்படுகிறது. அதனால், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புறத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புறங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

- தாம்பரம்: தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும். மேலும், காஞ்சிபுரம், கும்பகோணம், சுரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும்.
- 4 மாநகராட்சிகள் விரிவாக்கம்: திருச்சி, நாகர்கோவில், தஞ்சாவூர், ஒசூர் ஆகிய மாநகராட்சிகளும், செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, மன்னார்குடி ஆகிய நகராட்சிகளும் அவற்றைச் சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளையும், ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படும்.
- புதிய நகராட்சிகள்: பள்ளப்பட்டி திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் – கூடுவாஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோளிங்கர், இடங்கனசாலை, தாரமங்கலம், திருமுருகன்பூண்டி கூடலூர், காரமடை கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டினம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி, லால்குடி ஆகிய பேரூராட்சிகள் அதன் அருகே வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து நகராட்சிகளாக மாற்றப்படும்.
- மேலும், புஞ்சை புகளூர் மற்றும் புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகளையும் இணைத்து புகளூர் நகராட்சியாக அமைக்கப்படும்.

## சத்பவன் திவாஸ் 20 ஆகஸ்ட்

- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாள் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20ல் கொண்டாடப்படுகிறது.

## "நகர்ப்புற உள்ளாட்சி சேவைகளை இல்லங்களிலிருந்தே பெறலாம்"

- இதன் விவரம்: நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகளை இல்லங்களில் இருந்தே பெறும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளை மின்னணு ஆளுகை மூலம் கையாள்வதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும், தரமாகவும் சேவைகளைச் செய்வதற்கு 29 மின்னணு சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. அனைத்து வகையான நகர்ப்புற சேவைகளை குடிமக்கள் தங்களது இல்லங்களில் இருந்தே பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் 'நமது சேவையில் நகராட்சி', 'மக்கள் சேவையில் மாநகராட்சி' என்ற திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம், நகர்ப்புற உள்ளாட்சி ஆளுகையில் மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தி வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் சிறப்பாகச் செயல்படவும் வழிவகுக்கும்.

## ரூ.1,000 கோடியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

- நடப்பாண்டில் ரூ.1,000 கோடியில் அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளிலும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நகராட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் நகராட்சி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் கே.என்.நேருவெளியிட்ட அறிவிப்புகள்:
- அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நவீன நூலகங்கள் போன்ற அடிப்படைக்கட்டமைப்பு வசதிகளுடன் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

## மகப்பேறு விடுப்பை 12 மாதங்களாக நீட்டித்து அரசாணை

- மகப்பேறு விடுப்பை 12 மாதங்களாக நீட்டித்து, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உத்தரவு பிறப்பித்துள்ளார்.
- அதன் விவரம்: கடந்த 13-ஆம் தேதி நிதிநிலை அறிக்கை தாக்கலின்போது, அரசுப் பெண்

ஊழியர்களுக்குமகப்பேறுவிடுப்பை9மாதங்களில் 12 மாதங்களாக நீட்டித்து நிதித்துறை அமைச்சர் அறிவிப்பை வெளியிட்டார். இதை கவனமாகப் பரிசீலித்த அரசு, இரண்டு குழந்தைகளுக்கு உள்பட்டுள்ள அரசுப் பெண் ஊழியர்கள் மகப்பேறு விடுப்புக்கு விண்ணப்பிக்கும் நிலையில், முழு ஊதியத்துடன் 12 மாதங்களாக மகப்பேறு விடுப்பை நீட்டித்து உத்தரவிடுகிறது.

- இந்த உத்தரவு கடந்த ஜூலை 1–ஆம் தேதியில் இருந்து, மகப்பேறு விடுப்புக்கு விண்ணப்பித்துள்ளோருக்கும், அன்றிலிருந்து மகப்பேறு விடுப்பில் இருப்போருக்கும் பொருந்தும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## பொன்மலையில் வடிவமைக்கப்பட்டு உதகை சென்ற நீராவி என்ஜின்

- திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் முதன் முறையாக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக நீராவி என்ஜினை தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஜான் தாமஸ் உதகைக்கு வைத்தார்.
- திருச்சி ரயில்வே பொன்மலை பணிமனை வளாகத்தில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டது.

## பொறியியல் உள்ளிட்ட தொழிற் கல்விப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 75% உள்ஒதுக்கீடு

- பொறியியல், சட்டம் உள்ளிட்ட தொழிற்கல்வி படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் உள்ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதா குரல் வாக்கெடுப்பு மூலமாக நிறைவேறியது.
- முன்னதாக, இந்த மசோதாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார். மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:
- பல்கலைக்கழகங்கள், சுயநிதிக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளில் பொறியியல், வேளாண்மை, மீன்வளம், கால்நடை மருத்துவம், சட்டப்படிப்புகள் முதலியவற்றில் அரசுப் பள்ளிகள் மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையில் சேர்க்கை பெறுவதற்கான காரணங்களை மதிப்பிட ஓய்வு பெற்ற நீதிபதி த.முருகேசன் தலைமையின் கீழ் மூத்த அலுவலர்கள் அடங்கிய ஆணையம் அமைக்கப்பட்டது.
- ஆணையப் பரிந்துரைகள்: நீதிபதி தலைமையிலான ஆணையமானது, தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. அதில், அரசுப்பள்ளி மாணவர்கள் சாதகமற்ற நிலையில் இருப்பதால், அவர்கள் பல்வேறு தொழிற்கல்வி படிப்புகளில் சேருவதற்கு முன்னுரிமை நடத்தும் முறையானது தேவைப்படுகிறது. தனியார் பள்ளிகளுடன் ஒப்பிடும் போது, அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர் கல்வியில் முன்னுரிமையுடன் அளிக்கும் முறைக்காக அதிக கவனம் தேவைப்படுகிறது.
- இதைக் கருத்தில் கொண்டு தொழிற்கல்விப்படிப்புகளில் 10 சதவீதத்துக்குக் குறையாத இடங்களை ஒதுக்கீடு செய்யலாம் என ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.
- ஏற்றத் தாழ்வுகள்: அரசுப் பள்ளி மாணவர்கள், தனியார் பள்ளி மாணவர்களுக்கு இடையே உண்மையான ஏற்றத் தாழ்வுகள் இருப்பது ஆணையத்தின் அறிக்கையில் இருந்து தெளிவாகிறது. ஆணையத்தின் பரிந்துரையை கவனமாக ஆய்வு செய்த அரசு, மாநில அரசுப்பள்ளி மாணவர்களுக்கு தொழிற்ல்வி படிப்புகளில் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது.
- 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை: இந்த உள் ஒதுக்கீட்டு சலுகையைப் பெற மாணவர்கள் ஆறாம் வகுப்பு முதல் பிளஸ்2 வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றிருக்க வேண்டும். இதன்மூலம், அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு இடையே உண்மையான சமத்துவத்தை கொண்டு வருவதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும் என மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரேலா மருத்துவமனைக்கு தங்கமுத்திரை தரச்சான்று

- குரோம்பேட்டை ரேலா மருத்துவமனைக்கு அமெரிக்காவின் சர்வதேச கூட்டு ஆணையம் உலகத் தரமிக்க மருத்துவச் சேவைக்கான தங்க முத்திரைச் தரச்சான்று வழங்கி உள்ளது.

## ரூ.2 கோடியில் முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

- தலைசிறந்த நூல்களை தமிழ் மொழியில் கொண்டு வருவதற்காக ரூ.2 கோடியில் முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார்.

- ஜானகிராமன் சிறுகதைகள் கன்னடத்தில் மொழிபெயர்ப்பு: 'மாபெரும் தமிழ்க் கனவு' நூல் ஆங்கிலத்திலும், பொன்னியின் செல்வன், வைக்கம் போராட்டம் ஆகிய நூல்கள் மலையாளத்திலும், திருக்குறளுக்கான முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உரை தெலுங்கிலும், தி.ஜானகிராமனின் சிறுகதைகள் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்படும்.

## குறு, சிறு தொழில்களை மேம்படுத்த ரூ.524 கோடி நிதியுதவி முதல்வரிடம் கடிதம் அளித்தது சிறு தொழில் மேம்பாட்டு வங்கி

- குறு, சிறு தொழில்களை மேம்படுத்த ரூ.524 கோடிநிதியுதவிக்கான ஒப்புதல் கடிதம் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளிக்கப்பட்டது. இதனை சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி வழங்கியது.
- சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியின் தொழில் தொகுப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பகுதிகளை மேம்படுத்த ரூ.524 கோடி நிதி உதவிக்கான கொள்கை அளவிலான ஒப்புதல் கடிதம் முதல்வரிடம் அளிக்கப்பட்டது. இதனை மேம்பாட்டு வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சிவசுப்பிரமணியன் ராமன் வழங்கினார்.
- முதல்கட்டமாக வழங்கப்படும் இந்த நிதியைத் தொடர்ந்து, திட்டங்கள் நிறைவேற்றியவுடன் கூடுதல் நிதி அளிக்கப்படும் என அவர் தெரிவித்தார். தொழில் தொகுப்பு மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றிருப்பதாக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய வாகனங்களுக்கு 'பம்பர் டூ பம்பர்' முறை காப்பீடு கட்டாயம் செப்.1 முதல் அமல்படுத்த உயர்நீதிமன்றம் உத்தரவு

- புதிய வாகனங்களுக்கு பம்பர் டூ பம்பர்' முறையில் 5 ஆண்டுகளுக்கு காப்பீடு செய்யும் முறையை செப்டம்பர் 1–ஆம் தேதியில் இருந்து கட்டாயமாக அமல்படுத்த வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ஒகேனக்கல்லில் கடந்த 2016 ஆகஸ்ட் மாதம் நடந்த சாலை விபத்தில் சடையப்பன் என்பவர் மரணமடைந்தார். இது தொடர்பான வழக்கை விசாரித்த ஈரோடு மோட்டார் வாகன விபத்து வழக்குகளை விசாரிக்கும் தீர்ப்பாயம், சடையப்பனின் குடும்பத்துக்கு ரூ.14 லட்சத்து 65 ஆயிரம் இழப்பீடாக வழங்க காப்பீட்டு நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில், காப்பீட்டு நிறுவனம் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கை நீதிபதி எஸ்.வைத்தியநாதன் விசாரித்தார்.
- அப்போது காப்பீட்டு நிறுவனத் தரப்பில், 'விபத்துக்குள் ளான காருக்கு 3–ஆம் நபர் காப்பீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ரூ.1 லட்சம் மட்டுமே இழப்பீடாக வழங்க முடியும். மேலும், விபத்து நடக்கும்போது, காரை சடையப்பன் ஓட்டவில்லை' என்று வாதிடப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்மனுதாரர்கள் சார்பில் வாதிடப்பட்டது.
- இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி எஸ்.வைத்தியநாதன் பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கைப் பொருத்தவரை காரில் பயணம் செய்வோருக்கு காப்பீட்டுத் தொகையாக ஒரு பைசா கூட செலுத்தவில்லை.

## அதிக கண்காணிப்பு கேமரா உள்ள நகரங்கள் உலகளவில் மூன்றாமிடத்தை பிடித்த சென்னை

- உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட நகரங்களில், சென்னை மூன்றாமிடத்தை பிடித்துள்ளது.
- இதில் தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் பங்களிப்புடன் நகர் முழுவதும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகின்றன. 'மூன்றாவது கண்' என்ற பெயரில் பொதுமக்களிடம் கண்காணிப்பு கேமரா பொருத்தும்படி காவல்துறை தீவிர விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டது. இதன் காரணமாக 50 மீட்டருக்கு ஒரு கேமரா உள்ளது. இதன் அடுத்த இலக்காக 25 மீட்டருக்கு ஒரு கேமரா பொருத்தும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.
- நான்கு ஆண்டுகளாக காவல்துறை எடுத்து வரும் நடவடிக்கையின் காரணமாக, சென்னையில் இப்போது2.60லட்சம்கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. நகர் முழுவதும் கண்காணிப்பு கேமராக்களின் பார்வை பரந்து, விரிந்து இருப்பதினால் தங்கச் சங்கிலி பறிப்பு 48 சதவீதம், கொள்ளை 24 சதவீதம், அடிதடி 11 சதவீதம், குறைந்துள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல செல்லிடப்பேசி பறிப்பும் பெருமளவு குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

- அதேபோல காவல்துறையின் பணிச்சுமையையும் பெருமளவில் கண்காணிப்பு கேமரா குறைத்துள்ளது. முக்கியமாக 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதற்கு கண்காணிப்பு கேமராவே உதவுவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.
- மூன்றாவது நகரம்: இந்நிலையில் போர்ஃபஸ் இந்தியா நிறுவனம் உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட 20 நகரங்கள் குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் தில்லி, லண்டன், சென்னை ஆகியவை முதல் 3 இடங்களை பிடித்துள்ளன.
- மேலும் இப்பட்டியலில் இந்தியாவில் தில்லி, சென்னை, மும்பை ஆகிய 3 நகரங்கள் மட்டுமே இடம் பிடித்துள்ளன. உலகளவில் அதிகளவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட நகரங்களில் முதலிடத்தை பிடித்திருக்கும் தில்லியில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,826 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.
- இரண்டாமிடத்தில் இருக்கும் லண்டனில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,138 கண்காணிப்பு கேமராக்களும், மூன்றாமிடத்தை பிடித்திருக்கும் சென்னையில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 609 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 'முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3,200 கோடியில் சாலைகள் அகலப்படுத்தப்படும்

- முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3,200 கோடி மதிப்பீட்டில் 850 கி.மீ. சாலைகள் அகலப்படுத்தப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

## அகதிகள் முகாமல்ல; இனி மறுவாழ்வு முகாம்

- இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வுமுகாம்கள் என அழைக்கப்பட உத்தரவிடப்பட்டுள்ளதாக சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.
- தமிழர்கள் அகதிகளாக ஆக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. அகதிகள் முகாம் இனி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும். ஏனென்றால் அவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல. நாம் அவர்களுக்குத் துணையாக இருக்கிறோம்.

## ரயில் பயணிகள் குறைகளை தெரிவிக்க "ரயில் மாதத்" செயலி அறிமுகம்

- ரயில் பயணிகள் குறைகளைத் தெரிவிக்க 'ரயில் மதாத்' என்ற செல்லிடப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இதுகுறித்து தென்னக ரயில்வேயின் மதுரை கோட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ரயில் பயணிகளின் புகார்கள் மற்றும் ஆலோசனைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க 'ரயில் மதாத்' என்ற செல்லிடப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தங்களது புகார்களை செல்லிடப்பேசி, இணையதளம், சமூக வலைதளம் ஆகியவற்றின் வாயிலாக பதிவு செய்கிறார்கள்.

## சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.10,000 கடன்

- சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.10 ஆயிரம் கடன் வழங்கும் திட்டத்தில் விண்ணப்பித்தோருக்கு, கடன் தொகையை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை மாநகராட்சி ஆணையர் ககன் தீப் சிங் பேடி அறிவுறுத்தினார்.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் உதவி வழங்குவது குறித்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வங்கி அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.
- கரோனா பொதுமுடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் திருப்பி செலுத்தக்கூடிய வகையில் பணி மூலதன கடனாக ரூ.10,000 வரை வழங்கும் திட்டம் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் பாரதப் பிரதமரின் ஆத்ம நிர்பார் நிதி (சுயசார்பு) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இக்கடன் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு தவணை முறையில் திருப்பிச் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## கொளத்தூரில் ரூ.50 கோடியில் வண்ணமீன் வர்த்தக மையம்

- கொளத்தூரில் ரூ.50 கோடியில் வண்ண மீன் வர்த்தக மையம் சர்வதேச தரத்தில் அமைக்கப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் மீன்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிவிப்புகள்:
- சென்னை கொளத்தூர் பகுதியில் வண்ண மீன்கள் உற்பத்தி விற்பனை மற்றும் ஏற்றுமதி பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் தொழிலை தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள சுமார் 2,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வண்ண மீன் உற்பத்தியினைப் பெருக்கிடவும் வண்ண மீன்களை எளிதாகச் சந்தைப்படுத்திடவும் மற்றும் ஏற்றுமதி மூலம் தமிழகத்தில் வண்ண மீன் வர்த்தகத்தினை அதிகரித்திடவும் ரூ.50 கோடி செலவில் சென்னை கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் சர்வதேச தரத்தில் நிறுவப்படும்.

## 38,000 பெண்களுக்கு தலா 5 ஆடுகள் வழங்கப்படும்

- ஏழை பெண்களைத் தொழில்முனைவோர் ஆக்கும் வகையில் 38,800 பெண்களுக்கு தலா 5 ஆடுகள் ரூ.76கோடி ஒதுக்கீட்டில் வழங்கப்படும் என்று மீன்வளம் மற்றும் கால்நடை துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.
- சட்டப்பேரவையில் கால்நடை துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிவிப்புகள்: கால்நடைகளின் நலன்களைப் பேணுவதற்காகவும், தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும் ரூ7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்படும்.
- இந்த முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்கச் சிகிச்சைகள், மகப்பேறியல் சிகிச்சைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- தொலைதூர கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு முதல் உதவி, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் ஆகிய சேவைகளை வழங்க ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் 50 புதிய கால்நடை கிளைநிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.
- செல்லப் பிராணிகளுக்கு ஆராய்ச்சி மையம்: செல்லப் பிராணிகளுக்கான பன்னோக்கு கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சென்னை நந்தனத்தில் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.
- இம்மையத்தில் செல்லப்பிராணிகள் மருத்துவத்தில் உயர் ஆய்வு, நவீன நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளைக் கையாளுவதுடன் சர்வதேச தரத்துக்கு ஈடான சிகிச்சையியல் மருத்துவக் கல்வியினை அளித்து மருத்துவ நிபுணர்களுக்குத் தொடர் கல்வியினை அளிக்கவும் வழிவகை செய்யப்படும்.
- திருச்சி கருப்பு செம்மறி ஆடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும் மரபியல் திறனை உயர்த்தவும் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் தருமபுரியில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.
- மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாட்டின் சிறுவிடை கோழியின வளமையம் ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழகத்தின் பட்டணம் செம்மறி ஆட்டின வளமையம் ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.
- திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் விலங்கு வழி பரவும் நோய் அறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத்தளம் நிறுவப்படும் என்றார்.

## பால்கோவா உற்பத்தி நிலையம்: சேலம்

- சர்க்கரை கலக்காத பால்கோவா உற்பத்தி நிலையம் சேலத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அமைக்கப்பட உள்ளதாக பால்வளத்தறை அமைச்சர் நாசர் தெரிவித்துள்ளார். தஞ்சாவூர் புதுக்கோட்டையில் கால்நடை தீவன உற்பத்தி மையம் அமைக்கப்பட உள்ளது.

## சக்ஷம், பிரகதி திட்டங்களின் கீழ் மாணவிகளுக்கு உதவித்தொகை: ஏஜசிடிஇ அறிவுறுத்தல்

- மத்திய அரசின் சார்பில் சக்ஷம், பிரகதி திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கு தகுதியான மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என ஏஜசிடிஇ அறிவுறுத்தியுள்ளது.
- இது தொடர்பாக அகில இந்திய தொழில்நுட்பக்கல்வி குழுமத்தின் (ஏஜசிடிஇ) உறுப்பினர் செயலர் ராஜீவ் குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: பொறியியல் படிப்புகளில் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு ஏஜசிடிஇ சார்பில் பிரகதி திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

## அதிநவீன மூன்றடுக்கு ஏசி பெட்டிகள் தயாரிக்கும் பணியில் ஐ.சி. எஃப்.

- சென்னை ஐ.சி.எஃப்.பில் (ரயில் பெட்டி உற்பத்தி தொழிற்சாலை) முதன்முறையாக அதிகரிக்கப்பட்ட இருக்கை, படுக்கை வசதி கொண்ட அதிநவீன மூன்றடுக்கு குளிர் சாதன வசதி ரயில் பெட்டிகள் தயாரிக்கும் பணி தொடங்கியுள்ளது. வரும் மார்ச்சுக்குள் 344 ரயில் பெட்டிகளை தயாரிக்க ஐ.சி.எஃப். திட்டமிட்டுள்ளது.

## ரூ.317 கோடியில் இலங்கைத் தமிழ் அகதிகள் மேம்பாடு

- முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக ரூ.317 கோடியில் பத்து புதிய நலத் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ் அவர் புதிய அறிவிப்புகளைச் செய்தார்.